IATA
SKY WINGS LTD
TRAVEL & TOURS
"WHERE THE SUN NEVER SETS"
Cheapest Worldwide Fares with the Best Service
We are the authorised main agents for
Sri Lankan, Jet Airways, Qatar, Kuwait, Oman & many more
We accept all major credit cards
Reservation Please call: 02086729111
COLOMBO £170+ Taxes
Head Office:
119,Tooting High street
London, SW17 OSY
bala@skywings.co.uk Mob:07850876921

BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER
FREE
PAPER - 09 ♦ ISSUE - 176 ♦ FRIDAY 17 AUGUST 2012

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லயைா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
• தனிநபர் அனர்த்த நஸ்ட ஈடு (Neck, Back & Shoulder Pain)
NO WIN NO FEE
• வாகனப் பிரதியீடு = வாடகை வாகனம் (Terms & Conditions Apply)
• புனர் நிர்மாணம் அல்லது வாகன இழப்புக்களுக்கான பூரண நஸ்ட ஈட்டுத்தொகை முதலில்
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM



## சின்னவள் கையில் சீறும் புலி
## என்ன தான் செய்வாய் எமை இனி ?

கடன் தொல்லையா?
வங்கிகடன், கடன் அட்டை மற்றும் ஓடீ பிரச்சினையா? உங்களால் மாதாந்த கட்டு தொகை கட்டமுடியாதுள்ளதா? எங்களின் (யூரோடெப்டின்) அனுபவம் உங்களுக்கு உதவும். மேலும் கடன் ஏதும் வாங்காமல் உங்களால் செலுத்தக்கூடிய ஒரு சிறு தொகையை மாதாந்த கட்டணமாக ஒழுங்கு செய்து தரப்படும்.
DMP, IVAs, PPI and Bankruptcy Assistance
EURODEBT 0800 121 8193 • 07949455366
Failure to adhere to the terms of a Debt Solution can result in further problems. Most Dept Solutions will affect your credit rating. through it is our experience that thouse who approach us already have an impaired credit record. By entering into a managed Dept solution you will be showing your creditors that you are taking a responsible attitude to resolving your financial problems and this could help you in the future. Terry Christofis operates a EuroDept franchise under licence from Pentagon (UK) Ltd. I CCL: 574469. Term & Conditions available at www.EuroDept.com/chistofis.

BRITISH AIRWAYS Preferred Partner
Flyplaces
Worldwide Travel & Tours
IATA
PRICE MATCH GUARANTEE
VISA SERVICES
இலங்கை, இந்தியா மேலும் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்றுவர விசா ஒழுங்குகள் செய்து தரப்படும்
COLOMBO from £169 +taxes
CHENNAI from £169 +taxes
TRICHY from £249 +taxes
TORONTO from £159 +taxes
SINGAPORE from £229 +taxes
020 8866 3311
Web: www.flyplaces.co.uk
Email: info@flyplaces.co.uk
Low season fares, exclude taxes, subject to availability & conditions apply

குழந்தைப் பாக்கியம் கிடைக்காதோர்
வாழ்க்கைக்கு ஒளியூட்டுங்கள்!
நீங்கள் 35 வயதுக்குள் இருந்தால் கருமுட்டை தானம் செய்து அதற்கீடாக '£750' ஐ அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளுங்கள்
குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HARLEY STREET FERTILITY CLINIC
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
43 Devonshire Street, London, W1G 7AL
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

FM CARPETS
விலையில், தரத்தில், சேவையில் என்றும் முன்னணியில்
SALE NOW ON
Opening Offer
20% OFF
வீட்டிற்கும் தொழில் நிலையங்களுக்கும் ஏற்றவை
HUGESTOCK VARIETY OF COLOURS FAST FITING
இலவச மதிப்பீடு
இலவச ஃபிட்டிங்
நட்புடனான சேவை
020 8252 6433 / 07946 566 885
120 Aldborough Road South, Seven Kings, ILLford, 1G3 8EZ
www.fmcarpets.com

UK Visa from INDIA
Our office in Chennai can process:
• Domestic Worker Visas • Visit Visas
• Dependant Visas • Student Visas
Contact UK Immigration specialists
Poul & Minnaa
044 4261 3698
New no 88 old no 150, 1st floor, Dharma Towers,
Nelson Manickam road, Choolaimedu Chennai 94

Are you an overstayer in the UK or a failed asylum seeker?
If so you may be eligible to apply for a Visa under the Human rights Act.
Contact Immigration law experts
Paul John & Co Solicitors
020 8215 1205
• Free initial advice session (if you bring this advertisement)
• Legal Aid available for eligible clients
We process all UK Visa applications
Paul John & Co SOLICITORS
115a The Grove, Stratford, London, E15 1EN
www.pauljohnandco.co.uk
We are authorized and regulated by the SRA

air wings
AIR WINGS
TOURS & TRAVEL
Deals of the Week
SRILANKA 400 + TAX
INDIA 380 + TAX
AUSTRALIA 400+TAX
CANADA 300+ TAX
USA 290+TAX
MALAYSIA 350+TAX
SINGAPORE 340+TAX
உங்களின் தொடர்புகளை தமிழிலும் மேற்கொள்ளலாம்
247, Lewisham Way London SE4 1X8
Phone: 020 8694 2914/ 07813 969 192
admin@mill2000.co.uk

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

## Prime Training College முதன்மை குடியுரிமை பெறும் பரீட்சைகள்



**Our services:**

- ESOL with citizenship
- Point Base Test
- Spouse Visa Test
- Multilingual Staff

You Pay Only Once, We Train You until You Pass, Certificate with 20 Days

**C1, B1 & B2 Test**

பிரித்தானியா பற்றிய விடயங்களை ESOL பயிற்சி மூலமும் குடியுரிமை வகுப்புக்கள் மூலமும் அதியுச்ச பயிற்சி வழங்குகின்றோம்.

சனி மற்றும் ஞாயிறுகளிலும் வகுப்புக்கள் உண்டு.

**நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம்- மேலதிக கட்டணம் இல்லை**

**Tel: 020 8150 9953 | Mob: 075 3893 3261**

**Head Office**
14 Lombard Business Park, 2 Purley Way,
Croydon CR0 3JP.
www.primetrainingcollege.co.uk

உங்கள் பரீட்சைக்கு தயார் படுத்தும் வகுப்புகளுக்கு
**£ 190 .00 மட்டுமே**
(பரீட்சைக் கட்டணம் உட்பட)
இங்கே சனி 10.00 மணிக்கு
ESOL வகுப்புக்கள் உண்டு



# SHOP FOR SALE

## Convienence store
## (off licence, News agent & Grocery)

ESSEX பகுதியில்

CURRENTLY RUNNING

# QUICK SALE

தொடர்புக்கு 07529800800



பிரியமானவர்களே...
**“உங்கள் துக்கம் சந்தோசமாய் மாறும்”**

இந்த தேசத்தில் உன் உள்ளம் எதை குறித்து கலங்குகிறது?

- கணவனின் குடி பழக்கத்தினால் நோகடிக்கப்படுகிறாயா?
- குழந்தையின் உடல் உள நிலையை குறித்து கலங்குகிறாயா?
- மரணத்திற்கேதுவான நோயா?
- கடன் தொல்லையா?
- பில்லி சூனியமா?
- பிள்ளைகளை குறித்து பாரமா?
- மன அழுத்தமா?
- கணவன் மனைவிக்கிடையில் பிரச்சனையா?
- திருமணமாகி குழந்தைகள் இல்லை என்று கலங்குகிறாயா?

*அருள்நாதர் இயேசு சொல்கிறார்:*
*“வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே என்னிடத்தில் (இயேசு) எல்லோரும் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.”*
*வாருங்கள் ஜெபிப்போம் இயேசுவின் நாமத்தில் ஜெயம் பெறுவோம்.*

**ஞாயிறு ஆராதனை நடை பெறும் இடம்:**
19-21 Bellingham Estate, Bellingham,
Catford, Lewisham. SE6 3BX
**நேரம் 2. 30 pm**
[Near **Bellingham station**]
[Bus Stop **Catford Bus Garage** ]
[**Bus route no**: 47,54,136, 171 ,199, 208, 320]

தொடர்புகளுக்கு: **நல்ல சமாரியன் தேவ சபை**
**Bro. Edmond**
**Mob: 07877 977 086 Tel: 020 8691 2705**



# Global fresh fish



**Billings gate market (Main branch)**
**Global fresh fish (Branch office in south Harrow)**

அனைத்து வகையான தரமான கடலுணவு வகைகளை மலிவாக நீங்கள் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள். உங்களின் எண்ணம் போல் வெட்டி சுத்தம் செய்தும் தரப்படும்.

Contact : Seenu

230 B, NorthHolt Road, South Harrow, Middlesex , HA2 8DU

Contact Tel : 020 8423 9938 ,07574 094 924



# UK COOL
AND SHOP FITTING

168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK
MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk

UK COOL & SHOP FITTING LTD

**REFRIGERATION**
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

**SHOP FITTING**
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

**BUILDING WORK**
Roofing
Extension

**MOVING & DEVILERY**

7 Days 24 HRS services & Repair

URGENT REPAIR? CALL:07951854057

1 YEAR PARTS & LABOUR WARRANTY



# பெத்தானியா தேவாலயம் உங்களை அன்புடன் வரவேற்கிறது

ஞாயிறுதோறும் தமிழ், ஆங்கிலம், சிங்களம், பஞ்சாபி, உருது போர்த்துகீஸ் என பல்வேறு மொழிகளில் ஆராதனைகள் நடைபெறுகிறது

*Southall - Hayes - Sudbury - Kenton - Slough - Norwich - Old Southall - Acton - Hanwell*
*Greenford - Northolt - Hounslow - Rayners Lane - North Harrow - Harrow Weald - South Harrow*
*Wembley - Radlett - Uxbridge - Langley - Basingstoke - Frimley - Reading - Egham*

BfM BETHANY CHURCHES
*The family U need*

**Bethany House**
12, Park Avenue, Southall. UB1 3AJ
P.O. Box 294, Southall, UB2 5EE
Tel: 020 8571 2156
E-mail: info@bethanychurches.org
Web: www.bethanychurches.org





# இயேசு அழைக்கிறார்

பாவக்கட்டா? சாப தோஷமா?
கவலையா? கண்ணீரா? வியாதியா?

உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் – யோவான் 16:20
தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை – லூக்கா 1:37

இதோ ! சீக்கிரமாய் வரப்போகின்ற இறைவன் இயேசுவை ஆராதிக்க வாருங்கள்.

துதி ஆராதனை ஞாயிறு காலை **10:00** | தொடர்ந்து சிறுவர் பாடசாலையும் நடைபெறும்

இடம்: GLORY CHURCH OF GOD ~ U.K.
1,George Lane, Lewisham, London SE13 6HQ,
(Near Lewisham Hospital and Behind the Ealam Shop)

Bus: 47, 54, 75, 136, 185, 208
Station: Catford, Lewisham,
DLR: Lewisham

Contact: **Pr.Robert Bhaskharan**
Tel:020 8695 1510 | 077 3761 2352
Email: glorychurchofgod@yahoo.co.uk, robert_bhaskharan@yahoo.co.uk

# பூவரசு




## காணாமல் போன வரிகள்...

சிந்திக்க வைக்கும் சித்திரங்களை *ஒரு பேப்பர்* முகப்பில் பிரசுரிப்பதோடு நாலு வரி கவிதை வடிவில் அந்தக் காட்சியை விபரிக்கும் அலங்காரத்தை கண்டு களிக்கும் இந்த வாசகனை இம்முறை ஏமாற்றிவிட்டது. மன்னிக்க முடியாதது. சில வேளை இந்தக் காட்சிக்குரிய வரிகளை எம்மை சிந்திக்கும் படிவிட்டுவிட்ட குசும்புத்தனமோ தெரியவில்லை. என்ன தான் நடக்கிறது.

*உமா மகாலிங்கம்*

## சிவந்தனின் போராட்டம்

மனித நேயன் கோபி சிவந்தனின் உண்ணாவிரதப் போராட்டம் பல உன்மைகள வெளிக்கொண்டு வந்துள்ளது. முதலாவதாக இந்த போராட்டத்தினை மூடி மறைப்பதற்கு பல எமது ஊடகங்கள் முயற்சி செய்தன. சில இதனை ஒரு செய்தியாகத் தனும் போடவில்லை. ஆனால் பல வெளிநாட்டு ஊடகங்கள் அவரை நேரடியாக வந்து பேட்டியே எடுத்துச் சென்றன.

இதைவிட எமக்காப் போராடுகின்றோம் என்று சொல்லிக்கொண்டு, பிரதமர், அமைச்சர்கள் என தமக்குத் தாமே பெயர் சூட்டிக்கொண்டு திரிபவர்களும் கூட இதைப் பற்றி பெரிதாக அலட்டிக்கொண்டதாகத் தெரியவில்லை. எல்லாவற்றிற்கும் அறிக்கைவிடும் இவர்கள் இதற்கு ஆதரவாக ஒரு அறிக்கை மட்டும் விட்டார்கள் என நினைக்கிறேன்.

*முரளி*

## டொக்ரர் இராஜசுந்தரம் நினைவுகள்

காந்திய இயக்கத்தின் தலைவராக விருந்த டொக்ரர் இராஜசுந்தரம் அவர்களது நினைவலைகளை வெளியிட்டமைக்காக *ஒரு பேப்பர்* க்கும் அக்கட்டுரையை எழுதிய பா.வை. ஜெயபாலன் அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். டொக்ரர் இராஜசுந்தரமும் அவரது மனைவி சாந்தி டொக்ரர் ஆகியோர் மக்கள் நலனில் எவ்வளவு அக்கறையாக இருந்தார்கள் என்பது வவுனியா வாசிகளுக்கு தெரியும். கட்டுரையில் ஒருதவறு இருக்கிறது. டேவிட் ஐயாவை ஒரு படவரைஞர் என குறிப்பிடப்பட்டிருந்தது. உண்மையில் அவர் ஒரு கட்டடக் கலைஞர். குறிப்பாக அவர நகர நிர்மாணத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்.

*திருக்குமரன்*

## தேசியக்கொடி

தேசியக் கொடி தேசியத் தலைவரால உருவாக்கப்பட்டதொன்றுஎன அண்மையில் *ஒரு பேப்பர்* மூலம் அறிகின்றேன். அப்படியென்றால் புலிக்கொடியும் தேசியக்கொடியும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களே. இந்தியாவும் அமெரிக்காவும் தொடர்ந்து அவருடைய அமைப்பை பயங்கரவாதப் பட்டியலில் நீடிக்கும்போது அதுவேறு கொடி இது வேறு கொடி எனறு எங்களைப பேய்க்காட்டலாம். ஆனால் மற்றைய தமிழ் மக்களையும் சர்வ தேச மக்களையும் பேய்க்காட்டலாமா? பத்தாதுக்கு நாடு கடந்த அரசாங்கமும் தமக்கென தமிழீழக கொடியை வைத்துக்கொணடு அந்தக் கொடியைத்தான் தூக்கிக் கொண்டு திரிகினம்.

சிறீலங்கா அரசாங்கம் இவர்கள் எல்லாம் பயங்கரவாதிகள்தான் என்று பிரச்சாரம் செய்ய இலகுவாக துணை போகின்றார்கள் என்று கவலைப் படால் என்ன செய்ய? அத்துடன் வெளிநாடுகளில் புலி அமைப்புகள் இருக்கும் வரை தாயகத்தில் இராணுவ அடக்குமுறை தொடர்ந்து இருக்கும் என்ற கொள்கையில் சிறிலங்கா அரசாஙகம் இருக்கிறது என்பதை அறிந்து கொண்டும் இந்தக்கொடி தேவை தானா எனறு யோசியுங்கோ? தாயக தமிழர்கள் நிம்மதியாக வாழ ஏதாவது உருப்படியாகச் செய்யுங்கோ என்று தாழ்மையாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

*த.செல்வரத்தினம்*

## கருணாநிதியின் டெசோ

ஒகஸ்ட் 5 என்று அறிவிக்கப்பட்ட மாநாடு 12ஆம் திகதிக்கு மாற்றப் பட்டது. கவின்கேர் நிறுவனத்தில் இயக்குனராக இருக்கும் கருணாநிதியின் மருமகன் ஒரே சமயத்தில் இலங்கையில் 5ஆம் திகதி நடந்த CII மாநாட்டிலும் டெசோ மாநாட்டிலும் கலந்து கொள்ள முடியாது என்பதால் டெசோ 12க்கு மாற்றி இருப்பார்களோ?

*கரிகரன்*

## சங்கிலி அறுப்புகள் இல்லாத திருவிழாக்களா?

இப்பவெல்லாம் ஊரிலை தேர், திருவிழா என்றால் எத்தினை சங்கிலி அறுக்கப்பட்டது, எத்தினை தாலி அறுக்கப்ட்டது என்ற செய்திகளும் கூடவே வரும். இந்த முறை லண்டனிலும் இது நடந்திருக்கு. ஈலிங் அம்மன் கோவில் தேரிலை ஒரு தாலிக் கொடியும், திருவிழாக்காலத்தில் இரண்டு சங்கிலிகளும் அறுக்கப்பட்டுள்ளனவாம். இந்தக் கொடுமையளை அம்மாளாச்சியும் பாத்துக் கொண்டு இருக்கிறாவோ?

*வளர்மதி*

## சைவ முன்னேற்ற சங்கத்தின் முன்மாதிரி...

சமயவேறுபாடுகளின்றி, யார் இலக்கியம் படைத்தாலும் தட்டிக் கொடுக்கிற சைவ முன்னேற்றச் சங்கத்தின் பணி பாராட்டுக்குரியது. ஆனால் சில பேர் இது ரீவியிலை மூஞ்சியை காட்டுகிறதுக்கு கொடுக்கிற லஞ்சம் என்று சொல்கிறார்கள். யார் என்ன சொன்னாலும் தொடர்ந்து எல்லா இலக்கிய வாதிகளுககும் மத பேதமின்றி உதவ வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

*வைரவநாதன்*

## உருத்திரகுமாரனுக்கு மிக்க நன்றி

அரசியல் விவகார அமைச்சராக இருந்து அந்தத்துறையை கவனிக்காமல் பல உள் குழப்பங்களுக்கு காரணமாக இருந்த திரு. தணிகாசலம் தயாபரனை அப் பதவியிலிருந்து பிரதமர் திரு. உருத்திரகுமாரன் நீக்கியுள்ளதாக அறிகிறேன். இந்த முடிவினை எடுத்தமைக்காக அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெறுமனே நாற்காலிகளை கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பவர்களை விடுத்து திறமையும் துடிப்பும் உடையவர்களை முக்கிய பதவிகளுக்கு நியமிக்க வேண்டுமாறு அவரை கேட்டுக் கொள்கிறேன்.

*அழகானந்தன்*

## சிவந்தனின் தியாகம்...

சிவந்தனின் தமிழுக்கும் தமிழ் மண்ணிக்கும் ஆற்றும் தியாகங்கள், தான் வாழ்ந்தால் காணும் என்ற சுயநலத்துடன் வாழும் ஒரு சில தமிழர்களை இனிமேலாவது சிந்திக்க வைக்கும் என்று நம்புகின்றோம்.

இந்த இடத்தில் தன் குடும்பத்தை மட்டும் கருத்தில் கொள்ளாது தனது கணவனுக்கு உறுதுணையாக நின்று செயற்படும் சிவந்தனின் மனைவிக்கு நாங்கள் தலை வணங்குகின்றோம். மேலும் ‘ஒரு’ ஊடகத்தை தாழ்மையாக கேட்டுக் கொள்கின்றோம் சிவந்தனுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்காக அவருடைய ஈ-மெயில் முகவரி அல்லது போன் நம்பரை எடுத்து *ஒரு பேப்பர்* ஊடாக பிரசுரித்தால் நல்ல புத்திமதிகளை திட்டங்களை வழங்குவதற்கு புத்திஜீவிகள் காத்திருக்கின்றார்கள்.

*தமிழ் பற்றாளன் நாதன்*

# நாடு கடந்த அரசாங்கத்தின் அமைச்சரவையில் சர்ச்சைக்குரியவர்கள் நீக்கம்

நாடு கடந்த அரசாங்கத்தின் அமைச்சரவையில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளதாக அதன் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னர் அமைச்சுப் பதவிகளை நீக்கப்பட்டுள்ளதுடன் முன்னைய அமைச்சுப் பொறுப்புகள் சில மாற்றப்பட்டு புதிய அமைச்சுகள் உருவாக்கப்பட்டுள்ளன. சர்ச்சைக்குரியவர்கள் எனக் கூறப்பட்ட துணைப்பிரதமர்களில் ஒருவரான ராம் சிவலிங்கம், நாகலிங்கம் பாலச்சந்திரன் ஆகியோரின் பதவிகள் பறிக்கப்பட்டுள்ளன. தணிகாசலம் தயாபரனின் வெளிவிகாரத்துறை அவரிடமிருந்து எடுக்கப்பட்டு தனித்து அரசியல்விவகாரத்துறை அமைச்சர் பதவி அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

**புதிய அமைச்சரவை விபரம்:**

துணைப் பிரதமர்கள்: -திரு உருத்திராபதி சேகர (மாவீரர்கள், போராளிகள் குடும்ப நலன் பேணல்),-பேராசிரியர் செல்வா செல்வநாதன் (நிதித்துறை), திருமதி சுபா சுந்தரலிங்கம் : துறைசாரா அமைச்சர்

மற்றைய அமைச்சர்கள் : திரு டிலக்சன் மொறிஸ் (இனஒழிப்பு, போர்க் குற்றங்கள் மானிடத்துக்கெதிரான குற்றவிசாரணை-தடுப்பு), திருமதி பாலாம்பிகை முருகதாஸ் (பெண்கள், சிறுவர், மூத்தோர் நலன் பேணல்), கலாநிதி தவேந்திர ராஜா (கல்வி, உடல்நலத்துறை), திரு முத்துக்குமாரசுவாமி இரத்னா (ஏதிலிகள் விவகாரம்), - திரு சாம் சங்கரசிவம் (வெளியீடுகள் ஆவணக் காப்பகத்துறை), திருமதி ரஜனி சின்னத்தம்பி (தமிழ் கலைகள் தொன்மை பேணல்), திரு மகிந்தன் சிவசுப்பிரமணியம் (அரசியல் கைதிகள, போர்க்கைதிகள், இடம் பெயர்ந்தோர் விவகாரம்), திரு சிவகுருநாதன் சுதர்சன் (ஊடக விவகாரம்), செல்வி வாசுகி தங்கராஜா (அனைத்துலக விவகாரம்), திரு தணிகாசலம் தயாபரன் (அரசியல் விவகாரம்) , திரு நிமால் விநாயகமூர்த்தி (பொருண்மிய அபிவிருத்தி சூழல்துறை)

# அந்த இருவர் எங்கே ?

இதழ் 175 இல் பிரசுரமான உண்மையின் வெளியில் லண்டன் கரோப் பகுதியில் இயங்கும் தமிழ் நுண்கலை பாடசாலையின் குழப்பங்களும் சில உறுப்பினர்களின் தலைமறைவு தொடர்பாக மேலும் சிலவற்றை பகிர்ந்து கொள்கிறேன்.

2010 இல் சிறந்த நிர்வாகத்துடன் தமிழ் பாடசாலை ஒன்று ஆரம்பிப்போம் என சில செயற்திறன் மிக்கோரால் பல சந்திப்புக்களுக்கு பின் தொடங்கப்பட்ட இப்பாடசாலையில் ஆறு உறுப்பினர்களுடன் ஒரு ஆசிரியர்கள் குழு மேலாளருடன் ஏழு பேர்கள் அடங்கிய ஆயுட்கால நிர்வாகம் மூன்று நிர்வாக உறுப்பினர்கள் என தெரிவு செய்யப்பட்டு இரு வருடங்களின் பின் மற்றைய உறுப்பினர்களுக்கு மாற்றீடு செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது. சிறந்த நிர்வாகம் செய்யப் புறப்பட்டவர்கள், மும்மூர்த்திகளின் திருவிளையாடல்களினால் திரை மறைவில் தீர்மானங்களை எடுக்கிறார்கள்.

இங்கு தனி ஆவர்த்தன சிந்தனைகளும் குடும்ப ஆதிக்க செயற்பாடுகளும் முன்நிலை பெறுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது. திறமை சார்ந்தவைகளுக்கு முதன்மை அளிப்பதில்லை. தலைமையிலிருக்கும் மும்மூர்த்திகளுக்கு வேண்டப்படுபவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. கேள்வி கேட்பதை ஏற்பதில்லை. அவ்வாறு கேட்பவர்கள் ஒதுக்கப்படுபவார்கள். எதைச் சொல்லி புதிய பாடசாலையை ஆரம்பித்தார்களோ அந்த நோக்கம் குப்பையின் பக்கமே செல்கின்றது.

இதற்கு 15.07.2012 இல் பாடசாலையின் கலை விழாவும் அதன் சிறப்பு மலருமே சான்று. ஏழு நிர்வாக உறுப்பினர்கள் என தெரிவித்தவர்கள் கலை விழாவில் எப்படி ஐந்தாக மாற்றமடைந்தார்கள். அப்படியென்றார் இப் பாடசாலையின் ஆரம்பத்திற்கு தங்களின் முழு பங்கையும் தந்த இருவரும் எங்கே.

*இரா. ஹரோ*

*ஒரு பேப்பர்* தொடர்பான கருத்துக்களுக்கு
facebook.com/orupaper Email: info@orupaper.com
Tel : 020 7043 4314 Fax : 020 7043 4312

TrainingConnect
www.trainingconnect.co.uk
E-mail: courseinfo@trainingconnect.co.uk Tel:+44(0)207 099 2400

Head Office: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow TW4 6JQ
0207 099 2400

➡ESOL with Citizenship
▪ British Passport/ Naturalisation
▪ Indefinite Leave to Remain

➡International ESOL Diploma (A1,A2,B1,B2,C1,C2)
▪ Student Visa / Extension Test
▪ Spouse Visa / Extension Test
▪ Work Permit / Extension Test

▪ Courses from £200
▪ Successfully trained over 35,000 students
▪ Certificates within 20 days
▪ Multilingual staff
▪ City & Guilds approved centre

National Centres
BIRMINGHAM: 7 Washington Street, Birmingham, B1 1JR, 01216339919
SHEFFIELD: Sorby House, 42 Spital Hill, Sheffield, S4 7LG, 01143034303
LEICESTER: Imperial House, St Nicholas Circle, Leicester, LE1 4LF, 01163260248
LUTON: 169 A, Dunstable Road, Luton. Beds – LU1 1BW, 01582723123
SLOUGH: 18-24 Stoke Road, Slough, Berkshire, SL2 5AG, 01753722056
NEWCASTLE: 51-52 Victoria Avenue, Whitley Bay,Tyne & Wear, Newcastle Upon Tyne – NE26 2BA, 01912525265
FREE INITIAL ASSESMENT
London Centres: Hounslow, Wembley, Kenton, Whitechapel, Camden, Holloway.

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, AUGUST 17, 2012, ISSUE 176

## நிமலரூபன், தில்ருக்சன், இனி யார்?

ஜூன் மாத இறுதியில், வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள், சிறிலங்கா காவல்துறையினரால் தாக்கப்பட்ட சம்பவத்தில் காயமடைந்து கோமா நிலையிலிருந்த மரியதாஸ் தில்ருக்சன் கடந்தவாரம் மரணமானார். கோமா நிலையிலும் அவரது கால்கள் சங்கிலிகளால் பிணைக்கப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருந்தாகத் அவரை பார்வையிட்டவர்கள் தெரிவித்துள்ளார்க்ள. இச்சம்பத்தில் படு காயமடைந்த கணேசன் நிமலரூபன் சில தினங்களிலேயே மரணமடைந்ததும், அவரது உடலை பெற்றுக்கொள்வதற்கே பெற்றோர் பெருத்த சிரமப்பட வேண்டியிருந்தது.

மேற்படி தாக்குதல் விடயம் தொடர்பாக விசாரணையை நடாத்துவதற்கு சிறிலங்கா அரசாங்கம் மறுத்து வருகிறது. கண்துடைப்புக்காக ஒரு விசாரணை நடைபெற்றாலும் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என நாம் எதிர்பார்க்க முடியாது. இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை தலையிட்டு பராபட்சமற்ற விசாரணையை நடாத்த வேண்டும் என சில மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஐக்கிய நாடுகள் சபை போன்ற வெளித்தரப்பினர் தலையீடு செய்வதன் மூலம் இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறுவது குறையக் கூடும் என்ற எதிர்பார்ப்பில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமையால் அதற்கு ஆதரவளிக்க வேண்டியது மனிதவுரிமைகளில் நம்பிக்கை கொண்ட அனைவரினதும் கடமையாகும்.

தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்பதனால் அவர்களது மனிதவுரிமை பற்றி அக்கறைப்படத் தேவையில்லை என சிறிலங்கா அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் இச்சம்பவங்களை நியாயப்படுகிறார்கள். ஒட்டுக் குழு ஒன்றின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும் இது போன்ற கருத்தை வெளியிட்டிருந்தமை ஆச்சரியப்படத்தக்க விடயமில்லை. பொதுவில் இந்த அணுகுமுறை, விடுதலைப்புலி உறுப்பினர்கள் மீது மட்டுமல்ல ஒட்டுமொத்தத் தமிழர்கள் மீதும் கையாளப்பட்டு வருகிறது.

‘இப் படுகொலைகள் பற்றி வெறுமனே அமெரிக்காவுக்கோ, ஐரோப்பாவுக்கோ, இந்தியாவுக்கோ மனுக்களை விடுப்பதால் எதுவும் நடந்துவிடாது. நாம் போராட வேண்டும், அது அமெரிக்காவுக்கும், ஐரோப்பாவுக்கும், இந்தியாவுக்கும் மட்டுமல்ல, கொழும்பிலுள்ள மகிந்த இராஜபக்சவுக்கும் வலிக்கவேண்டும்’ என மனோ கணேசன் கூறியிருப்பதை இதர தமிழ் அரசியற் கட்சிகளும், குழுக்களும் கவனத்தில் எடுக்கவேண்டும்.

## ஒரு பேப்பர்

*வணக்கம் !*

*ஒரு பேப்பர் ஒழுங்காக வெளிவருவதற்கு உதவுகிற ஆட்கள் பற்றி உங்களுக்குச் சொல்லியிருக்கிறம். உங்கடை ஆதரவு எவ்வளவு முக்கியம் எண்டது பற்றியும் சொல்லியிருக்கிறம். ஆனால் சொல்லாத ஒண்டு இருக்குது அதென்ன எண்டால், இப்பிடி உதவிற ஆக்களிட்டை போய் ஒரு பேப்பர் க்கு உதவ வேண்டாம் உபத்திரம் கொடுக்கிற ஆட்கள். இப்பிடி செய்யிற ஆட்கள் கனபேரில்லை, ஒண்டு இரண்டுதான் எண்டாலும் அவையைப் பற்றியும் சொல்லோணும். இவை வேறை ஒருத்தரும் இல்லை இங்கை சனங்களுக்கு முன்னாலை கனவான் வேசம் போட்டு கொண்டு திரிஞ்ச ஆக்கள். வன்னியிலை போராட்டம் முடியக்கு முன்னமே சிறிலங்கா தூதரகத்திற்கு தூது விட்டவைதான் இவை. அவையளைப்பற்றி ஒரு பேப்பரிலை எழுதிப் போட்டம் எண்டதாலை வரிஞ்சு கட்டிக் கொண்டு திரியினம். இவையிலை ஸ்ரெதஸ்கோப் வைச்சிருக்கிற ஆக்களும் இருக்கினம். இவையள் ஆர் எண்டு உங்களுக்கு விளங்கியிருக்கும் எண்டு நினைக்கிறம்.*

*ஒரு பேப்பர் க்கு ஆக்கங்களை அனுப்பிறவை புனைபெயரிலை எழுதிறதெண்டால் தாராளமாய் எழுதலாம். ஆனால் உங்கடை பெயர் விலாசத்தை எழுதி அனுப்ப வேண்டியது அவசியம். அப்பிடி விபரங்களைத் தராதவையின்ரை ஆக்கங்களை பிரசுரத்துக்கு எடுத்துக் கொள்ள மாட்டம் எண்டதை சொல்லி வைக்கிறம். புனைபெயரை போடுமாறு நீங்கள் கேட்டால், அதனை மாத்திரமே போடுவம். உங்கடை உண்மையான விபரங்களை ஆருக்கும் சொல்ல மாட்டம்.*

*ஒரு பேப்பரிலை செய்தியள் குறைவாய் கிடக்குது எண்டு அண்டைக்கு ஒராள் குறைப்பட்டார். இரண்டு கிழமைக்கு ஒருக்கால் வாற பேப்பரிலை செய்தியள் வெளியிடுகிறது பொருத்தமாயிருக்காது. இப்பத்தானே இணையதளங்களிலை பிழையோ சரியோ உடனுக்குடன் செய்தியள் போடியினம். அதுகளையே திரும்பவும் நாங்கள் பிரசுரிச்சால் உங்களுக்கு அலுப்புத்தட்டியிடும். இன்னொண்டையும் அவர் கேட்டார், ஒரு பேப்பர் என்ன இந்தியாவிலையோ அடிக்கிறது எண்டு. அவருக்கு சொன்ன பதிலையே உங்களுக்கும் சொல்லிறம். எழுதிற ஆக்கள் வேறை வேறை நாடுகளிலையிருந்தாலும், முழுக்க முழுக்க லண்டனிலையே ஒரு பேப்பர் க்கான அத்தனை அலுவல்களும் நடக்குது.*

*விளம்பரதாரர்களின் கவனத்திற்கு ஒண்டை கொண்டு வரோணும். நாங்கள் வழமையா விளம்பரங்களிலை இருக்கிற விசயங்களில் அக்கறைபடுறதில்லை. ஆனால் உங்கடை விளம்பரங்களிலை சிறிலங்கா சிங்கத்தை போடுறதை எங்கடை வாசகர்கள் விரும்புகிறார்களில்லை. சிங்கத்தை பார்த்தால் சிறிலங்காவின்ரை இனப்படுகொலைதான் அவையளுக்கு நினைவுக்கு வருகுது எண்டு சொல்லுகியினம். இதை கவனத்திலை எடுப்பிங்கள் எண்டு நம்பிறம்.*

*வேறை என்ன சந்திப்பம்..*

***ஒரு பேப்பர்** காரன்கள் + காரிகள்*

# Indian protest to Eezham provocative



By : Professor Peter Schalk

The demand by the Indian External Affairs Ministry that Ilam/Eelam should be dropped from the title of the Conference named Eelam Tamil Rights Protection Conference (TamilNet 9.8. 2012) is provocative and gives food for thought. The Ministry probably thought that Ilam stands for Tamililam. If so, the Ministry should have stopped the whole conference making a political evaluation in accordance with India's evaluation of the Tamil resistance movement being still a threat to the integrity of India. If the Ministry thought that Ilam is an alternative name for Lanka as a whole there was no reason to demand that Ilam should be dropped. The decision by the Ministry does not make sense.

I have observed for many years that in talk and writing by Tamil and Sinhala speakers, but also by Western scholars and journalists, Ilam stands often for Tamililam. The confusion started already in the 1970s with the famous slogan by EROS: nam ilavar, namatu moli tamil, nam natu ilam 'we are Ilavar, our language is Tamil, our country is Ilam'. The country that EROS wanted was of course Tamililam, not the whole island. Tamililam's citizens should be called Ilavar and their language be Tamil. Kumar Ponnampalam tried to re-introduce the word ilavar as self-designation, but he was killed in 2000. There was a journal called ilavar kural, a network called eelavar alumni, an eelavar web ring, and a Club Sportive Eelavar. They all had in mind Tamililam, not Ilam.

Historically, Ilam is a Tamil toponym for the whole of the island. It can be documented from the 1st century CE, before "Lanka" was introduced in Dīpavamsa 9:1. "Lanka" was Tamilised to "Ilankai" and alternated with Ilam in use by Tamil speakers. Tamil speakers also used the toponym Cinkalam, which is a Tamilisation of the toponym Sinhala. All three, Ilam, Ilankai and Cinkalam were used by alternation in the wordbooks (nikantu, akarati) throughout the centuries up to the modern period.

There is a tradition by Sinhala speakers on the ethnonationalist front to insist that Ilam is derived from Sinhala, that Ilam is nothing but Sinhala. This derivation was introduced by the Christian missionary Robert Caldwell in the 1850s. It is a typical orientalism. It is therefore ironical that it should be exploited by Sinhala ethnonationalists. It has no support in the Tamil and Sinhala history of linguistics and is from a modern linguistic point of view wrong. Unfortunately, some Tamil scholars went into Caldwell's trap giving the derivation their blessing. The relation between Ilam and Cinkalam is that of a parallel allocation. Parallels never meet. They walk along side by side.

*From the additional note sent by Professor Peter Schalk.*

The DED has not only one, but two entries about ilam. That means that ilam is evaluated as a Dravidian word. Burrow and Emeneau followed a long lexicographical tradition that we already can see in the tivakaram, akarati nikantu, pinkala nikantu, cutamani nikantu, namtipa nikantu and tamil moliyakarati. The standard formula in them is like this: "Īlam: another word is cinkalam". The entries reflect an alternating use of the words. Nowhere is said that ilam is derived from cinkalam, albeit the concept of derivation was well-known. The apidana kocam, Brito and Alvapillai Veluppillai also stand in that tradition. Already in the tivakaram in the 8th century we find this alternating use that I have characterised as parallel allocation of ilam and cinkalam. The tivakaram has been studied by Sinhala scholars who have projected Caldwell's analysis into it without being aware of Caldwell. They referred to the Tamil Lexicon. Ilam is allegedly derived from sihala, they ascribe to the tivakaram anachronistically. This is bad historical scholarship, but it was and is politically "in".

Again, before Robert Caldwell nobody, including scholars from Sinhala linguistics, has ever derived ilam from sihala, but after Caldwell, Hobsson-Jobson and Tamil Lexicon and Initirapala have taken it up. The derivation is linguistically (morphologically) and historically impossible. Today the derivation has become one of the pillars of anti-Tamil Simhalatva (Nalin de Silva, Gamani Iriyagolle, Susantha Goonetilleke). Iriyagolle's view reveals a special "linguistic" theory. He thought that the relation between a signifier and its signified is organic, necessary and indissoluble. It is not conventional or arbitrary. Therefore, he thought that if the signifier is ilam and its signified is sihala, then there is no ilam. Everything is sihala. This kind of rudimentary thinking is characteristic for Simhalatva.

*Courtesy: Tamilnet*

BBC Tamil service on Saturday said that it was interviewing Professor M.A. Nuhman, following the advice of India to TESO conference on dropping the word Eezham and as the word has became controversial in the last few decades.

New Delhi has not advised TESO but has made it a condition for permitting foreign participants to the conference. BBC Tamil service was blatantly twisting the truth.

Professor Nuhman cited the use of the word Eezham in the Changkam Tamil literature.

But the Dravidian origin of the word is questionable, Nuhman said.

The word has no entry in the Dravidian Etymological Dictionary (DED). The Madras Tamil Lexicon traces the origin of the word to Pali. In pre-Christian Brahmi inscriptions I'la, Eezha, Hela, Sihala, E'lu and Sinhala come with the same meaning. Researchers have said that they were words in different languages meaning a particular ethnicity of people. Even according to Veeramaamunivar [a 17th century Tamil philologist] Eezham means the country of Sinhalese, Nuhman was cited saying by the BBC Tamil Service.

The term Eezham, meaning the entire island became controversial only after the 'secessionist' movement, but writers generally use it in the sense of the entire island, Nuhman said.

# தமிழீழம்; பொது வாக்கெடுப்பு ஏன்

## இனப் படுகொலைக்கு எதிரான இளைஞர்கள் (தமிழ்நாடு)

இலங்கையில் தமிழீழம் தனி நாடாக அமைந்தால் இந்தியாவில் தமிழ்நாடு தனிநாடாக ஆகிவிடும் என்ற கண்மூடித்தனமான தப்புக்கணக்கால் ஏற்பட்ட அச்சமே இந்திய அரசு இலங்கை அரசுடனும், பல்வேறு நாடுகளுடனும் கள்ள உறவுவைத்துக்கொண்டு தமிழீழ தேசத்தின் முப்பது ஆண்டு கால அறம் சார்ந்த, வீரம் செறிந்த விடுதலைப் போராட்டத்தை நசுக்கியது. உண்மையற்ற முறையில் உருவாக்கப்பட்ட இந்திய அரசு, தமிழீழம் மலர்ந்தால் அது இந்தியாவிற்கு என்றென்றும் துணை நிற்கும் என்னும் உண்மையை மறுத்து வருகிறது.

தெற்காசியப்பிராந்தியத்தின் பாதுகாப்பிற்கும், சமாதானத்திற்கும் தமிழீழத்தின் பாதுகாப்பு என்பதுமிகவும் அவசியமானதாகும். தமிழீழம் இல்லையேல் இலங்கை அந்நிய அரசின் வெடிமருந்துக் கிடங்காய் மாறிவிடும் அபாய நிலையை இந்திய அரசு புரிந்துகொண்டு இனிமேலாவது தமிழின அழிப்புப் போக்கினைக் கைவிட்டுவிட்டு, தமிழீழ மக்களின் உரிமைப்பிரச்சனைக்கெதிராகச் செயல்படுவதை நிறுத்திக் கொள்ளவேண்டும். இத்தகைய நிலைக்கு இந்திய அரசைத் தள்ளி, தமிழீழ மக்களின் உரிமைகளைப் பெறுவதே பொதுவாக்கெடுப்பு என்னும் சனநாயக அரசியல் வழிமுறையாகும். இந்த வழியில் தீர்வு காண சர்வதேச சமுதாயத்தை வலியுறுத்துவதே இந்த ஒரு கோடி கையெழுத்து இயக்கத்தின் கடமையாகும்.

ஒரு தேசிய இன விடுதலைப்போராட்டம் என்பது தம்மை ஒடுக்கும் ஆதிக்க தேசிய இனத்திற்கு எதிரான போராட்டமாகும். அது ஒட்டுமொத்த உலக ஏகாதிபத்தியங்கள் அனைத்தையும் எதிர்க்கும் போராட்டம் அல்ல. ஒரு நாட்டின் குறிப்பிட்ட பிரிவினை, குறிப்பிட்ட ஏகாதிபத்தியங்களுக்குச் சாதகமாக இருந்தால் அவை அதனை ஆதரிக்கும். அதே பிரிவினை குறிப்பிட்ட ஏகாதிபத்தியங்களுக்குப் பாதகமாக இருந்தால் அவை அதனை எதிர்க்கும். உலக அரசியலில் நிலவிவரும் இத்தகையச் சூழ்நிலைகளையும் கடந்து சர்வதேச சமூகத்தை தமிழீழ மக்களின் உரிமைகளுக்கு ஆதரவாக மாற்றுவதே இம் முயற்சியாகும்.

- தமிழீழ விடுதலைப் போராட்டமும், பொது வாக்கெடுப்புக்கான காரணங்களும்

1. இனிமேலும் தமிழர்கள் சிங்கள அரசியல் கட்சிகள் மீது நம்பிக்கை வைக்க முடியாது. ஏனெனில் இவர்கள்தான் 2.5 இலட்சம் தமிழர்களின் படுகொலைக்குக் காரணமான குற்றவாளிகள்.

2. இனிமேலும் தமிழர்கள் சிங்கள மக்கள் மீது நம்பிக்கை வைக்க முடியாது. ஏனெனில் தமிழர்களை ஒடுக்குகின்ற அரசியல் கட்சிகளிடமே ஆட்சி அதிகாரத்தைக் கொடுப்பவர்கள் சிங்கள மக்கள்.

3. இனிமேலும் தமிழர்கள் தமது உரிமைகளுக்காக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியாது. ஏனெனில் நூற்றுக்கும்மேற்பட்ட பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றுள்ளது. பேச்சுவார்த்தைகளை இலங்கை அரசு காலம் கடத்தவும், தமிழர்களையும், உலகத்தையும் ஏமாற்றவுமே பயன்படுத்தி வந்துள்ளது.

4.இனிமேலும் தமிழர்கள் இலங்கையில் சிங்களவர்களுக்கு இணையாகச் சம உரிமைபெற்று வாழமுடியும் என நம்பிக்கை வைக்க முடியாது. ஏனெனில் இன்றுவரை தமிழர்கள் கோரும் எந்த உரிமையையும் எந்த ஒரு சிங்கள அரசும் ஏற்றுக் கொண்டது கிடையாது.

5. இனிமேலும் இலங்கையின் ஒருமைப்பாடு குறித்துப் பேசுவதில் அர்த்தமில்லை. ஏனெனில் விடுதலை பெற்ற நாளிலிருந்து இலங்கையில் ஒருமைப்பாடு என்ற ஒன்று எப்போதுமே இருந்தது கிடையாது.

6. இனிமேலும் இலங்கையில் இன நல்லிணக்கம் என்பதற்கு எள்ளளவும் வாய்ப்பில்லை. ஏனெனில் அதற்கான பல்வேறு வாய்ப்புகள் அறுந்துபோய் காலங்கள் கடந்துவிட்டது.

இன நல்லிணக்கம் பேசிக் கொண்டே சிங்களவர்கள் தமிழர்களுக்குச் செய்த அவலங்கள்தான் இத்தனையும். ஈழ மண்ணில் இனப்படுகொலை செய்யப்பட்ட தமிழர்கள் 2 இலட்சம் பேர், உலக நாடுகளுக்கு ஏதிலிகளாகச் சென்ற தமிழர்கள் 10 இலட்சம் பேர் இன்றளவும் சித்திரவதைக் கூடங்களில் சிக்கித்தவிக்கும் தமிழர்கள் 10,000 பேர் இராணுவக் கட்டுப்பாட்டில் சுதந்திரமற்று வாழுவோர் ஒட்டுமொத்தத் தமிழர்களும்.

இத்தகையச் சூழலில் கடுமையான, கொடுமையான, கொடூரமான நிலையில் வாழும் ஈழத்தமிழர்களின் இன்றைய முதலாவது தேவை உயிர்ப் பாதுகாப்பாகும். தொடர் இனப் படுகொலையிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள அவர்களுக்கு ஒரு தனி அரசு தேவைப்படுகிறது. இதனை ஏற்படுத்திக் கொடுக்கும் ஒரு அரசியல் நடவடிக்கையே பொதுவாக்கெடுப்பாகும். பொதுவாக்கெடுப்பு என்பது ஈழத்தமிழர்கள் தமது அரசியல் நடவடிக்கைகளைத் தாமே நேரடியாகத் தீர்மானித்துக் கொள்ளும் ஒரு சாதாரணத் தேர்தல் வழிமுறையாகும். தமிழீழத்தில் வாழும் தமிழர்கள், தமிழகத்தில் வாழும் ஈழத்தமிழர்கள், உலக நாடுகளில் வாழும் புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்கள் அனைவரும் பொது வாக்கெடுப்பில் வாக்களிக்கும் உரிமையும், தகுதியும் உடையவர்களாவர். சர்வதேச அரசியல் களத்தில் ஈழப்பிரச்சனை முன் எப்போதையும் விட தீவிரமடைந்துள்ளது. இத்தகைய நிலையில் பொதுவாக்கெடுப்பு என்பது ஈழத்தமிழர்களின், உலகத் தமிழர்களின் சர்வதேச சனநாயக சக்திகளின் ஒற்றைக் குரலாக இருந்தால் அதனைச் சர்வதேச சமூகம் பரிசீலித்தே ஆக வேண்டும். சரியானதோர் தீர்வையும் ஏற்படுத்திக் கொடுத்தே ஆக வேண்டும்.

*“தமிழினத்தில் பிறந்ததற்கு இடுவோம் ஒரு கையெழுத்தை-அது தீர்மானிக்கட்டும் ஈழத்தமிழனின் எதிர்காலத் தலையெழுத்தை”*

# August, a Memorable Month for Tamils for All Wrong Reasons!

**By: Nada Balasubramaniam (Chairman / Leader People's Front of Liberation Tigers -UK)**

The month of August of the year 2006 is a very significant and a memorable month for the Tamils in general and Eelam Tamils in particular, for all wrong reasons.

Sencholai massacre of August 14th 2006 and just 16 days later on Thursday, 31st of August 2006, President Rajapakse , clad in a light blue bush shirt and white sarong, meeting with Britain's then Prime Minister, Tony Blair, though on vacation, at his country residence Chequers in Buckinghamshire and finalising the green light for the annihilation of LTTE, the Tamil rebels, are the two nasty and foul events, the Tamils will never forget for generations..

On 14 August 2006 around 7.30am, Sri Lankan Air Force K fir jets. carried out extensive bombing and managed to kill 52 students and two staff. Another 130 students were seriously injured. Many more received minor injuries. Three of the injured girls lost one leg and another girl lost an eye.

In the Senchcholai complex in Vallipunam in the Mullaithivu district hundreds of female students in the age group of 17-20 were gathered on 10 August 2006 for a week-long training in leadership and first aid which was intended for preparing the students for leadership in their school and community during the impending war. The aim was survival.

The war as schemed by India was simply based on the Flawed Hypothesis. International community's decisions and actions were based on the wrong belief that the Sri Lankan Government could be trusted but the Tamil freedom fighters, the Liberation Tigers of Tamil Eelam (LTTE), could not be trusted. The IC believed that the LTTE could not be trusted to respect the 2002 ceasefire agreement; that sooner or later it would break it and re-start the war. The Sri Lankan government, on the other hand, could be trusted to honour its pledge that it would not restart the war and seek a military solution.

The flawed nature of this belief became evident as events unfolded in 2006. It was the LTTE that was eager to keep the ceasefire alive and it was the Sri Lankan Government that would not end its aerial bombings and other offensives in spite of repeated requests from the international community.

The aerial bombing in Vanni was widespread and at random. Civilians including school children and elderly were dying of bleeding caused by shrapnel from the bombs. The LTTE did everything to save the lives of the innocent ones and they studied the problem. The shrapnel and pellets entering the human bodies are sterilised and there are people carrying these for the rest of their life or until removed by a surgeon. The death is normally caused by bleeding and not due to the common infection and festering of wounds. Hence, the importance of first-aid was greatly realised by the gallant community. The bleeding has to be stopped immediately for any chance of survival.

But when Raj Chengappa of India Today (On August 28, 2006- 8.00 GMT) raised the question,

“What about the incident in which children of an orphanage were reportedly killed in an attack carried out by your army recently?”. President Rajapakse said,

“Instead of listening to propaganda and rumours, people must study the facts. Everybody knows it was a training camp for child soldiers and women cadres opened by the LTTE. Photographs showed the bodies were clad in black trousers, shirts and headbands.

In Sri Lanka, most Hindu and Tamil girls never wear clothes like that. We had identified the camp in the jungle in 2004. We had to take action when attacked. I will never order an attack on an orphanage or on children. It was sad. We are family people. I have given clear instructions to the forces that there should not be any human rights violations”.

Now, let's the report appeared on the Sunday Times of Colombo in the political column under the caption, “ Mahinda-Chinthanaya London giya'”, on 3rd September 2006.

Sajin Vaas Gunawardena, the Presidential Ambassador at large, playing cloak and dagger was already in London The behind the scene diplomatic efforts had been going on for two months, both in Colombo and in London, but the news arrived only on Tuesday, just a day before the historical meeting between the heads of two commonwealth states. The third master schemer who was behind all these concealed, conspirational disguised covert operations leading to the Mullivaikhal genocide of Tamils, is India, not the India we all know but the nasty, Sonia Congress government of New Delhi.

The then Foreign Minister Mangala Samaraweera, Presidential Secretary Lalith Weeratunga, Additional Secretary Gamini Senarath and Peace Secretariat Chief Palitha Kohona all joined in a rush.

Though Rajapaksa's visit was termed private, and the news spread in Colombo that he was going to see his son Namal enter a university, the groundwork for talks between the two leaders was carefully slotted in. The President was keen that Sri Lanka should forge a closer relationship with Britain for a number of reasons. Main among them was the fact that Britain and the United States were spearheading the war on terror. Such a close ally was most useful to Sri Lanka.

The meeting with Blair, the very first with a European leader for Rajapaksa, raised high expectations among those who accompanied him. At first Rajapaksa and Blair had a one-on-one discussion for 40 minutes. Thereafter the rest of the entourage joined in.

Rajapaksa had not failed to impress upon Blair how he was trying to reach out to all political parties to formulate the basis for a negotiated settlement with the LTTE. He insisted that the security forces were engaged on a "defensive" role after the guerrillas launched attacks on them. But all ended in the ***'Genocide of Eelam Tamils'***


*ஒரு பேப்பர்* உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

BBK Partnership
Croydon.................. 020 8150 9950

Meera Arnold & Co
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

*ஒரு பேப்பர்* தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER**
Bank: **HSBC**
A/C: **61429035**
S/C: **40-33-09**

ஒரு பேப்பர்
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

ஆசிரியர் குழு:

பிரித்தானியா
**அ.இரவி - மணி - அகிலன் மாதவன்**

கனடா
**தயா - அரவிந்தன் - சிந்து**

பிரான்ஸ்
**சிறி**

சுவிஸ்
**சயந்தன்**

பொறுப்பாசிரியர்
**- கோபி -**

மக்கள் தொடர்பு
**சுகன்யா**

விளம்பரம்
**சோபனா - அஜந்தா**

அச்சு
**தர்சினி (கனடா) - சுகன்யா**

வடிவமைப்பு
**மயூ - யுகன்**

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
**ரஜீவன் - மாயா - சாரங்கன்**

தமிழ் எழுத்துரு உதவி
**சுரதா யாழ்வாணன்**

நிதி – நிர்வாகம்
**சோபனா**

வழங்கல்
**உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்**

**உங்கள் தொடர்புகட்கு:**

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# சிவந்தன் மூட்டிய நெருப்பு..



பிரித்தானியாவின் மைய ஊடகங்களில் ஒன்றான The Independent லண்டன் ஒலிம்பிக் போட்டிகளிலும் அதனையொட்டியும் நடைபெற்ற 2012 முக்கிய சம்பவங்களைப் பட்டியலிட்டுள்ளது. அதில் கோபி சிவந்தனின் உண்ணாநிலைப் போராட்டமும் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னதாக Voice of America வின் செய்தியாளர் சிவந்தனை செவ்வி கண்டு செய்தி வெளியிட்டிருந்தார். மைய நீரோட்டத்திலுள்ள ஊடகங்களின் கவனத்தையீர்த்த அவரது இருபத்தியிரண்டு நாள் உண்ணாநிலைப் போராட்டம் தொடர்பில் தமிழ் மக்கள் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை என்று சிலர் ஆதங்கப்படுகிறார்கள். அதே காலப் பகுதியில் லண்டன் கோவில்களில் நடைபெற்ற தேர்த் திருவிழாக்களில் காணப்பட்ட திரளான மக்களில் ஒரு சிறுபங்கினர்கூட சிவந்தன் உண்ணாநிலைப் போராட்டம் நடாத்திய ஸ்ரற்போர்ட் பகுதிக்கு வரவில்லை என்பது அவர்களது ஆதங்கத்திற்கான காரணமாக அமைகிறது. திருவிழா பார்க்கப் போபவர்களுக்கும் போராடுபவர்களுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை இவர்கள் உணர்ந்திருக்கவில்லை என்றே ஐயப்பட வேண்டியுள்ளது.

சிவந்தனின் உண்ணாநிலைப் போராட்டம் பற்றியசில அவநம்பிக்கையூட்டும் கருத்துகள் மக்கள் மத்தியில் நிலவியதும் அவர்கள் அதிகம் அக்கறை கொள்ளாததற்கு ஒரு காரணமாக அமைந்திருக்கலாம். ஏற்கனவே முள்ளிவாய்க்கால் பேரழிவுகள் நடைபெற்ற காலத்தில், பிரித்தானிய பாராளுமன்றுக்கு முன்னால் இளைஞர் பரமேஸ்வரன் நாடாத்திய போராட்டம் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. ஒரு புறம் இவ்வகையான போராட்டங்களுக்கு மதிப்பளிப்பதுபோன்று நடந்துகொண்ட பிரித்தானிய அரசாங்கம், போரை நிறுத்தவோ, மக்களை அழிவுகளிலிருந்து தடுக்கவோ எந்தவொரு நடவடிக்கையினையும் மேற்கொள்ளவில்லை.

இன்னொரு வகையானவர்கள், ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் காலத்தில் இத்தகைய போராட்டங்களை நடாத்தி, பிரித்தானிய அரசுக்கு நெருக்கடிகளை கொடுக்கக்கூடாது என்ற கருத்தினைக் கொண்டிருந்தனர். பிரித்தானியாவும் ஏனைய மேற்குலகமும் தமிழ் மக்கள் மீது இப்போது கருணை கொண்டிருப்பதாக தமிழ் மக்களை நம்ப வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு இவ்வாறான செயற்பாடுகள் எரிச்சலை ஏற்படுத்தியிருக்கலாம்.

இளைஞன் சிவந்தனின் உறுதியான செயற்பாடுகளை அருகில் நின்று அவதானித்தவன் என்ற வகையில் இங்கு சிலவிடயங்களை பதிவு செய்ய வேண்டியுள்ளது. 2010ம் ஆண்டில் சிவந்தன் லண்டனிலிருந்து சுவிற்சலாந்துக்கு நெடுந்தூர நடைப் பயணத்தை மேற்கொண்டார். அவர் நடைப் பயணம் மேற்கொள்ள முடிவுசெய்த காலம் முக்கியமானதாக இருந்தது. முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னர், செய்வதறியாது திகைத்து நின்றவர்களும், சரணாகதி அரசியலுக்கு முத்தாய்ப்பு வைத்துக் கொண்டிருந்தவர்களும் அலைந்துழல்வு தமிழ்ச்சமூகத்தை நிறைத்திருந்த காலமது.

சிவந்தனிடம் மற்றையவர்களிடமிருந்ததுபோல் சலனமிருக்கவில்லை, தனது உறுதியை வெளிப்படுத்த நடைபயணம் மேற்கொள்ள முன்வந்தார், ஓர்மத்துடன் தனது நடைபயணத்தை தொடர்ந்தார். சிவந்தனின் கருத்தையொத்தவர்கள் உரம் பெற்றார்கள், துணிவுடன் வெளியில் வந்தார்கள். அதன்பின்னர் அவர்களை அடிபணிவு அரசியலுக்குள் இழுத்துச் செல்ல முடியவில்லை. அவ்வாண்டின் இறுதியில் ஒக்ஸ்போர்ட் யூனியனில் உரையாற்ற வந்த மகிந்த இராஜபக்ச, சிவந்தனிடமிருந்து பிரித்தானிய தமிழ் மக்களிடம் தொற்றியிருந்த துணிவினைக் கண்டு கொண்டார்.

ஒலிம்பிக் போட்டிகளின்போது ஆர்ப்பாட்டங்களை நடாத்தி பிரித்தானிய அரசினையும், இங்குள்ள மக்களையும் ஆத்திரப்படுத்தக்கூடாது என்பது இங்குள்ள சில தமிழ் பிரமுகர்களினதும், அமைப்புகளினதும் கருத்தாகவிருந்தது. காலனித்துவ மனப்பாங்குடன் சிந்திப்பவர்களிடம் இதனைவிட அதிகமாக எதிர்பார்க்க முடியாது என்றாலும், பிரித்தானியாவில் சில பத்து வருடங்களாக வசிக்கும் இவர்களுக்கு பிரித்தானியாவின் அரசியல் பாரம்பரியம் இன்னமும் புரியவில்லை என்பது கவலையளிக்கிறது.

சிவந்தனின் போராட்ட நடவடிக்கைகளுக்கு மாநகரக் காவல்துறை அனுமதி வழங்கியதுடன் இருபத்தியிரண்டு தினங்களும் பாதுகாப்பும் வழங்கியது. உள்ளூர் மக்களோ, மைய ஊடகங்களோ இது பற்றி எந்த முறைப்பாட்டையும் வெளியிடவில்லை. வழமைக்கு மாறாக பிரித்தானியாவில் செயற்படும் தமிழரல்லாத பல்வேறு அரசியற் செயற்பாட்டுக் குழுக்கள் தமது ஆதரவினை வழங்கின. நேரில் வந்து பங்கெடுத்துக் கொண்டன.

வேனிற்கால விடுமுறைகாலத்தில், ஒலிம்பிக் போட்டியின் காரணமாக லண்டன் மாநகரமே விழாக்கோலம் பூண்டிருந்த நேரத்தில், ஒரு இளைஞன், தனது மனைவி பிள்ளைகளுடன் அனுபவிக்க வேண்டிய தனிப்பட்ட வாழ்வை தவிர்த்துவிட்டு, ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாநிலைப் போராட்டத்தை நடாத்தினான். அவனது கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றுவதற்கு சர்வதேசம் முன்வராமல் போகலாம், ஆனால் அவன் வெளியிட்ட செய்தி சேரவேண்டியவர்களைச் சென்றடைந்திருக்கும் என்பதனை ஐயத்துக்கிடமின்றி நம்பலாம். இந்த இனம் இலகுவில் அடிமைகொள்ளப்பட முடியாதது என்ற ஒற்றைச் செய்தியாவது அவர்களைச் சென்றடைந்திருக்கும்.

கோட்பாடுகள் கொள்கை விளக்கங்கள் எதுவுமில்லாமல் தன்னை வருத்தி சிவந்தன் சொன்ன செய்தி மிகத் தெளிவானது. அதனை உணர்ந்து கொள்வதும் விடுவதும் அவரவர் புரிதலைப் பொறுத்தது.

*- கோபி (ஒரு பேப்பர்)*

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்!

## அவசரம் வேண்டாம்

இன்று நாம் ஓர் ஏவுகணையின் வேகத்தில் வாழ்கிறோம். அதிகமாகி விட்ட தேவைகள், சந்திக்க வேண்டிய போட்டிகள், எளிதில் வெற்றி பெறத் துடிக்கும் வெறி எல்லாம் சேர்த்து நம்மை வேகமாக ஓடத் துரத்துகின்றன.

அசுர வேகத்தில் இயங்கா விட்டால் இந்த சமூகத்தில் நாம் தாக்குப் பிடிக்கவே முடியாது என்று நமக்குத் தோன்றுகிறது. ஆனால் இந்த அவசர வாழ்க்கை முறைக்கு ஈடாக நம் ஆரோக்கியத்தையும்மன அமைதியையும் இழப்பதை நாம் ஏனோ உணர மறந்து விடுகிறோம்.

இரத்தக் கொதிப்பு, நரம்புத் தளர்ச்சி, ஜீரணக் கோளாறு, இதய நோய்கள் என அவசர வாழ்க்கை முறை தரும் நோய்களை இன்றைய மருத்துவ ஆராய்ச்சிகள் பட்டியல் இடுகின்றன. காரணம், ஒவ்வொரு அவசர சூழ்நிலையில் நாம் இயங்கும் போதும் நமது நரம்பு மண்டலமும், முக்கியமான பல உள் உறுப்புகளும் முடுக்கி விடப்படுகின்றன. அவை வழக்கத்தை விட விரைவாக இயங்குகின்றன.

மிக முக்கியமான அவசரக் கட்டத்தில் இப்படி இயங்க வேண்டியவை, தினமும் தொடர்ந்து எல்லாச் சமயங்களிலும் இயங்க வேண்டி இருப்பதால் சீக்கிரமே பழுதடைந்து விடுகின்றன. நோய்களை நாமே சீக்கிரம் வரவழைத்துக் கொள்கின்றோம்.

இரண்டு மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் மாரடைப்பிற்கான காரணங்களைப் பல வருடங்கள் ஆராய்ந்தார்கள். மிகத் துரிதமாக வாழ்க்கையை வாழத் துடிப்பவர்களும், குறுகிய காலத்தில் லாபத்தையும் வெற்றியையும் அடைய விரைபவர்களுமே அதிகமாக மாரடைப்பை விலை கொடுத்து வாங்குகிறார்கள் என முடிவில் கண்டு பிடித்துள்ளனர். அவர்கள், 'தவறான உணவு முறைகளும், சிகரெட்டுகளும் குண்டுகள் என்றால், அவசர வாழ்க்கை முறையே துப்பாக்கியாக இருக்கிறது' என்கிறார்கள்.

வாழ்க்கையில் வேகம் அதிகரிக்க அதிகரிக்க, நமக்கு மிக நெருங்கியவர்களின் உணர்வுகளையோ, மானசீகத் தேவைகளையோ புரிந்து கொள்ளவும் நேரமில்லாமல் போய் விடுகிறது. நம்மைச் சுற்றி உள்ள சின்னச் சின்ன அழகுகளையும், நல்ல விஷயங்களையும் ரசிக்கத் தவறுகிறோம். ருசித்துச் சாப்பிடுவதற்குப் பதிலாக விழுங்கி விரைகிறோம். குழந்தைகளைப் பெறுகிறோம். அவர்களின் குறும்புகளையும், மழலைகளையும் ரசிக்க நமக்கு நேரம் இருப்பதில்லை. வீட்டை அழகான பொருள்களால் நிரப்ப முடிந்தாலும் அவற்றை நின்று ரசிக்க முடிவதில்லை. வீட்டில் ஒருவருக்கொருவர் மனம் விட்டுப் பேசுவது என்பது பெரும்பாலும் இல்லை.

சில நிமிடங்கள் கிடைத்தாலும் அதை டி.வி. திருடி விடுகிறது. பொருளையும், பணத்தையும் சேர்க்கும் அவசரத்தில் நாம் வாழ்க்கையைக் கோட்டை விட்டு விடுகிறோம். நம் முன்னோர்களை விட எல்லா வித வசதிகளிலும் முன்னேறி உள்ள நாம் அவர்களை விடச் சந்தோஷமான நிறைவான வாழ்க்கை வாழ்கிறோமா என யோசித்தால் இல்லை என்பது தெரியும். இந்த அவசர வாழ்க்கைக்கு நாம் தரும் விலை மிக மிக அதிகம்.

நாம் கிட்டத்தட்ட இயந்திரங்களாக மாறி வருகிறோம். ஆனால் இயந்திரம் கூடத் தன் சக்திக்கேற்ற வேகத்தில் மட்டுமே இயங்குகிறது. மற்ற இயந்திரங்களை முந்திக் கொள்ளவோ, ஜெயிக்கவோ இயங்குவதில்லை. நாம் வெற்றி பெறப் பாடுபடுவதற்கும், மற்றவர்களைத் தோற்கடிக்கப் பாடுபடுவதற்கும் இடையே மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது. இரண்டாவதில் நம் சக்திகள் அனைத்தும் விரயமாகி மன அமைதியும் கெடுகிறது.

இந்த அவசரம் நம் இரத்தத்தில் ஊறிப் போய் சாதாரண தவிர்க்க முடியாத இடங்களில் கூட நம்மால் அமைதியாக இருக்க முடிவதில்லை. சிக்னல்களில் ஓரிரு நிமிடங்கள் காக்க வேண்டி இருந்தால் நம்முள் பலரும் தவித்துப் போகிறோம். திருப்பதியில் தெய்வ தரிசனமானாலும் சரி, ரயில் நிலையத்தில் முன் பதிவுக்கானாலும் சரி, நீண்ட வரிசைகளில் நிற்க நேரிட்டால் முன்னால் நிற்பவரின் கால்களைப் பல முறை மிதித்துப் பலரும் முன்னேறத் துடிக்கிறோம். வேலையே இல்லா விட்டாலும் சிலரால் சும்மா இருக்க முடிவதில்லை. கால்களையாவது ஆட்டிக் கொண்டிருப்பார்கள்.

**நம் முன்னோர்களை விட எல்லா வித வசதிகளிலும் முன்னேறி உள்ள நாம் அவர்களை விடச் சந்தோஷமான நிறைவான வாழ்க்கை வாழ்கிறோமா என யோசித்தால் இல்லை என்பது தெரியும்.**

அதிவேகம் சுறுசுறுப்பல்ல. உண்மையில் அது சக்தி விரயம். அவசர புத்தி பின் புத்தி. அவசரத்தில் மனிதன் அதிகமாகப் பதட்டமடைகிறான், குழப்பமடைகிறான். அதனால் தவறுகள் பல செய்து அவற்றைச் சரிசெய்ய ஒரே வேலையைப் பல முறை செய்ய நேரிடுகிறது.

(இது குறித்து மேலும் சொல்வேன்.)

*- என்.கணேசன்*

# இந்திய கனவுகளிலிருந்து விடுபடுதலும்.. புதிய உத்திகளின் அவசியமும்




**கோபி**
*ஒரு பேப்பர்*

பிரித்தானியாவின் காலனித்துவத்திலிருந்து விடுபட்டு இந்திய நாடு உருவானதன் அறுபத்தைந்தாவது வருட நிறைவு இவ்வாரம் கொண்டாடப்பட்டது. இவ்வேளையில் தற்கால இந்தியா பற்றிய பல ஆய்வுகள் சர்வதேச ஊடகங்களில் வெளியாயிருந்தன. இந்த ஆய்வுகளில் மோகன்தாஸ் காந்தியின் கனவுத்திட்டமான "கிராம சுயராஜ்ஜியம்" அதனிலிருந்து விலகிய சந்தைப் பொருளாதாரத்தை ஒட்டிய நேருவின் கொள்கைகள், இந்திய அரசின் தற்போதைய வல்லாதிக்கக் கனவு, பொருளாதாரம் என பல்வேறு விடயங்களை ஒட்டியிருந்ததை அவதானிக்க முடிந்தது. இவற்றுள் இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை பற்றிய கருத்துகள் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை. இந்தியாவிடம் குறித்துச் சொல்லக்கூடியதான வெளிவிவகாரக் கொள்கை இல்லாமலிருப்பது இதற்கான காரணமாக அமைந்திருக்கலாம்.

பல்வேறு போதாமைகளுக்கும் குறைபாடுகளுக்கும் மத்தியில் இந்தியாவைப்பற்றி சிறப்பாகச் சொல்லக்கூடிய சில விடயங்களும் உள்ளன என்பதனை மறுப்பதற்கில்லை. மக்கள் தொகையில் ஐக்கிய அமெரிக்காவை விட ஐந்து மடங்கு அதிகமாகக் கொண்டிருக்கும் இந்தியா உலகிலேயே பெரிய சனநாயக நாடு. பன்மொழி பேசும், பல்கலாச்சாரங்களைக் கொண்ட பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட மதச்சார்பற்ற நாடு என்ற தனித்துவம் அதற்கிருக்கிறது. இவை கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டிய கருத்துகளாக உள்ளபோதிலும், இவற்றில் அசாத்தியமான உண்மையிருப்பதனையும் நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். இருப்பினும், அதன் அண்டைநாடுகளைப் பொறுத்தவரை இந்தியாவின் தனித்துவம் எதுவித செல்வாக்கையும் செலுத்தவில்லை. அதாவது இந்தியாவின் பன்மைத்துவ சிறப்பினை பின்பற்றும் எண்ணம் இந்த நாடுகளிடம் காணப்படவில்லை. மாறாக அவற்றிடம் இந்திய ஆதிக்க சக்திகளிடம் காணப்படும் "அகன்ற இந்தியா" என்ற விரிவாக்கக் கொள்கை தொடர்பான அச்சமே காணப்படுகிறது. சிங்களத் தேசியவாதிகள் விடயத்தில் இந்தியா தொடர்பான சந்தேகங்கள் அச்சம் என்பன, தீவில் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளில் நிரந்தரமாகவே ஆதிக்கம் செலுத்துகின்றது.

இலங்கைத்தீவில் வாழும் இரு தேசிய இனங்களைச் சேர்ந்தவர்களைப் பொறுத்தவரை இந்தியா தொடர்பாக நேரெதிரான கருத்தினை அவர்கள் கொண்டிருக்கிறார்கள். இருப்பினும் புவியியல் ரீதியாக அண்மித்திருப்பதும், மொழி கலாச்சார, வர்த்தக தொடர்புகள் காரணமாகவும் இந்தியா ஒரு புறக்கணிக்கமுடியாத ஒரு சக்தி என்பதனை இரண்டு தரப்பினரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை, முள்ளிவாய்க்கால் பேரழிவுகளுக்கு பின்னர் இந்தியா பற்றிய எதிர்பார்ப்புகள் இல்லாவிட்டாலும், அவர்களது இந்தியக் கனவு இன்னமும் நீடித்து வருகிறது. இதன் நீடிப்பாக தமிழர் தாயகத்தை இந்தியாவின் இன்னொரு மாநிலமாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற விருப்பத்தை ஓரிருவர் வெளியிட்டு வருகிறார்கள். கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரக்கூடிய ஆபத்பாந்தவனாக இந்தியாவை ஈழத்தமிழர்கள் பார்த்த காலம் ஒன்று இருந்தது. இருபத்தைந்து வருடத்திற்கு முன்னர் இந்திய இராணுவத்தை தமிழர் பகுதிகளில் நிலைகொள்ளவைத்தன் மூலம் அந்த நம்பிக்கை தகர்ந்துவிட்டது. இப்போது அவர்கள், இந்தியாவை அச்சத்துடன் பார்க்கிறார்கள். தாம் விரும்பாவிட்டாலும் இந்த பூதத்துடன் சமரசம் செய்துகொள்வதை தவிர வேறு வழியில்லை என அவர்கள் நினைக்கிறார்கள்.

இந்தியா எப்படி நடந்துகொண்டாலும், பெரும்பாலான ஈழத்தமிழர்களிடத்தில் அந்நாட்டு மக்களின் மீதும், தலைவர்கள் மீதும் மதிப்பும் மரியாதையும் இருக்கிறது. காலம் காலமாக திணிக்கப்பட்ட கருத்துகளாலும், தமிழ் நாட்டுக்கு வெளியே உள்ள இந்தியாவை புரிந்து கொள்ள முடியாத காரணத்தாலும் இந்நிலை ஏற்பட்டிருக்கலாம். இந்தியாவின் பிரமாண்டமும், வல்லரசுக் கனவுகளும் இக்கருத்துகளுக்கு உரம் சேர்த்திருக்கிறது. இன்னொருபுறத்தில் திட்டமிட்ட ஆனால் நாசுக்கான முறையில் மேற்கொள்ளப்படும் அரசியல் பரப்புரைகள் மூலமும் இக்கருத்து வலிந்து திணிக்ப்?படுகிறது.

இலங்கைத் தீவில் தற்போது வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகளில் பெரும்பாலானவை இந்தியாவின் செல்வாக்குக்கு உட்பட்டவையாகவே இருக்கின்றன. முன்னணி ஊடகவியலாளர்கள், பத்தி எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள் என்போரின் நிலமையும் இவ்வாறானதே. லண்டனிலிருந்து ஒலிக்கும் பி.பி.சி இன் தமிழோசை இந்திய நலன் சார்ந்தே செயற்படுவதனை அவதானிக்கலாம். விடுதலைப் புலிகளுடன் மிகநெருக்கமாக இருந்த அரசியல் ஆய்வாளரான மு. திருநாவுக்கரசு போன்றவர்களும் இந்திய பரப்புரை வட்டத்திற்குள்ளேயே இருக்கிறார்கள்.

அண்மையில் நடந்த சம்பவம் ஒன்று தமிழ் ஊடகப்பரப்பில் இந்தியாவின் செல்வாக்கினை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது. வீரகேசரி வார வெளியீட்டின் முதன்மை ஆசிரியர் வடிவேல் தேவராஜ் தனது கட்டுரைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது விமர்சனங்களை முன்வைக்கிறார், தமிழ் குடிசார் சமூகத்தின் அறிக்கைகளுக்கு முக்கியத்தும் வழங்குகிறார் என்ற குற்றச்சாட்டினை கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும், தமிழரசுக்கட்சியில் இணைந்துள்ள முன்னாள் உதயன் ஆசிரியர் வித்தியாதரனும் கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்திடம் தெரிவித்துள்ளனர். இதனை இந்தியத் தூதரகம் வீரகேசரி நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தது. வீரகேசரி நிர்வாகம் தேவராஜ் அவர்களை பத்திரிகையாசிரியர் பொறுப்பிலிருந்து நீக்கி வேறுபதவியை வழங்கவிருக்கிறது. (இணையதளங்களில் வந்த இச்செய்தியினை வீரகேசரியுடன் தொடர்புடைய மூத்த ஊடகவியலாளர் ஒருவரும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் உறுதிப்படுத்தியுள்ளனர்)

இத்தகைய பின்னணியிலிருந்து இந்தியா பற்றிய விஸ்வரூப தோற்றப்பாடு எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்பதனை நாம் புரிந்து கொள்ளலாம். இதற்கிடையில் மேற்குலக ஊடகங்களில் இந்தியா குறித்து வெளிவரும் "உருவாகி வரும் வல்லரசு (emerging super power)", 'புதிய பொருளாதார சக்தி' போன்ற கருத்துகளும், இந்தியாவின் காலடியில் விழுவதைத் தவிர எமக்கு வேறு மார்க்கமில்லை என்ற எண்ணத்தை ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் தோற்றுவிக்கிறது.

விடுதலைப்புலிகள் இந்தியாவைப் பகைத்துக் கொண்டதால் ஏற்பட்ட விபரீதம், இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் கைச்சாத்திடப்பட்ட இராஜிவ் - ஜே.ஆர். ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டிருந்தால் ஈழத்தமிழர்கள் இப்போது மேலான வாழ்வை அனுபவித்திருப்பர் என்பதுபோன்ற கருத்துகள் திட்டமிட்டு பரப்பப்படுகின்றன. தோல்வி மனப்பாங்குடன் நிற்கும் மக்களை இலக்கு வைத்து அலங்காரமான வார்த்தைப் பிரயோகங்களுடன், இவைபற்றிய மேலோட்டமான கருத்துகளை வெளியிடுவோர் ஆழமான விவாதங்களுக்கு செல்வதைத் தவிர்த்து வருகின்றனர். பதின்மூன்றாம் திருத்தச்சட்டமூலத்தை அரசியல்தீர்வு விடயத்தில் ஆரம்பப்புள்ளியாகக் கூட ஏற்றுக்கொள்ள முடியாது என்பதனை அரசியல் அறிஞர்கள், சட்டவல்லுனர்கள் விளக்கினாலும், அரிய சந்தர்ப்பத்தை தவறவிட்டுவிட்டோமே என ஒப்பாரி வைப்போரின் எண்ணிக்கைக்கு குறைவில்லை.

இந்தியாவின் பலம் பற்றி பிரமித்துக் கொள்பவர்கள், அதன் பலவீனங்களையிட்டும் கவனம் செலுத்த வேண்டும். விடுதலைப்புலிகளை ஆயுத ரீதியாக அழிப்பதற்கு நிபந்தனையற்ற ஆதரவினை வழங்கிய இந்தியாவால், சிறிலங்காவை தன்வழிக்கு கொண்டு வரமுடியவில்லை. ஆகக் குறைந்தது வர்த்தக உறவுகளிலாவது சிறிலங்காவிடம் தமது மேலாதிக்கத்தை காண்பிக்க முடியவில்லை. அதனால் சிறிலங்காவை சீபா (Comprehensive Economic Partnership Agreement—CEPA) ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வைக்க முடியவில்லை. இது பிராந்திய வல்லாதிக்கம் என வர்ணிக்கப்படுகிற இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் தோல்வியாகவே எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

**தமிழ்நாடு - ஈழ உறவுகள் அரசியல் தலைவர்களின் குடும்ப நலன்களுக்கு அப்பால் சரியான வழியில் வளர்க்கப்படாமல், பாக்கு நீரிணைக்கு இரண்டு புறமும் உள்ள தமிழர்களால் இந்தியப் பூதத்தினை எதிர்கொள்ள முடியாது.**

பல்தேசிய இனங்கள், பல்கலாச்சாரம், பன்மொழி என வேறுபட்ட மக்களை கொண்டிருப்பது என்பவை எவ்வாறு இந்தியாவின் தனித்துவத்தை வெளிப்படுத்துகின்றதோ, அவை இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும் சவாலாக விளங்குகின்றன. மொழி வாரி மாநிலங்களைக் கொண்ட இந்தியாவில் ஒரு அரைகுறையான சமஸ்டி ஆட்சிமுறையே காணப்படுகிறது, அங்கு மத்திய அரசாங்கமே முழு அதிகாரத்தையும் வைத்திருக்கிறது. இருப்பினும் முழுமையான சமஸ்டி முறையைக் கொண்ட நாடுகளில் காணப்படுவதற்கு மாறாக, இந்தியாவில் தேசிய அளவிலான அரசியற் கட்சிகளினால் முழுநாட்டிலும் செல்வாக்குச் செலுத்தமுடியவில்லை. கடந்த அறுபத்தைந்து ஆண்டுகளில் தேசியக் கட்சிகளின் செல்வாக்கு மாநிலங்கள் மட்டத்தில் தேய்வடைந்து வருகிறது. விழைவு மத்தியில் மாநிலக் கட்சிகளின் ஆதரவு இல்லாமல் தேசியக் கட்சிகளினால் ஆட்சி அமைக்க முடியாதுள்ளது. இது இந்திய ஒருமைப்பாடு தொடர்பான அச்சத்திற்கான காரணம் மட்டுமல்ல, இந்தியாவின் வல்லாதிக்கக் கனவுகள் ஒரு போதும் நிறைவேறாது என்பதற்கு சொல்லப்படுகிற காரணமும் கூட. ("Ten Reasons Why India Will Not and Should Not Become a Superpower", Prof. Ramachandra Guha's lecture at London School of Economics)

இவ்விடத்தில்தான் தமிழ்நாட்டு அரசாங்கத்தின் முக்கியத்துவம் ஈழத்தமிழர்களுக்கு வெளிப்படுகிறது. தமிழ்நாடு-ஈழ உறவுகள் அரசியல் தலைவர்களின் குடும்ப நலன்களுக்கு அப்பால் சரியான வழியில் வளர்க்கப்படாமல், பாக்கு நீரிணைக்கு இரண்டு புறமும் உள்ள தமிழர்களால் இந்தியப் பூதத்தினை எதிர்கொள்ள முடியாது.


## ஒரு பேப்பர்
### கிடைக்குமிடங்கள்

**New Malden**
Ayngaran ............... 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan ................ 020 8605 0434
Murugan Kovil ....... 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

**Tooting**
Yhaal House ........... 020 8767 8585
Rainbow Restaurant. 020 8640 4230
Amman Kovil ......... 020 8795 4258
Niru Con.Store ........ 020 8672 3200
Ayngaran ............. 020 8540 1500
Suvai Aruvi............. 020 8543 6266
Adchaya ............. 020 8540 8192

**Croydon**
Best Foods............. 020 8684 6269
Haran Bros............. 020 8686 2552
Chennai dosa ......... 020 8665 9192
Eelam Video............ 020 8664 8351
Spice Land............. 020 8667 1700

**Lewisham**
Chandra ................. 020 8333 8680
Eelam Shop ............ 020 8690 6545
Katpagam ............. 020 8694 8810
AJ Video ................. 020 8691 8888
Sivan Kovil ............ 020 8318 9844
KRS ....................... 020 8297 9432

**Eastham**
Seelans.................. 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food ............. 020 8552 9578
Akilan Enterprise .... 020 8548 0033

**Ilford**
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan ................... 020 8514 1744
Angels ................... 020 8553 0490
Sri Supermarket .....

**Edmonton**
New Kannan Stores 020 8884 4979
Sayas..................... 020 8805 9529
Nagapoosani Temple020 8884 3333

**Walthamstow**
Vinayagar Kovil....... 020 8527 3819
Kumarans .............. 020 7609 1912
Prabas .................. 020 8509 3322

**Harrow**
Tsk food & Wine ..... 020 7622 4258
Eelavan ................. 020 8863 6160
Prabhas ................ 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods.............. 020 8423 9933
Sambal Express...... 020 8799 7171

**Wembley**
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods............... 020 8900 0100
Vahizan Disc .......... 020 8795 0648

**Ealing**
Amman kovil........... 020 8810 0835

**Greenford**
Ambiha .................. 020 8813 0967

**Coventry**
Eellakanthan Temple...02476663554

**South hall**
Thamilini C & C....... 020 8606 9900
Duvaraka C & C ..... 020 8813 9126
Palm Palace ........... 020 8574 9209
Spicy Palace restaurant 020 8574 4087
Luxmys C & C ......... 020 8571 4599
Tamilan C & C......... 020 8561 8174
Lady Margret .......... 020 8571 4434



Energy prices slashed!
BULLDOG™
Energy Drink with Taurine
helping Britain get out of the RED
THE QUEEN'S AWARDS FOR ENTERPRISE: INTERNATIONAL TRADE 2009
THE QUEEN'S AWARDS FOR ENTERPRISE: INTERNATIONAL TRADE 2010
THE QUEEN'S AWARDS FOR ENTERPRISE: INTERNATIONAL TRADE 2011
THE QUEEN'S AWARDS FOR ENTERPRISE: INTERNATIONAL TRADE 2012
35p 35p 35p
BULLDOG ENERGY DRINK SHEER ENERGY
WITH TAURINE 250ml℮
Power to topple any Bull!
SHEER ENERGY
Regular
Sugar Free
www.bulldogenergydrink.co.uk
Available at all branches
East End
BLAKEMORE WHOLESALE
SUPER BAZAAR
Dhamecha CASH & CARRY
TRS ASIA'S FINEST FOODS
HYPERAMA WHOLESALE
BA CASH & CARRY LTD
SHER BROS
GOLD STAR CASH & CARRY LTD
UNITED WHOLESALE GROCERS LTD.
NATCO CASH AND CARRY
CHETAN WHOLESALERS LTD.
CROWN
Elbrook Cash & Carry
HT&Co
Wanis THE AFRO-CARIBBEAN FOOD SPECIALISTS
HiLine
UNITED SPRINGBURN & POLMADIE
and many other leading wholesalers.
Trade enquiries welcome
email : sunmark@sunmark.co.uk
Follow us on

# 'இசோ'வாகிய 'டெசோ' 'சோ'வாக மாறும்




டெசோ (TESO) மாநாடு இசோ (ESO) மாநாடாக மாறிவிட்டது. பெயர்ப் பலகையில் தொங்கிக் கொண்டிருக்கும் 'தமிழ்' அகற்றப்பட்டு இந்திய அரசின் அச்சுறுத்தலின் மத்தியிலும் 'ஈழம்' என்கிற சொல் மட்டுமே தப்பிப் பிழைத்துள்ளது.

'ஈழம்' என்பது இலங்கையைக் குறிக்கும் வார்த்தையென, இரண்டாம் அலைக்கற்றை ஊழல் புகழ், கனிமொழி விளக்கமளிக்கிறார்.

'டெசோ' வில் இருக்கும் 'தமிழீழம்' என்பது எதனைக் குறிக்குமென்பதை, ஊடகவியலாளர் களும் கேட்கவில்லை, அவரும் விளக்கவில்லை.

மத்தியில் இருக்கும் காங்கிரஸ் கூட்டாளி களை சினங்கொள்ள வைக்கக் கூடாதென்பதில் கருணாநிதி குடும்பம் கவனமாகத் தான் இருந்துள்ளது.

**முதல்வர் ஜெயலலிதா, கருணாநிதி, வைகோ, நெடுமாறன், சீமான் போன்றவர்கள் இணைந்து ஈழ ஆதரவு அரசியல் மையமொன்றினை உருவாக்க வேண்டுமென சிலர் விரும்புகிறார்கள்.**

13ஆவது திருத்தச் சட்டத்தை தீர்வாக ஏற்றுக் கொள்ளக் கூடாது என்கிற தீர்மானத்தை இணைத்துக் கொள்ள வேண்டுமென, அதில் கலந்து கொண்ட சர்வதேச தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் உறுப்பினர் வேண்டுகோள் விடுத்தபோது, சுபவீரபாண்டியனும், கனிமொழியும் அதனை எதிர்த்துள்ளார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால், இந்திய மத்திய அரசு, அரசியல் தீர்வாக முன்மொழியும் 13ஆவது திருத்தச் சட்டத்தினை நிராகரிக்கும்படி கூறினால், தி.மு.க. அதனை ஏற்றுக் கொள்ளுமா என்பது தான்.

காங்கிரஸ்-தி.மு.க. உறவின் அடிமடியில் கை வைக்கும் விடயமல்லவா அது.

நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்கள், பொதுவாகப் பார்க்கும்போது, கடுமையானவை போன்று காட்சியளிக்கலாம். இருப்பினும், போர்க்குற்ற விசாரணை, பொதுசன வாக்கெடுப்பு என்கிற விடயங்களை நடைமுறைப் படுத்த, இந்த தமிழீழ ஆதரவாளர் அமைப்பு என்ன வேலைத் திட்டத்தை வைத்திருக்கிறது என்கிற சந்தேகம் எழுகிறது.

தீர்மானங்களை நிறைவேற்றுவது அரசியல் சடங்காக நிகழும் இக்காலகட்டத்தில், இதற்காகப் போராட முன்வருபவர்கள் குறைந்தளவிலே காணப்படுகின்றனர்.

அரசியல் கோஷங்கள் ஊடாக, ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றப் போடும் நாடகங்களாக இவை மாறிவிட்டன.

இந்திய முதலாளித்துவ 'கார்ப்பரேட்' வடிவமெடுத்துள்ள கருணாநிதியின் குடும்ப உயர் குழாம், இழந்துபோன அரசியல் செல்வாக்கை மீட்டெடுப்பதற்கு, ஒடுக்கு முறைக்கு உள்ளாகும் அவலப்படும் ஈழத்தமிழ் மக்களின் வாழ்வுரிமைப் போராட்டத்தை துருப்புச் சீட்டாக பயன்படுத்த முனைகிறது.

அதேவேளை இந்திய மத்திய அரசின் அதிகார மையத்தோடு முரண்பாடுகளை ஏற்படுத்தாதவாறு, மிகக் கவனமாக தமது காய்களை நகர்த்துகிறார் கருணாநிதி.

இவை தவிர, கருணாநிதியா, இராஜபக்சேவா, தமிழ் மக்களின் எதிரி? என்கிற திராவிடக் கழகத் தலைவர் வீரமணியின் அனல்பறக்கும் உரையாடல்களும் அம்மாநாட்டில் இடம் பெற்றிருந்தன.

இருப்பினும் நண்பராக இருந்து, எதிரியாக மாறியவர்களே மிகவும் ஆபத்தானவர்கள் என்பதை வரலாறுகள் சுட்டிக் காட்டி வருகின்றன.

நினைவில்லாத கனவுகள் போல் ஆகிவிட்டது, கருணாநிதி குறித்தான தமிழ் மக்களின் பார்வை என்பது தான் நிஜமானது.

2014ஆம் ஆண்டு நடைபெறவுள்ள இந்திய பொதுத் தேர்தலிற்கு முன்பாக, இன்னும் பல 'இசோ' மாநாடுகள் வரும்.

'கார்ப்பரேட்' சொத்துக்களை பாதுகாக்க வேண்டுமாயின் தமிழ் நாட்டில் ஆட்சியை இழந்தாலும், மத்திய ஆட்சியிலாவது தமது பங்கு இருக்க வேண்டுமென கருணாநிதி குடும்பம் நிர்ப்பந்திக்கப்படுகிறது.

ஆகவே, தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் 40 நாடாளுமன்ற உறுப்பினர்களில், அதிகளவு எண்ணிக்கை தி.மு.க.விற்கு கிடைக்க வேண்டும் என்பதே கருணாநிதியின் எதிர்பார்ப்பு.

அடுத்த தேர்தலின் போது, வட மாநிலங்களில் காங்கிரஸின் செல்வாக்கு வீழ்ச்சியடையுமாயின், மாற்றுத் தெரிவான பாரதீய ஜனதா கட்சியோடு கூட்டுச் சேர முயற்சிப்பார்கள்.

ஏற்கனவே இவ்வாறான நகர்வுகளை மேற்கொண்டவர்தான் கருணாநிதி.

அவ்வாறானதொரு நிலை ஏற்படுமாயின், காங்கிரசோடு சேராமல், ஏனைய சிறிய கட்சிகளோடு இணைந்துதான் தமிழகத்தில் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும்.

அப்போது தமது சொந்த வாக்கு வங்கிலேயே தி.மு.க. தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்படும்.

இதனை முன்கூட்டியே உணர்ந்துள்ள, தேர்தல் வியூகம் அமைப்பதில் கில்லாடியான கருணாநிதி, டெசோ ஊடாக தனது முதல் நகர்வினை மேற்கொண்டுள்ளார்.

**அரசியல் பார்வை**

**இதயச்சந்திரன்**

தமது அரசியல் எதிரியாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தாலும், 2009க்குப் பின்னர் இளைஞர்கள் மத்தியில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியுள்ள சீமானின் 'நாம் தமிழர்' இயக்கத்தை இரண்டாவது எதிர் நிலையில் வைத்துப் பார்க்கின்றது தி.மு.க.

கடந்த சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் போட்டியிட்ட இடங்களுக்குச் சென்று, அதற்கெதிரான தீவிர பரப்புரையில் ஈடுபட்ட அதன் படுமோசமான பின்னடைவிற்குக் காரண கர்த்தாவாக விளங்கினார்.

தற்போது சீமானின் பார்வை கருணாநிதியின் பக்கம் திரும்பியுள்ளது.

இவைதவிர, 'பெரியார்' வழிகாட்டி, 'பிரபாகரன்' எனது தலைவன் என்கிற சீமானின் நிலைப்பாடு, ஈழ ஆதரவு திராவிடக் கட்சிகள் மற்றும் இயக்கங்கள் மத்தியில் 'நாம் தமிழர்' இயக்கத்தோடு முரண்பாடுகளை உருவாக்கியுள்ளதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இருப்பினும், முள்ளிவாய்க்காலில் தமிழின அழிப்பிற்கு உதவிபுரிந்த காங்கிரசையும், அதற்கு ஆதரவளித்த கருணாநிதியின் தி.மு.க. வையும் தமிழக அரசியலில் இருந்து தூக்கி எறிவது தான் தனது முதன்மையான தேர்தல் அரசியல் வேலைத் திட்டமென சீமான் கூறுகின்றார்.

ஆகவே, கருணாநிதியின் தேர்தல் வியூகத்தின் முதன்மைத் தெரிவாக, ஈழ ஆதரவுப் போராட்டங்களினூடாக இளைஞர்களைப் பெருமளவில் திரட்டும் சீமான் இருப்பது ஆச்சரியமான விடயமல்ல.

ஈழ ஆதரவு நிலைப்பாட்டின் மூலம் அதனை உக்கலாமென்று மேற்கொள்ளப்படும் நகர்வு தான் டெசோ மாநாடு.

அதேவேளை, இம்மாநாடு, சர்வதேச அரங்கில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்கிற விளக்கங்கள் எல்லாம் பொருத்தமானதல்ல.

**'டெசோ' வில் இருக்கும் 'தமிழீழம்' என்பது எதனைக் குறிக்குமென்பதை, ஊடகவியலாளர் களும் கேட்கவில்லை, அவரும் விளக்கவில்லை.**

கருணாநிதியின் அடுத்தகட்ட நகர்வு, தமிழகத்தை விட்டு விரிந்து செல்லப்போவதில்லை.

அவ்வாறு நகர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமேன விரும்புவொர், கருணாநிதியின் பலவீனமான அரசியல் நிலையையும், அதிகாரத்தை தக்க வைக்க அவர் போடும் 'மனோகரா' நாடகங்களையும் புரிந்து கொள்ளவில்லை என்று நம்பலாம்.

**இந்திய முதலாளித்துவ 'கார்ப்பரேட்' வடிவமெடுத்துள்ள கருணாநிதியின் குடும்ப உயர் குழாம், இழந்துபோன அரசியல் செல்வாக்கை மீட்டெடுப்பதற்கு, ஒடுக்கு முறைக்கு உள்ளாகும் அவலப்படும் ஈழத்தமிழ் மக்களின் வாழ்வுரிமைப் போராட்டத்தை துருப்புச் சீட்டாக பயன்படுத்த முனைகிறது.**

முதல்வர் ஜெயலலிதா, கருணாநிதி, வைகோ, நெடுமாறன், சீமான் போன்றவர்கள் இணைந்து ஈழ ஆதரவு அரசியல் மையமொன்றினை உருவாக்க வேண்டுமென சிலர் விரும்புகிறார்கள்.

ஆயினும், தமிழக அடித்தட்டு மக்களின் போராட்டங்களையும், ஈழ மக்களின் விடுதலையையும், இணைத்து செயற்படும் அமைப்புகளின் ஒன்றியமே பலமாக இருக்கும்.

• Sea & Air Cargo
• Car & Container Shipping
• Best Price & Best Service
• Professional Packing Service
• Door to Door & Port

ATLAS SHIPPING
Our experience is your peace of mind
Fast, Efficient, Reliable and proffessional, Best price and Best Service.
மிக நம்பிக்கையான கப்பற் போக்குவரத்து நிறுவனம்
1x 20 Container £750
Free collection
• யாழ்ப்பாணம் வவுனியா அக்கரைப்பற்று கொழும்பு ஆகிய இடங்களுக்கும் பொதிகள் அனுப்பப்படும்
• ஆகாய கடல் மார்க்கமாக பொதிகள் அனுப்பப்படும்
• தேர்ச்சி பெற்ற பொதிகள் அமைப்பாளர்கள் சேவை
• வீட்டுக்கு வீடு சேவை
• நியாயமான விலை நம்பிக்கையான சேவை
• Loading every 10 days
• 18 daystransit
• Bureau Veritas Assistance and LC
430 High Road, Willesden, London NW10 2DA (Opst. HOMEBASE)
Tel : 020 8459 0001, 020 8459 6633 Hot line : 079 4914 3535 atlasshipping@hotmail.co.uk
WORLDWIDE SHIPPING

# அடுத்து யாரிருக்கு, படையலும், குளுத்தியும் வைக்கலாம்...

**சுகி**
*(ஒரு பேப்பருக்காக)*

ஜயகோ.. எங்களை இப்படி வேரறுத்து ஒன்றுமே இல்லாமல் ஆக்கிவிட்டார்களே..இனி என்ன செய்வது... எவ்வளவு கோபம் இருந்தால் இப்படி செய்திருப்பார்கள்..இதற்கெல்லாம் காரணம்..இருபது வருடங்களுக்கு முன் இந்தியாவிற்கு கொடுத்த அடிதான் (கொடுத்திருக்கா விட்டால் தமிழரின் பிரச்சனை உலகிற்கு தெரியமுன்பே முளையிலேயே அழித்திருப்பார்கள் என்பது வேறு கதை) அதனால் அவர்கள் மிகவும் கோபமாக உள்ளார்கள். எனவே அவர்களின் வாரிசுகளுக்கு நாம் குளுத்தி வைக்க வேண்டும். அவர்களை மீண்டும் கோபம் படுத்தாமல் அவர்கள் அநுசரித்து நடந்து தமிழ் பிரதேசத்தில் அவர்கள் சுரண்ட நினைப்பதை சுரண்டியபின், கிடைப்பதை வைத்துக்கொண்டு நல்ல பிள்ளைகளாக இருக்கவேண்டும் என்று ஒருசாராரும்,

மற்றெரு சாரார், அமெரிக்கா, பெரிய பிரித்தானியா போன்ற வல்லரசுவுகள் பெரிய மனது பண்ணி எப்போதாவது விடுதலை தரும் போது நாம் இருகரம் நீட்டி வேண்டிக்கொண்டால் போதுமானது. அது மட்டும், அவர்களுக்கு எதோ காரணத்தால் (என்ன காரணம் என்றும் அறுதியாக எவர்களுக்கு தெரியாது) எங்களின் போராட்டத்தை நசுக்கியதால், இனி போராட்டம், தமிழீழம் என்றெல்லாம் கதைப்பதோ, அல்லது அதன் குறியீடுகளாக உலகளாவியரீதியில் அறியப்பட்ட சின்னங்கள், கொடிகள் எல்லாவற்றை பிடித்து அவர்களின் கோபத்திற்கு மீண்டும் ஆளாவதோ இல்லாமல், அடிபெட்டிக்குள் வைத்து விட்டு, வேண்டுமென்றால் இங்குள்ள (தமிழர்கள் மட்டுமே வரும்) கோயிலில், தாயகத்தில் உள்ள மக்களுக்காக (போக்குவரத்துக்கு இடைஞ்சல் விளைவிக்காது, பல்லின மக்களுக்கும் தெரியாத வகையில், தமிழ் இணைத்தளங்களில் மட்டும் படங்கள் தாரளமாக வரக்கூடிய வகையில்) சாந்தி பூசைகள், யாகங்கள் மற்றும் கூட்டுப்பிராத்தனை போன்றவற்றில் ஈடுபடுவது, அவ்வல்லரசுகளுக்கு நல்ல படையல் வைப்பது போன்றது.

வல்லரசுகளை பகைத்துக்கொண்டு நாம் என்ன செய்யப்போகிறோம்? நல்ல கேள்வி, அதே நேரம் காலடியில் போய்நின்று பாதபூசை செய்து கொண்டிருப்போமேயானால், எங்களோடு கதைக்க வேண்டிய தேவையும் அவர்களுக்கு இல்லாமல் போகிறது அல்லவா. காலை நக்கிக்கொண்டிருப்பவர்களை, யாராவது தட்டி எழுப்பி கதிரையில் இருத்தி, உங்களுக்கு என்ன பிரச்சனை என்று கேட்டு, தீர்த்து வைப்பதற்கு என்ன அவசியம் இருக்கிறது. கொடுக்காவிட்டாலும் என்ன, காலை நக்குவது என்ன, குறையவா போகிறது?

ஒரு நாட்டுக்கும் பறந்து திரியாமல், ஒருவருடனும் தொலைபேசியில் அளவளவாத, எங்கையே ஒரு உலகப்படத்தில் புள்ளிபோல இருக்கும் நாட்டின் காட்டுக்குள் தனது மக்களும், அவர்களுக்கான போராட்டமும் என்று இருந்த, எமது தேசிய தலைவனை காண, ஆளுக்கு மேல் ஆள் என, நாட்டுக்கு மேல் நாடு எனச் சொல்லப்பட்டவர்களும், அவர்களின் தூதுவர்களும் போய் சந்தித்தற்கு காரணம் என்ன?

மில்லியன் கணக்கில் அவர்களின் புலன் ஆய்வுத்துறைக்கு செலவழித்து, எமது விடுதலை இயக்கத்தின் பலம் என்ன? பல்லாயிரக் கணக்கான, வேறுவேறு நாடுகளில், ஒருவருக்கு ஒருவர் தொடர்புகள் கூட அதிகம் இன்றி, வாழும் ஈழத்தமிழ் மக்களை, வாழ்க்கையில் ஒரு தடவை கூட சந்தித்திராத, மறைமுகமாக வாழும், ஒருவரின் பெயரை சொன்னதும், தெருவில் இறங்குகிறா?, பல லட்சம் பேர் ஒரு தொலைபேசி குறும் செய்தியில் கேள்வியின்றி அணிவகுக்கிறார்கள், அந்த கொடியை பார்த்துமே விடுதலை உணர்வும், தியாகமும், தன்மானமும், தூய்மை, தன்னலமின்மை என்ன பல் உணர்ச்சிகளோடு தமிழன் என்ன ஒருமிக்கிறார்கள் என அதிசயம், இது எப்பிடி சாத்திமாகிறது. படித்தவர்கள், படிக்காதவர்கள், பணத்தில் புரள்பவர்கள், ஒருநாள் கூலிக்கு வேலை செய்பவர்கள், தமிழ்ஈழத்தில் பிறந்தவர்கள், சிறீலங்காவில் கூட கால் பதிக்காத இங்கு பிறந்த அடுத்த தலைமுறை, முதியவர்கள், இளைஞர்கள், ஏன் சிறுவர்கள் என எல்லோரும் இணைவதுவும், ஒரு கொடியின் கீழ் நிற்பதுவும், நடப்பதுவும் எப்பிடி சாத்தியமாகின்றது இந்த சிறிய பகுதி மக்களால், அதிசயத்தார்கள், ஆச்சரியப்பட்டார்கள், எல்லாவற்றுக்கும் மேலாக எந்த விலை கொடுத்தும் வாங்கமுடியாத கொள்கைபற்றை பார்த்து பயந்தார்கள்.

விடுதலை அடையமுதலே இருக்கும் அரசியல்,பொருளாதார, இராணுவக் கட்டமைப்புகள், வெடிபொருள், கணிணி, இலத்திரனியல் தொழில்பிரிவு, போர்கருவி தொழிற்சாலை, இராணுவ விஞ்ஞான கல்லூரி, பரப்புரை பிரிவு, பொறியியல் துறை, விளையாட்டுத்துறை, ஆங்கில கல்லூரி, திரைப்படபுத்தக மொழிபெயர்ப்புத்துறை, கல்வி மேம்பாட்டு கழகம், கலை பண்பாட்டு கழகம், சுகாதாரப்பபிரிவு, சூழல் நல்லாட்சி ஆணையம், வனவள பாதுகாப்புப் பிரிவு, பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், பொருண்மிய மதியுரைகம், காலநிலை அவதானிப்பு நிலையம், ஒளிக்கலைப்பிரிவு என ஜம்பத்தாறு வகையான பிரிவுகளால் எதிர்காலத்தை திடமாக திட்டமிட்டு நடத்தியதோடு போரும் புரிந்தார்கள். அவர்கள் கதிரைக்கு ஆசையுள்ளவர்களாகவோ, மதிநுட்பம் இல்லாது, தன்னிறைவை நோக்கிய தூர நோக்கில்லாதவர்களாக இருந்திருந்தால், நாடுகடந்த அரசை வளர்த்தெடுத்தது போல அவர்களையும் வளர்த்தெடுத்து தாங்கள் சொல்லும் போது வாலாட்டுவதற்கெனவும், மக்கள்சக்தியை இரண்டாக உடைப்பதற்கெனவும் வைத்திருந்திருப்பார்கள். கருணாவை கொண்டு உள்ளாட்டிலும், வெளிநாட்டில் கே.பி போன்றவர்களிலும் கண்வைத்தார்கள். வெளிநாட்டு அரசாங்களுக்கு நாங்கள் அச்சுறுத்தலாக இல்லாதபோதும் எமது உறுதியையும், மக்கள் பலத்தையும், ஒருகுறியீடு ஒருகொடி என அவர்களைக்போல பகுத்தறிவுள்ள, தேசிய பற்றுள்ள இனமாக உள்ளதைப் பார்த்து பயந்தார்கள். இதை அழித்துவிட்டு, கொஞ்சம் அறிவு குறைந்த, பதவி பட்டம் என ஆசைகள் உள்ள, தமக்கு அச்சுறுத்தலாக இல்லாத ஒன்றை கொண்டுவர எண்ணினார்கள்.

## அடக்குமுறையால் போராட்டம் வந்ததா? போராட்டம் இருப்பதால் அடக்கு முறை வந்ததா?

சில பயணங்களுக்கு ஒருவழி பாதை (one way) மட்டுதான். அதில் பயணம் செய்தால், சேரும் இடம் வரும் வரை பயணம் செய்து கொண்டிருக்க வேண்டும், இடையில் திரும்பமுடியாது, ஏனெனில் அது போவதற்கு மட்டும் உரிய பாதை. விடுதலையை நோக்கிய பாதையும் அப்படித்தான். கிணறு தோண்டும் போது தண்ணி வருவது நிச்சயம், ஆனால் வருவதற்கு ஒரு அடிக்கு முன்னும் நாம் களைத்துப்போய் நிற்பாட்டி விடலாம். ஆனால் எம்மை தோண்டுவதற்கு உந்துசக்தியாக இருக்கும் சிங்கள பேரினவாதம் எம்மை நிற்கவிடாது. ஓன்றுமே இல்லாத வெளி நாட்டில், பயங்கரவாதம் என்று பயப்படுகிறார், உன்னுடைய மனைவியை அடுத்தவன் நடந்தை கெட்டவள் என்று சொன்னால், உடனே நீங்கள் தள்ளிவைத்து விடுவீர்களா? சொந்த புத்தி வேண்டாம். அவ்வளவு அடக்கமுறைக்குள்ளும் அங்குள்ள மக்கள் இந்த வெளி நாட்டில் இருக்கும் வியாக்கியானம் கதைப்பவர்களில் தங்கியிருக்காது, அங்கு நடந்து கொண்டிருக்கும் அடக்குமுறைக்கெதிராக உயிரையும் துச்சமாக மதித்து குரல் கொடுக்கிறார்கள்.

அடக்குமுறையால் போராட்டம் வந்ததா? போராட்டம் இருப்பதால் அடக்கு முறை வந்ததா? சீறிலங்கா அரசின் நடவடிக்கைகளுக்கு சாமரம் வீசுபவர்களே கொஞ்சம் சிந்தியுங்கள், சிங்கள மக்களும் கூட தலைமுறையை போருக்கு அடகு வைக்காமல் சிந்திக்கும் நேரமிது.

வாழ்க சிங்கள பேரின அடக்கு வாதம் ! வளர்க தமிழ் ஈழம் !!


IMMIGRATION SPECIALISTS



**Shalini V Bhargava** ஒரு தகுதியும் அனுபவமும் UK குடிவரவு சட்டங்களில் திறமையும் பெற்றதொரு சட்டத்தரணி ஆவர்.
நேர்மையானதும் ஒளிவுமறைவுமற்ற சேவையை அளித்தல் அவசியம் என ஷாலினி நம்புகிறார்.
**வாடிக்கையாளர்களின் திருப்தியே தனக்கு வெற்றிதரும்** என நம்புகிறார்.

Aschfords Law can offer assistance in the following areas of UK Immigration Law:

- VISITING THE UK
- SETTLING IN THE UK
- BRITISH CITIZENSHIP
- APPEALS
- FAMILY REUNION
- HUMAN RIGHTS
- DOMESTIC WORKERS
- CO-HABITATION
- MARRIAGE
- ELDERLY DEPENDENT RELATIVE
- CARER IN PRIVATE HOUSEHOLD
- ENTRY CLEARANCE
- POINTS-BASED SYSTEM
  Tier 1 – Highly skilled workers extensions, Entrepreneurs, Investors, Post Study Work
  Tier 2 – General, Minister of Religion, Sportsperson, Intra-Company Transfer
  Tier 4 – Student Visas, extension applications, switching
- SPONSOR LICENCING FOR EMPLOYERS AND INSTITUTIONS

தமிழில் விசேட சட்ட ஆலோசனை சனிக்கிழமைகளில் காலை 10.00 முதல் பிற்பகல் 13.00 வரை நடைபெறும். (By appointment only)

FREE 15 MINUTE CONSULTATION
Tel : 020 3586 4050 | Mob : 07582932830
ASCHFORDSLAW
Solicitors and Commissioners for Oaths
79 College Road, Harrow, Middlesex, HA1 1BD
Closest tube station: Harrow-on-the-Hill (Metropolitan Line)
LEGAL SERVICES WITH A PERSONAL TOUCH
www.aschfordslaw.com
Email: info@aschfordslaw.com
Authorised and regulated by the Solicitors Regulation Authority

MASS GLOBAL SHIPPING
Sea - Air - Road & Ticketing , Serving all Communities
MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK
* Packers * Movers * Shippers
Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers
We Offer the Best Services than all the Other in the trade!







உங்கள் பொருட்களை ஆகாய தரை கடல் மார்க்கமாக பாதகாப்பாகவும் துரிதமாகவும் குறைந்த செலவிலும் அனுப்புவதற்கு நம்பிக்கையுடன் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.
Special rates for Containers and Machinery
4 Collection Points :
Harrow
Watford
Knightsbridege
Croydon
T-chest Box சென்னைக்கு அனுப்ப £40 மட்டுமே
ஒரு T-chest Box அனுப்ப £40 இரண்டு T-chest Box அனுப்ப £30
FREIGHT ONLY £15.00
FREIGHT AND BOX £15.00
(Volume 4.5Cu.ft)
Wooden boxes available
Call - 0208 3862314
Hot Line 24/7- 079 4010 8177
Local Collection Charge £10.00 upto Hounslow.
Within M1 collection charge £15.00 All other area's we will offer the best rates
MASS GLOBAL SHIPPING
N0 58 THE ARCHES, HARROW, HA2 8AA
E-Mail: info@massshipping.com, Web : www.massshipping.com
*Condition Apply - No hidden charges - No bogus promotions

# புத்தர் சிலை, தேசியக் கூட்டமைப்பு, துணைக்குழுக்கள்



**சபா நாவலன்**

அவர்கள் யாரை விட்டுவைத்திருக்கிறார்கள்? தெருத்தெருவாக அனாதைகளாக அலைகின்ற ஒரு மக்கள் கூட்டத்தை உருவாக்கிவிட்டு அபிவிருத்தி செய்கிறோம் என மனித குலத்தை அசிங்கப்படுத்துகிறார்கள். கடந்த ஆண்டு மட்டும் ஆபிரிக்காவில் பல்தேசிய நிறுவனங்கள் ஆக்கிரமித்துக்கொண்ட வாழ் நிலங்களும் இயற்கை வளங்களும் ஆயிரக்கணக்கான மக்களைச் சாட்சியின்றி கொன்று குவித்திருக்கிறது. முன்பெல்லாம் மக்களைக் கொன்று குவிப்பதற்கு ஏகாதிபத்திய நாடுகளில் இருந்து துப்பாக்கிகளோடும் பரிவாரங்களோடும் வந்திறங்கிய இராணுவ அதிகாரிகளுக்குப் பதிலாக இப்போது உள்ளூர் தரகர்களின் துணையோடு மேற்குலகக் காப்ரட் கனவான்கள் வந்து போகிறார்கள்.

பட்டினியோடு போராடி தெருவோரத்தில் மரணித்துப்போகும் பச்சைக்குழந்தைகளின் பிணங்களில் மேல் நடந்து வந்து வறிய நாடுகளை வியாபாரம் என்ற பெயரில் ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள்.

**இந்தியாவைத் தவிர்த்துத் தேசிய இன ஒடுக்கு முறைக்கு உள்ளாகும் தமிழர்கள் விடுதலை பெற முடியாது என சந்திக்குச் சந்தி முழக்கமிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் இன்னோரன்ன ஆதரவாளர்களும் சலனமின்றி ஆக்கிரமைப்பை அங்கீகரிக்கின்றனர்.**

எத்தியோப்பியா என்றாலே பசியோடு மரணித்துக்கொண்டிருக்கும் குழந்தைதான் கண் முன்னால் தெரியும். அதற்கும் அப்பால் எத்தியோப்பிய அரசு பல்தேசிய நிறுவனங்களின் பாவனைக்காக 3 மில்லியன் ஹெட்டேர் நிலத்தை அடகுவைத்துள்ளது. அங்கு உற்பத்தியாகும் உயிரியல் எரிபொருள் மூலப் பொருட்கள் செத்துப்போகும் எதியோப்பியர்களுக்கானது அல்ல ஏற்றுமதி செய்யப்படுவதற்கானது.

Agrictech UK Ltd என்ற நிறுவனம் பத்தாயிரம் ஏக்கர் நிலத்தை நைஜீரியாவில் ஆக்கிரமித்துக் கொண்டது. அங்கிருந்த மக்களை வெளியேற்றி அனாதைகளாக்க மீள் குடியமர்த்தல் என்ற பெயரில் அரசு செலவு செய்த பணமோ அரை மில்லியம் டொலர்கள். நிலம் விற்பனை செய்யப்பட்டதோ அதைவிடக் குறைவான செலவில்.

நிலப்பறிப்பிற்காகவும் தமது பல்தேசியக் கொள்ளைக்காகவும் வியாபார நிறுவனங்கள் அத்தனை ஆயுதங்களையும் தமது அரசுகளின் துணையோடு பயன்படுத்தி கொள்கின்றன. சிரியாவிலும், லிபியாவிலும் அவர்கள் பயன்படுத்திக்கொண்டது இஸ்லாமிய அடிப்படைவாதம். இந்தியாவில் அவர்கள் பயன்படுத்திக் கொள்வது இந்து அடிப்படைவாதம். இலங்கையில் சிங்கள பௌத்த அடிப்படைவாதம். இவை அனைத்துமே சமூகவிரோதப் பயங்கரவாதங்கள்.

இலங்கையில் போர்க்குற்றங்களை முன்வைத்து அமெரிக்க, ஐரோப்பிய இந்திய அரசுகள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து பெரும் சிரமங்கள் இல்லாமலேயே மக்களின் நிலத்தைப் பறிமுதல் செய்கின்றன. சிறுகச் சிறுக, பல்வேறு காரணங்களை முன்வைத்து நிலங்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன. கடந்த வாரம் இலங்கைக்குச் சென்ற இந்திய வர்த்த அமைச்சர் குழு இந்தியாவிற்கு திருகோணமலையில் சிறப்புப் பொருளாதார வலையம் ஒன்றை உருவாக்குவதற்கான ஒப்பந்ததில் கைச்சாத்திட்டுள்ளது.

இந்தியாவைத் தவிர்த்துத் தேசிய இன ஒடுக்கு முறைக்கு உள்ளாகும் தமிழர்கள் விடுதலை பெற முடியாது என சந்திக்குச் சந்தி முழக்கமிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் இன்னோரன்ன ஆதரவாளர்களும் சலனமின்றி ஆக்கிரமைப்பை அங்கீகரிக்கின்றனர்.

வன்னியிலும், யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் எத்தியோப்பியக் குழந்தைகளையும், உல்லாசப் பயணிகளுக்கு இரையாகும் பெண்கள் சமூகத்தையும் இந்தப் பல்தேசிய நிறுவனங்கள் ராஜபக்ச அரசினதும் அதன் துணை குழுக்களின் துணையோடு உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஏற்கனவே மன்னார் கடற்பகுதியிலும், கிளிநொச்சியிலும், வடக்கிலும் நிலப்பறிப்பு சிங்கள பௌத்த புனித நிலத்தின் பெயரால் நடைபெறுகின்றது.

ஆபிரிக்காவிலும், இந்தியாவிலும் பல்தேசிய நிறுவனங்களின் நிலப்பறிப்பு பல எதிர்ப்புக்களையும் போராட்டங்களையும் சந்தித்தே இடம்பெறுகிறது. நிலப்பறிப்புச் சாத்தியமற்றுப் போன பல சந்தர்பங்களைக் கோடிட்டுக்காட்டலாம். 30 வருட ஆயுதப்போராட்டம் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் வடக்குக் கிழக்கில், சரியான புள்ளிவிபரம் கூடத் தெரியாமல் புற்றுநோய் போன்று மக்களின் வாழ் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன.

இந்த ஆக்கிரமிப்பிற்குப் பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியிலிருந்து எதிர்பு எதுவும் வந்துவிடாதவாறு பாதுகாத்துக் கொள்வதற்காக சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனை பயன்படுகிறது. அதற்காக புத்தர் சிலைகளும் விகாரைகளும் தமிழர் நிலங்களில் இரவோடு இரவாக முளைக்கின்றன. மசூதிகள் அழிக்கப்படுன்றன.

நஞ்சூட்டப்பட்ட பௌத்த சிங்கள சிந்தனைக்குள் சிங்கள மக்களை ஒடுக்கி வைத்திருந்தால் மட்டுமே நாட்டின் ஒரு பகுதி தாரைவார்த்துக் கொடுக்கப்படுவதை எதிர்ப்பின்றி மகிந்த பாசிசம் நிகழ்த்த முடியும்.

பல்தேசிய நிறுவனங்களும், அவற்றின் கட்டளைக்குள் இயங்கும் மேற்கின் ஏகபோக அரசுகளும், இந்திய அரசும், சீன சர்வாதிகாரிகளும் இலங்கை அரசுடன் இணைந்து நடத்தும் இந்தப் பயங்கரவாதத்தைப் புரிந்துகொள்ளாத புலம்பெயர் 'தேசிய வியாபாரக்' குழுக்கள் இனவாதிகளாக உலாவருகின்றனர். சிங்கள மக்களை பௌத்த சிங்கள உணர்வுகளிலிருந்து விடுதலை செய்வதற்குப் பதிலாக அதனை மேலும் உரமிட்டு வளர்க்கவே இவர்கள் முற்படுகிறார்கள். மகிந்த அரசின் இருப்பிற்குத் தேவையான உண்மையான நண்பர்கள் இவர்கள்.

அமரிக்காவையும் அதன் பல்தேசிய நிறுவனங்களையும் எதிர்ப்பின்றி இலங்கைக்குள் நுளைத்துத்தேசிய இனத்தைக்காட்டிக்கொடுத்தவர்களில் இவர்கள் பிரதானமானவர்கள். சற்று உரத்த குரலில் பேசினால் 'தலைவர் வருவார்' என்று தப்பித்துக்கொள்ளும் பாதகர்கள்.

ஏனைய நாடுகளைப் போன்றே ஈழத் தமிழர்களும் நிலப்பறிப்பிற்கும், 'அபிவிருத்தி அழிப்பிற்கும்' எதிரான தன்னிச்சையான போராட்டங்களை நடத்துகின்றனர்.

கிளிநொச்சியில், யாழ்ப்பாணத்தில் மட்டக்களப்பில், என்று மக்களின் தன்னெழுச்சியான போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.

இந்தப் போராட்டங்களை ஒடுக்குவதற்கும், நேரடியாகக் காட்டிக்கொடுப்பதற்கும் டக்ளஸ் குழு, பிள்ளையான் குழு, கருணா குழ், கே.பி குழு என்று தமிழர் குழுக்கள் மிகத் தீவிரமாகச் செயற்படுகின்றன.

கிளிநொச்சியில் போராட்டம் நடத்தியவர்களை டக்ளஸ் தேவாந்தா நேரடியாகவே சென்று மிரட்டியுள்ளார்.

இந்த அரச துணைக் குழுக்களின் சமூக விரோதச் செயற்பாடுகளுக்கு மனிதாபிமான முலாம் பூசுவதற்கென்றே ஒரு 'புத்தி சீவிகள்' குழாம் சிரித்த முகத்தோடு அலைகிறது. சாதி வாதிகளும், பிரதேச வாதிகளும் அரச துணைக் குழுக்களை ஜனநாயக மயப்படுத்துகிறார்கள்.

இவர்களுக்கு எல்லாம் இடைத்தரகர்களாகச் செயற்படும் தன்னார்வ நிறுவனங்களின் அழிவு அரசியல் இன்னொரு புறத்தில் மக்களைச் சூறையாடுகின்றது.

**பட்டினியோடு போராடி தெருவோரத்தில் மரணித்துப் போகும் பச்சைக் குழந்தைகளின் பிணங்களில் மேல் நடந்து வந்து வறிய நாடுகளை வியாபாரம் என்ற பெயரில் ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள்.**

தற்செயலாக அரச துணைக் குழுக்களையும் மீறி மக்கள் போராட்டம் முன்னெழுமானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 'காவல் தெய்வங்களாகத் தொழிற்படும்.

அனைவரும் மறந்து போன கூட்டமைப்பின் மாநாட்டுத் தீர்மானத்தின் இறுதியும் பத்தாவதுமான பகுதி கூறுவது இதையே.

**அமரிக்காவையும் அதன் பல்தேசிய நிறுவனங்களையும் எதிர்ப்பின்றி இலங்கைக்குள் நுளைத்துத் தேசிய இனத்தைக் காட்டிக்கொடுத்தவர்களில் இவர்கள் பிரதானமானவர்கள். சற்று உரத்த குரலில் பேசினால் 'தலைவர் வருவார்' என்று தப்பித்துக்கொள்ளும் பாதகர்கள்.**

மக்கள் பிரச்சனைகளை கூட்டமைப்பு பேசித் தீர்த்துக்கொள்ளும், அப்படிப் பேசித் தீர்த்துக் கொள்ள இயலாத சூழலில் அன்னிய சக்திகளை அழைக்கும். எது எவ்வாறாயினும் இனிமேலும் ஒரு போராட்டம் 'எந்த வடிவிலாயினும்' உருவாகிவிட்டாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதே கூட்டமைப்பு தமது பத்தாவது பகுதியான மாநாட்டுத் தீர்மானத்தில் முன்வைக்கிறார்கள்.

மக்கள் போராட்டத்தை அழிப்பதாகத் தீர்மானித்து மக்கள் முன் வாக்குப் பொறுக்கத் தயாராகிவிட்ட கூட்டமைப்பு ஈழத் தமிழர்களின் அரசியல் தலைமை அல்ல.

அது இனிமேல் தான் உருவாக வேண்டும். புதிய மக்கள் சார்ந்த அரசியல் வேலைத் திட்டத்தோடு ஈழத்தில் அரசியல் தலைமையின் அவசியம் அவசரமானது. தேர்தலைப் புறக்கணிப்பதிலிருந்து அது ஆரம்பமாகலாம்.

Come Directly to a...
TAMIL SPEAKING BARRISTER
For expert legal advice & represenation in Criminal and Immigration law

Criminal Litigation
- Money Laundering
- Serious Fraud
- VAT / Tax investigations
- Confiscation & proceeds of crime
- Appeals against conviction and sentence.
- Regulatory / Health & Safety Investigations

Immigration
- Nationality
- Asylum
- EU Law
- Visas
(Tiers1-5, Resident Permits, Indefinite Leave to remain)
- Judicial review

அனைத்து சட்ட ஆலோசனைகளுக்கும்...

Services Includes:

Flexible consultancy times & police station representation can be arranged(24 hours).

சகல விதமான குடிவரவு ஆலோசனைகளையும் நிபுணத்துவத்துடன் செய்து தர அழையுங்கள்....

For Appointments
Contact: 07837 450397
Email: mganesan@furnivallaw.co.uk
Chambers:
Furnival Chambers, 32 Furnival Street, London, EC4A 1JQ.



Muthupandi Ganesan
முத்துப்பாண்டி கணேசன்
LL.B(Hons)(Wales),LL.M(Criminal Litigation)
Barrister-at-Law [Direct Access]

# சிரியா; அசாத்தின் ஆட்சி சரிகிறதா ?




## வேல் தர்மா

*(ஒரு பேப்பருக்காக)*

விமானப்படை வலு போரை வெல்லும் என்பதை அலேப்பே பிராந்தியத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் மீளக் கொண்டுவந்ததன் மூலம் சிரிய அதிபர் பஷார் அல் அசாத்தின் படைகள் நிரூபித்துள்ளன. ஆனால் சிரியாவில் இருந்து தப்பி ஓடிய சிரிய முன்னாள் பிரதமர் ஹ்ஜாப் ரியாத் சிரியாவின் 30% நிலப்பரப்பை மட்டுமே பஷார் அல் அசாத்தின் படைகள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றன என்கிறார். ஆனால் சில ஊடகவியலாளர்கள் ஹ்ஜாப் ரியாத் சற்று மிகைப்படுத்திக் கூறுகின்றார் என்கின்றனர். அரபு இஸ்ரேலிய மோதலிலும் பார்க்க சியா முசுலிம்களுக்கும் சுனி முஸ்லிம்களுக்கும் இடையிலான மோதல் வலுத்து வருகிறது. இது அரபு நாடுகளிடை ஒரு பெரும் குழப்பத்தை உருவாக்கலாம். துனிசியப் புரட்சியுடன் தொடங்கிய அரபு வசந்தம் 2011 மார்ச் 15-ம் திகதி சிரியாவிற்கும் பரவியது.

### ■ சிறுபான்மை ஆட்சி

சிரியாவில் பெரும்பான்மையான இனக்குழுமம் சுனி முஸ்லிம்கள். ஆனால் அங்கு ஆட்சியைக் கையில் வைத்திருப்பவர்களும் அதிகமான அரச படையில் இருப்பவர்களும் அலவைற் முஸ்லிம்கள் என்ற இனக் குழுமம். அலவைற் இனக்குழுமம் மொத்த மக்கள் தொகையில் 20% மட்டுமே. கிளர்ச்சிக்காரர்களில் பெரும்பான்மையானவர்கள் சுனி முஸ்லிம்கள். அலவைற் இனக்குழுமம் கிரித்தவர்களும் மோதாமல் அவர்களையும் அணைத்து நடக்கிறது. சிரிய அதிபர் பஷார் அல் அசாத பதிவியில் இருந்து விலக அனுமதித்தால் அது அலவைற் இனக்குழுமத்திற்கு பெரும் அழிவை ஏற்படுத்தும். அதனால் அலவைற் இனப் படையினர் கிளர்ச்சிக்காரர்களைக் கொல்லாவிட்டால் கொல்லப்படுவீர்கள் என்ற நிலையில் உறுதியாகப் போராடுகின்றனர். பஷார் அல் அசாத்திற்கு எதிரான கிளர்ச்சிக்காரர்களுக்கான ஆதரவு மன்னராட்சி நிலவும் சவுதி அரேபியாவிலிருந்தும் கட்டாரிலிருந்தும் கிடைக்கின்றன. இதனால் பஷார் அல் அசாத்திற்குப் பிறகு ஒரு நல்ல மக்களாட்சி சிரியாவில் நிறுவப்படுமா என்ற சந்தேகம் எழும்பி உள்ளது.

### ■ சிரியக் கிளர்ச்சியாளர்களிடை பற்பல கூறுகள்

சிரிய விடுதலைப் படை, சுதந்திர சிரியப்படை, சிரியத் தேசிய சபை, தேசிய ஒருங்கிணைப்புக் குழு, சிரியத் தேசப் பற்றாளர் குழு எனப் பல குழுக்களாக சிரியக் கிளர்ச்சியாளர்கள் பிரிந்து நிற்கின்றனர். அம்மான், பாரிஸ். பிரஸல்ஸ் ஆகிய நகரங்களில் பிளவடைந்த சிரியக் கிளர்ச்சிக்காரர்களிடை ஒற்றுமையை ஏற்படுத்த பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சிரியத் தேசிய சபை ஒரு கதிரைக் கனவான்களின் கும்பல் அது களத்தில் இறங்கிப் போராடுவதில்லை என்று மற்றவர்கள் குற்றம் சுமத்துகின்றனர். இதனால் இவர்களிடம் இருந்து சிலர் பிளவு பட்டு சிரிய தேசப்பற்றாளர் குழுவை ஆரம்பித்தனர். சிரியத் தேசிய சபையினர் ஒரு படைத்துறைச் சபையை அமைத்து அது ஒரு படைத்துறை அமைச்சாக செயற்படும் என்றனர். சுதந்திர சிரியப் படையினர் இது தம்முடன் கலந்து ஆலோசிக்காமல் செய்யப்பட்டது என்று முரண்படுகின்றனர். சிரியாவின் இட்லிப் மாகாணத்தில் செயற்படுக் குழுவினரிடை மட்டும் Martyr Hisham Brigade; the Ibn Malik Martyrs Brigade; the Maarratt al-Numan Martyrs Brigade; the Salhauddin Brigade> the Fallujah Brigade என்னும் ஒன்றுடன் ஒன்றுமையில்லாத குழுக்கள் இருக்கின்றன. அமெரிக்க, சவுதி அரேபிய, துருக்கி உளவுத் துறையினர் இப்பிரிவுகளை ஒன்றாக்குவதற்கு பெரும் முயற்சி செய்கின்றனர்.

### ■ பாவியான கோபி அனன்

பதினேழாயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்ட பின்னர் சிரியாவில் சமாதானத்தைக் கொண்டு வர என ஐக்கிய நாடுகள் சபையால் நியமிக்கப்பட்ட சிறப்புத் தூதுவரான அதன் முன்னாள் பொதுச் செயலர் கோஃபி அனன் தனது ஆறு அம்சத் திட்டத்தை சிரிய ஆட்சியாளர்களும் கிளர்ச்சிக்காரர்களும் ஏற்றுக் கொள்ளாததால் பதவி விலகினார். அவர் ஈரான் சென்று பேச்சு வார்தை நடாத்தியது வட அமெரிக்காவையும் மேற்கு ஐரோப்பியாவையும் கடும் ஆத்திரத்திற்கு உள்ளாக்கியது. பல தரப்பில் இருந்தும் கோபி அனன் மீது கண்டனக் கணைகள் பாய்ந்தன. ஐநா பாதுகாப்புச் சபைமீது காட்டமாகக் குற்றம் சுமத்திவிட்டு கோஃபி அனன் பதவி விலகினார். பின்னர் ஐநாவின் பொதுச் சபை கூட்டப்பட்டு அதில் பாதுகாப்புச் சபை சிரியப் பிரச்சனையில் எதுவும் செய்யாமையைக் கண்டிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டன. இது பாதுகாப்புச் சபையில் சிரிய ஆட்சியாளர்களுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட மூன்று தீர்மானங்களையும் தமது இரத்து அதிகாரம்(வீட்டோ) மூலம் தடை செய்த இரசியாவையும் சீனாவையும் ஆத்திரப்படுத்தியது. தற்போது சிரியாவில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை இருபத்தி மூன்றாயிரமாக அதிகரித்துள்ளது. அரபு லீக்கிற்கும் ஐநாவிற்குமான சிரியப் பிரச்சனையை கையாளும் புதிய தூதுவரை நியமிப்பதில் இழுபறி நிலவுகிறது. சிரியா அல்ஜீரிய இராசதந்திரி லக்தர் பிரஹ்மியை ஏற்றுக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### ■ தயங்கிய மேற்கு தவிக்கிறது

சிரியக் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவு அளிக்கத் தயங்கி மட்டுப்படுத்தப்பட்ட ஆதரவை மட்டும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் ஐக்கிய அமெரிக்காவும் வழங்கி வந்தன. பஷார் அல் அசாத்திற்குப் பிறகு ஒரு நிலையான அரசு அமையுமா? சிறுபான்மை கிருத்தவர்களின் பாதுகாப்பு அசாத்திற்கு பிறகு எப்படி இருக்கும்? அசாத்தின் பின்னர் இசுலாமிய அடிப்படைவாதிகள் சிரியாவைக் கைப்பற்றுவார்களா? நாம் வழங்கும் படைக்கலன்கள் புனிதப் போர்வாதிகளின் கையில் போய்ச் சேருமா? இப்படியான சந்தேகங்கள் ஈராக், எகிப்து ஆகியவற்றில் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் ஐக்கிய அமெரிக்காவும் பெற்ற பட்டறிவில் இருந்து எழுந்தமையே அவர்கள் சிரியக் கிளர்ச்சியாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆதரவு வழங்கக் காரணங்களாய் அமைந்தன. ஆனால் இப்போது சிரியக் கிளர்ச்சியாளர்களுக்கு வளைகுடா நாடுகளில் இருந்து கிடைக்கும் நிதி மற்றும் படைக்கல ஆதரவு புனிதப் போர்வாதிகள் கைகளில் போய்ச் சேருகின்றன என்பதை உணர்ந்து மேற்கு ஐரோப்பிய நாடுகளும் ஐக்கிய அமெரிக்காவும் பதற்றம் அடைந்துள்ளன. அத்துடன் அலெப்பே பிராந்தியத்தை அசாத்தின் படைகள் மீளக் கைப்பற்றியதும் அவர்களை தமது தந்திரோபாயத்தை மீள் பரிசீலனை செய்ய வைத்துள்ளன.

### ■ பிராந்திய ஆதிக்கப் போட்டி

சிரியாவில் பஷார் அல் அசத்தின் ஆட்சி கவிழ்ந்தால் அது ஈரானின் ஆட்சியில் இருப்பவர்களுக்கும் ஆபத்தாக அமையும் அரபு நாடுகளின் படைப்பலச் சமநிலை மேற்கு நாடுகளுக்குப் பெரும் சாதகமான நிலையை உருவாக்கும் என்று சீனாவும் இரசியாவும் அஞ்சுகின்றன. ஐநா பொதுச் சபைத் தீர்மானத்தை அடுத்து இரசியா சிரியாவிற்கு மூன்று கடற்படைக் கலன்களை அனுப்பியதாகச் செய்திகள் வெளிவந்தன ஆனால் இச்செய்தியை இரசியா மறுத்துள்ளது. சில ஆய்வாளர்கள் சிரிய அதிபர் பஷார் அல் அசாத் தனக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியை சாதுரியமாக சுனி-அலவைற் இனக்குழும மோதலாக மாற்றிவிட்டார் என்கின்றனர். அசாத்தை பதவியில் இருந்து அகற்றுவதில் சிரியக் கிளர்ச்சியாளர்களும் மேற்குலக நாடுகளும் அமெரிக்காவும் இருக்க அதற்கு ஆதரவாக சவுதி அரேபியா போன்ற நாடுகள் இருக்க அசாத்தை பதவியில் இருந்து அகற்ற விடுவதில்லை என்ற உறுதியில் இரசியாவும் சீனாவும் ஈரானின் துணையுடன் இருக்க சிரியாவில் இரத்தக்களரி மோசமடைவது நிச்சயம். தேர்தல் பிரச்சாரத்தில் இருக்கும் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவிடமிருந்து சிரியா தொடர்பான தீர்க்கமான முடிவையோ அல்லது பிரச்சனைக்கு உரிய படை நடவடிக்கைகள் எதையும் இப்போது அமெரிக்கவிடம் இருந்து எதிர்பார்க்க முடியாது, மோதலைத் துருக்கிக்கும் பரவ விட்டு பஷார் அல் அசாத்தை தொலைக்கும் தந்திரத்தை அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் கையாளலாம்.

### ■ அமெரிக்காவின் இரட்டை வேடம்

மற்றத் தீவிரவாத அமைப்புக்கள் ஆட்கடத்தல் செய்தால் அதை பயங்கரவாத நடவடிக்கை எனக் கண்டிக்கும் ஐக்கிய அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் சிரிய அரசுக்கு எதிரான கிளர்ச்சிக்காரர்கள் ஈரானியர்களைக் கடத்தி வைத்திருப்பதை கண்டிக்கவில்லை. இக்கடத்தல்கள் சிரியக் கிளர்ச்சியாளர்களுக்கு ஒரு பிடியைக் கொடுத்துள்ளன என்று சில பத்திரிகைகள் பாராட்டுகின்றன. ஈரானிய செய்தி நிறுவனமான ஃபார்ஸ் சிரியக் கிளர்ச்சிக்காரர்கள் சியா முசுலிம்களைக் கண்டபடி வெட்டிக் கொல்கின்றனர் என்கிறது. மேலும் ஃபார்ஸ் செய்தி நிறுவனம் சவுதி அரேபிய மதகுரு முகமட் அல் அரிஃபி சிரியக் கிளர்ச்சிக்காரர்களை அவர்களது கொடுஞ் செயல்கள் அடங்கிய படங்கள் காணொளிப் பதிவுகள் வெளியில் வராமல் பார்த்துக் கொள்ளும் படி அறிவுறுத்தியுள்ளார் என்கிறது. ஈரான் தனது நாட்டிலிருந்து சமய யாத்திரை மேற்கொண்டவர்களை சிரியக் கிளர்ச்சிக்காரர்கள் கைது செய்து வைத்திருக்கிறார்கள் என்கிறது. சிரியக் கிளர்ச்சிக்காரர்கள் தாம் கைது செய்து வைத்திருக்கும் ஈரானியர்கள் அல் அசாத்தின் படைகளுடன் இணைந்து போர் புரிபவர்கள் என்கின்றனர்.

### ■ சிரியக் கிளர்ச்சி துருக்கிக்குப் பரவுமா?

சிரியாவில் பெரும்பான்மையான இனக்குழுமம் சுனி முஸ்லிம்கள். ஆனால் அங்கு ஆட்சியைக் கையில் வைத்திருப்பவர்களும் அதிகமான அரச படையில் இருப்பவர்களும் அலவைற் முஸ்லிம்கள் என்ற இனக் குழுமம். அலவைற் இனக்குழுமம் மொத்த மக்கள் தொகையில் 20% மட்டுமே. கிளர்ச்சிக்காரர்களில் பெரும்பானமையானவர்கள் சுனி முஸ்லிம்கள். சிரியாவில் நடப்பது ஒரு சுனி-அலவைற் இனக் குழுமங்களுக்கு இடையிலான மோதல்களாகவே கருதப்படுகிறது, துருக்கியில் பெரும்பான்மை இனத்தவர் சுனி முஸ்லிம்கள். அண்மைக் காலங்களாக அவர்கள் தமது நாட்டை சுனி முஸ்லிம் இனக்குழுமங்கள் மயப்படுத்தி வருகின்றனர். ஆனால் துருக்கியில் இருபது மில்லியன் அலவைற் முஸ்லிம்கள் வசிக்கிறார்கள். சிரிய உள்நாட்டுப் போரினால் சிரியாவில் இருந்து துருக்கிக்குத் தப்பி ஓடிய சுனி முஸ்லிம்கள் அங்குள்ள அலவைற் இனத்தவர்கள் மேல் தமது ஆத்திரத்தைக் காட்டுகிறார்கள். இது சிரிய உள்நாட்டுப் போர் துருக்கிக்கும் பரவுமா என்ற கேள்வியை எழுப்பி உள்ளது.

### ■ எண்ணப்படும் அசாத்தின் நாட்கள்

ஐக்கிய அமெரிக்க மூதவை உறுப்பினர்கள் சிலர் சிரியாவில் தமது நாடு நேரடியாகத் தலையிட வேண்டும் என்று குரல் கொடுக்கின்றனர். அமெரிக்க அரசச் செயலர் ஹிலரி கிளிண்டனும் துருக்கிக்கு ஒரு திடீர்ப்பயணத்தை மேற் கொண்டார். பிரான்சின் முன்னாள் அதிபர் பிரான்சு உடனடியாக சிரியாவில் நேரடித் தலையீட்டை மேற்கொள்ள வேண்டும் என்கிறார். அமெரிக்கா அதிபர் தேர்தலுக்கு முன்னர் ஒரு நிகராளிப் போரை (Proxy war) தனது ஆதரவு நாடுகள் மூலம் செய்து அசாத்தைப் பதவியில் இருந்து அகற்றலாம். அல்லது தேர்தலின் பின்னர் ஒரு நேரடித் தலையீட்டை மேற் கொள்ளலாம்.






# Situation in Jaffna As I Saw



By : Siva

Yes, I had lived in Jaffna and travelled a lot in the North from April 2011 to August 2011, and again for one month in April 2012. My experience was very bitter. It was not the place it used to be, and now it is a place under the Sinhala rule and influence.

The author talks about the difficulties of day labourers. Life may be difficult for them, yet you cannot find any Tamil labourer for whatever wage you pay. I also noticed that over fifty percent of the Tamils have moved out of Jaffna and are living in the South. I have known areas in Colombo while I was a student, where not a single Tamil lived. Now those areas are over 75% full of Tamils, and you can hear Tamil being spoken everywhere in Colombo and ladies going about wearing thalis, shalwar Kameez, and pottus.

In Jaffna there are many Sinhala labourers working as carpenters, masons, black smiths, on road, house and building constructions. Two of my relatives were building houses in Tinnavely and Nallur, and they were employing Sinhala labourers from the South. These labourers come and live in sheds at the sites and work on the projects. I asked why Tamil labourers are not employed, and the reply was that no one is available, or that they were not prepared to work. I had noticed that most Tamil youths were living in a dreamworld expecting one of their relatives, or friends from a foreign land to sponsor them and take them to that country. Besides, most of them get money from a foreign country and they keep squandering it. I get very angry when we in foreign countries find jobs with great difficulties, and are careful with the expenses, here they squander it away. Everyone including the postal peon and the cleaning lady has a cell phone, and they spend hours taking foreign calls and talking nonsense, whereas we do not have one, and if we have we are careful in what we are using it for. I was travelling one night by coach from Colombo to Jaffna, and this woman seated behind was on the cell phone taking many calls throughout the night, and I could not have a wink of sleep. In some families each family member has a cell phone, in addition to a land phone at home. To contact a family member within the house, or a neighbour they use the cell phone without any hesitance. Many youths ride motor bikes bought with money sent from a foreign country. Like this I can go on quoting many examples. When we send money we should specify what it is for and to not spend on any other, and send the required amounts and not more. Of course foreigners travelling to these parts should also behave and act sensibly. When they go there, they want to show off in a big way. They go for all the luxuries that the locals cannot afford. They want A/C rooms and A/C vehicles to travel around. They take a vehicle to go even a small distance, and will not take the public transport at all. They will hire a private A/C vehicle to go from Colombo to Jaffna even though there are very comfortable public luxury coaches. These things instill in the minds of the locals that foreigners pick gold from the land and river.

Harassment by the Security Forces. Again on the surface it is true that no harassment occurs, but you have to live and experience the life in Jaffna to see it. There is a reduction in the number of forces that was stationed after the war. However, everywhere they are the lords and masters, and our people bend down and lick their feet when they see them. They have the superiority complex and speak with authority in Sinhala only to the civilians and shop owners. I have seen them entering shops and speaking only Sinhala, and the shop owners struggling to answer in broken Sinhala. They come inside the houses to check (don't know what they check!), and speak only Sinhala. Once three of them came to check my place and I pretended not knowing Sinhala. Then they asked me if I cannot find at least a neighbour or someone who could speak Sinhala. Eventually when they left, one of them plucked a mango fruit from a low hanging branch.

The Police are another Superior lot. All inquiries and entries are made in Sinhala. Once I saw a police officer on the road. Then this young boy came riding a motor bike. He stopped him and had a few words in Sinhala. Then he requested him to take him somewhere and drop him. The boy meekly obliged to his request. I told this to another person in Jaffna and he told me that it happens to the Auto rickshaws also. They stop and take a ride and not pay for the ride.

However, everywhere they are the lords and masters, and our people bend down and lick their feet when they see them.

On Full moon days and other Buddhist religious days, people will be woken up to the chanting of the pirith blasting over loud speakers for two or three days from around 4.00am in the mornings from the Jaffna Naga Vihara Temple. I have lived in many places in the South too where this does not occur, and I find this to be a practice to spite the Tamils and to say that Tamils are second class citizens who have to accept whatever the Sinhala do, more than being a religious practice. A peaceful and compassionate religion is being used to show power and authority over another group of people.

Go to the cultural and religious capital Nallur at festival times and you can hear vendors selling their wares shouting, "amba labai, amba labai", "thambili labai, thambili labai" etc. etc. For all this I have not heard anyone selling their wares shouting in Tamil.

Well, this in short is the situation in Jaffna that I experienced.



# US, India face Sri Lanka challenge

By - Anuradha Sharma and Vishal Arora

Sri Lanka is not only refusing to bring about reconciliation in the north of the island, where tens of thousands of civilians were killed in the last phase of the war against ethnic Tamil rebels in 2009, it is also fast descending towards dictatorship.

A key question surrounding the country's future is whether its two main trading partners, the United States and India, have the leverage to deter Colombo, or can it resist international pressure with China's help?

Three years after the war ended, the government of President Mahinda Rajapaksa has deployed military personnel in large numbers in Sri Lanka's north and east, formerly under the control of the Liberation Tigers of Tamil Eelam (LTTE).

"The construction of large and permanent military cantonments, the seizure of private and state land, and the military-led cultural and demographic changes - all threaten Sri Lanka's fragile peace," Alan Keenan, International Crisis Group's senior analyst, said in a recent report. "Instead of giving way to a process of inclusive, accountable development, the military is increasing its economic role, controlling land and seemingly establishing itself as a permanent presence."

" ... Human rights groups and opposition leaders warn that the country is descending toward dictatorship, with dissent brutally crushed, the media cowed and the minority Tamils, whose insurrection caused the war in the first place, still treated like second-class citizens," writer Simon Denyer noted in an article in The Washington Post on July 13.

After the war, the president appeared to be extremely insecure, anticipating - correctly - that he would lose office if genuine democracy remained. People in the north and the east were never part of his vote bank, and now the southerners weren't too happy as the huge financial strain of the war hit the country's economy.

The regime had sought to justify the war with the promise that it would lead to peace and economic development. On the contrary, demands for higher salaries and protests over price hike took place despite the government's heavy-handed response.

The only way Rajapaksa can secure his position, and perhaps life, is by remaining in power with an iron hand. But masses cannot be expected to tolerate authoritarianism for very long in the absence of economic wellbeing, perhaps the biggest postwar challenge for Rajapaksa. This makes the United States and India indispensable.

However, the US and India appear cautious in dealing with Colombo, fearing they might push Sri Lanka even closer to China if they fail to balance the stick with the carrot.

For example, the UN Human Rights Council in March adopted a US-backed resolution - and India voted for it - urging Sri Lanka to investigate alleged abuses during the final phase of war with Tamil Tigers.

But in June, the United States Trade Representative decided to continue trade benefits granted for Sri Lanka, which were facing possible suspension because of labor concerns. In July, India and the US agreed to provide enhanced training facilities for Sri Lankan military personnel to "strengthen the security of sea lanes in the Indian Ocean".

The fear of India and the US is based on the high strategic importance of the Indian Ocean Region, where China has managed to have an edge over them.

China has been eyeing the Indian Ocean as a future sphere of influence, said Commodore R S Vasan IN (Retd), Head of Strategy and Security Studies at Center for Asia Studies in Chennai, India. China has used the issue of piracy in the west Arabian Sea and in Somali waters to legitimize its presence in the Indian Ocean, he said. "Beijing has maintained a presence of its navy units in the Gulf of Aden on anti-piracy missions to protect its own shipping that carries vital supplies to China."

While India dilly-dallied in taking up the offer to help build the Hambantota water port in Sri Lanka, China grabbed the opportunity to have an outpost at the southern most tip of the island.

"On the surface, it is a commercial investment with soft loans and assistance," Vasan said. "Deep underneath, that would provide leverages to China to use the facilities when the situation so demands."

From the Chinese point of view, deep sea ports - whether in Gwadar in Pakistan, Hambantota in Sri Lanka or others in Bangladesh and Myanmar - would provide options for the turn-round of ships and also to have monitoring posts to build up intelligence/database on the activities in the region, he said.

India is concerned about the advances of China, which appears to be encircling India. "India enjoys a geographical advantage with its reach and location," Vasan said.

The Indian Navy's recent commissioning of new air station INS Baaz in Campbell Bay in Andaman and Nicobar Islands (see India extends Malacca Strait reach, Asia Times Online, August 8, 2012), along with the existing surveillance architecture under the control of the Tri Services command, can ensure that no traffic, including Chinese vessels, leaves or enters the Indian Ocean through the Malacca Straits.

"The Indian Navy is more than capable of looking after its interests [but only] as long as the nuclear thresholds are not crossed."

For the US, the recent emphasis on the pivot to Asia Pacific brings in renewed interest of the superpower in the island, Vasan said. The administration of President Barack Obama plans to reorient US military policy towards the region as the conflicts post 9/11 bogged down military resources in the Muslim world.

Asia is likely to be the focus of US foreign policy given the massive economic growth in the region, where China's military presence is increasing and the threat of a nuclear-armed North Korea is looming.

The US would increasingly look at India to engage Sri Lanka. However, there are impediments to India normalizing relations as long as the Tamil issue keeps simmering. So the ethnic issue takes center stage in the US and India's engagement with Sri Lanka.

To influence Sri Lanka domestically, Washington must not underestimate the leverage it has in terms of its economic importance to Colombo. For, while China may have become politically indispensable to Sri Lanka, Colombo may find it difficult to replace the US economically.

"Chinese financing to Sri Lanka is less concessionary, and more commercial, than financing from the US, and other Western countries. However, financing - concessionary or not - is not a significant point of leverage on the Sri Lankan government," said Nishan de Mel, director of Verite Research, a think-tank that tracks the economic and political pulse of the country through macro data and analysis of vernacular press reportage in Sri Lanka.

The International Monetary Fund (IMF) on July 20 released the final installment of a $2.6 billion bailout agreed in July 2009, two months after Colombo defeated Tamil rebels and when the nation's foreign reserves had dropped to $1 billion, just enough to support imports for a few weeks. The bailout is the longest engagement Sri Lanka has had with the IMF.

"Sri Lankan authorities now look forward to the continued close engagement with the IMF and intend to discuss the possibility of financial support for its economic development agenda", the Central Bank of Sri Lanka said in a statement.

The US and India are probably more concerned about the strategic implications of the Chinese presence, and that has no necessary connection to economic partnerships, even though they are usually negotiated together. The regime could, for instance, try to barter strategic advantages to China, simply for support at the UN Security Council, and other international fora, where it feels under pressure from Western calls for accountability with regard to human rights abuses and war crimes.

"However, when it comes to economic pressures, while China has been heavily investing in infrastructure in Sri Lanka, as it has been in many other countries, the determining factor of the current trajectory of the Sri Lankan economy is the capital markets, where finance capital particularly from the US has been critical to prop up a fragile financialized economy," said Colombo-based political analyst Ahilan Kadirgamar.

Kadirgamar added that any future crisis in the Sri Lankan economy was more susceptible to market forces affecting its balance of payments rather than political and economic engagement by the global and regional powers.

The leverage the US has, and India can have, would be through trade, agreed de Mel. "Withdrawals of concessions, or positive barriers to entry to the US market, can hurt Sri Lanka and its economy significantly."

Given that the political economy of Sri Lanka is considerably internationalized, it is susceptible to trade and capital flows, and it would be significantly affected by barriers from any of its major trading partners, added Kadirgamar.

However, if such instruments were used without adequate explanation and justification, the pressure on the regime could be countered somewhat by presenting it as unfair action targeting the country - and whipping up nationalist sentiment in defense, de Mel cautioned.

"India does not have that leverage at present, because exports to India are still low, but the business community in Sri Lanka is looking at India as the growth area for trade in the future, so that carrot, if made tangible and dangled, will have leverage," de Mel said. Even so, "the direct pressure on the regime through human rights and war crimes investigations remains the single strongest point of leverage."

Such efforts are targeted very specifically at regime actors, and do not affect the population in general. Besides, even the southern population is getting fed up of the dysfunction in law and order, and as a result are now less enthusiastic about the idea that human rights investigations against particular regime actors are an affront to the nation.

Furthermore, for the regime, being able to travel and function internationally in the long term is crucial, and it will be willing to compromise a lot to avoid jeopardizing its personal fortunes and futures.

Another point of leverage, not yet tried, is with regard to corruption, de Mel suggested. Investigations and freezing of bank accounts of the regime where corrupt gains may have been held in foreign accounts or assets is an extremely strong point of leverage that the US can have, especially since regime actors have significant assets in the US. Sri Lankan society does not legitimize corruption, though it is tolerated, and there can be no nationalistic sympathy for the freezing of ill-gotten gains.

It's time Washington and New Delhi re-evaluated their paranoia over Beijing's ability to marginalize them, and began to flex their diplomatic muscles with Colombo, provided they truly believe in promoting democracy and civil rights in the world.

*Courtesy: Asia Times Online*


கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?

தனிநபரோ... வியாபாரமோ...

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்



BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN

CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN

CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN

BBK PARTNERSHIP

www.bbkca.com

Email: admin@bbkca.com

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

# KIDS பேப்பர்

## QUEEN ELIZABETH



Queen Elizabeth is the fortieth monarch since william the conqueror obtained the crown of England. At 2012 at 76 years of age, the Queen was the oldest monarch to celebrate a golden Jubilee.

The Queen has, personally held over 387,700 honours and awards. The first football mach, the queen attended was the 1953 FA cub final.

- Jasicka Shanthan[London]



## FRANCE

- France is in Europe.
- The Capital city of france is called Paris. Paris is in the north France.
- The Eiffel tower is a very tall monument.
- It was built, in 1889 by a man called Gustave Eiffel, six million people a year visit the Eiffel tower.
- The French Flag has three stripes- red, blue, and white. The flag is called the Tricocole. The mean three colours.

*- Vigaashan*

## QUOTABLE QUOTES

" The quality of a person's life is in direct proportion to their commitment to excellence, regardless of their chosen field of endeavor."

*–Vince Lombardi*

## Find Differences In Pictures



## விடுகதைக்கு விடை கண்டு பிடியுங்கள்....

- அழுவேன், சிரிப்பேன் அனைத்தும் செய்வேன் நான் யார்?
- ஆடும் வரை ஆட்டம், ஆடிய பின் ஓட்டம் அது என்ன?
- இவன் வாலுக்கு வையகமே நடுங்கும் அவன் யார்?
- ஊரெல்லாமல் ஒரே விளக்கு. அதற்கு ஒரு நாள் ஒய்வு அது என்ன?
- தலையை சீவினால் திறப்பான் அவன் அது என்ன?
- நாலு காலு உண்டு வீச வாலில்லை அது என்ன?
- பல் துவக்ககாதவனுக்கு உடம்பு எல்லாம் பற்கள்?
- மண்ணுக்குள் கிடப்பவன் மங்களகரமானவன் அவன் யார்?

*அனுப்பிய குட்டி - அஸ்வன் தேவராஜா*

*விடைகள் : முகம் பார்க்கும் கண்ணாடி, இதயம், தேள், நிலா, மாதுளம்பழம், இளநீர், நொங்கு, நாற்காலி, சீப்பு, மஞ்சள்*

## கடி.... கடி...

- எவ்வளவு பெரிய படிப்பாளியா இருந்தாலும் Exam Hall ல போய் படிக்க முடியாது.
- பல்லு வலி என்றால் பல்லைப் புடுங்கலாம். ஆனால் கண் வலி என்றால் கண்ணைப் புடுங்க முடியுமா?
- இட்லி பொடியைத் தொட்டு இட்லி சாப்பிடலாம். ஆனா மூக்குப் பொடியைத் தொட்டு மூக்கை சாப்பிட முடியாது.
- இன்றைக்குத் தூங்கினா நாளைக்கு எழும்பலாம். ஆனால் நாளைக்குத் தூங்கினா இன்டைக்கு எழும்ப முடியுமா?
- ஒரு எறும்பு நினைச்சா 1000 யானைகளைக் கடிக்கும். ஆனால் 1000 யானைகள் நினைச்சாலும் ஒரு எறும்பைக் கூட கடிக்க முடியாது.

## Colouring - 176






**Web: www.facebook.com/Kalai.Kili**

### Dear Kids...

Colour and Send in a picture to ORU PAPER . you could be the lucky winner Gift from KALAIKILI...

நீங்களும் கலைக் கிளி வழங்கும் பரிசினைப் பெற படத்திற்கு அழகுற வர்ணம் தீட்டி எங்களுக்கு அனுப்பி வையுங்கள்..

## Issue 175 Winner
## Mazneen




**Harini, 5 Yrs**



**Pakshika**



**Rehashan Asokan**



**P. Abira, Harrow**



**அஸ்வன் தேவராஜா**



**Vigaashan**



**Mazneen, 6 Yrs**



**Ugas Jeyakanth**



**Kavisha Timothy**

தம்பி தங்கைகளே.....

உங்களது பிறந்தநாள் வாழ்த்துகள், குட்டிக்கதைகள் மற்றும் படங்கள் வரைந்தும், விடுகதைகள், பழமொழிகள் என்று எதுவானாலும் உங்களது பெயரைக் குறிப்பிட்டு எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

## Do You Know?



60 Seconds = 1 Minutes
60 Minutes = 1 Hour
24 Hours = 1 Day
7 Days = 1 Week
52 Weeks = 1 Year

*- Vigaashan*

## TONGUE TWISTER

**And tonight's a night that's light.**
**When a night's light, like tonight's light,**
**It is really not quite right**
**To light night-lights with their slight lights**
**On a light night like tonight.**
**Black bug's blood.**
**Flash message!**
**Say this sharply, say this sweetly,**
**Say this shortly, say this softly.**
**Say this sixteen times in succession.**

*- Jarushan*

# Wishing you a very very Happy Onam...

- Over 2200 sq ft with ample free car parking,
- Fresh fish (sat&sun),fresh fruit &veg dailey.



- Everything that you need for this onam come along to happy shopper express

HAPPY SHOP

70-78, Windmill Road, Croydon, CR0 2XP.

OPEN 0700- 2200 EVRYDAY.

## Banqueting hall



Croydon banqueting hall for birthdays, receptions, weddings (free parking)

பிறந்தநாள் மற்றும் திருமண வைபவங்கள் என அனைத்து விதமான விழாக்களுக்குமான ஒழுங்குகள்

(இலவச வாகன தரிப்பிட வசதி)

CROWN PLAZA

To book please call

07701010635 or 07940012059 .

www.crown-plaza.co.uk





Amani

Net Silk
Art Silk
Zardosi
Sequence
Kanchivaram

The New Summer Collection is now in stock !

Tel : 020 8684 3195
020 8604 1319
www.amani.co.uk

Facebook Amani Bridal Boutique & Events

# SPIRITUAL HEALING & ASTROLOGY

FREE ABSOLUTELY FREE FREE

உலகத்தில் சூரிய, சந்திரன் நவக்கிரக மகிமையினாலே இன்பம், துன்பங்கள் நன்மை தீமைகள், பற்றிய விபரங்களைக் கூறுவார். இவரை ஒருமுறைசந்தியுங்கள். கைரேகை, பெயர் இராசி, லட்சுமி கடாட்சம், பொருள், அரசியல், உத்தியோகம், கல்வி,வியாபாரம், திருமணம், குழந்தை பாக்கியம், கணவன், மனைவி ஒற்றுமையின்மை, காதல் கலியாணம் மற்றும் விசா தொடர்பான விடயங்கள் பார்த்து சொல்லப்படும். நிலம், வீடு, யோகம், அதிஸ்ட நம்பர்கள், கோர்ட் வழக்குகள், கண்திருட்டி பரிகாரம் செய்வார். சாந்தி செய்து தரப்படும்.

உடன் சந்தியுங்கள்.....

People ask as to how he got such spiritual powers at such a young age. It is just one of God's miracles.

Please Take Prior Appointment

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.

**GURU JI** [Spiritual Healer & Astrologer]

**07965 559 918 | Hounslow, Middlesex**

All matters will be kept confidently.





Once in a lifetime, get the opportunity to meet devotee of

# Sai Baba

Healing from a lineage of spiritual healers and astrologers, Guru Ji understood from a very young age that this special field of mysticism and science was in his blood and was an inevitable part of his future.

As a teenager growing up in his native village, he had a recurring dream of being approached by a mysterious father figure in a billowing white cloak. The figure, bathed in unmistakably positive energy, repeatedly conveyed to Guru Ji through gestures, that he was imbued with a rare gift. This young man understood instinctively what was expected of him. He was, in his own humble way, to help others with his abilities as a rare persona. Guru Ji knew that in addition to be being able to gaze in to the future, he also needed the necessary tools to steer seekers on to the right path of happiness and fulfil their dreams.

At the age of nineteen Guru Ji had the fortuitous good fortune to meet two men who became his mentors. These mentors trained him in numerology, palmistry, astrology, Ridhi – Sidhi (prayer and meditation); and in addition he also predicts lucky things and colours.

"When people have difficulties and come to me, I use the knowledge I have, to find the solutions" says Guru Ji. He has a large following of believers. "If I am able to help, it is only though the grace of God. I share my gift and do not expect to be paid in return. If my work proves effective, people come back and give me a token of appreciation or refer family or colleagues to me". He likes the challenge of solving diverse range of issues and takes pride in his sincerity at solving them.

People come to him with myriad problems such as marriage issues, childlessness, joblessness, business trouble; people desperate for aid and success. "I am here to help, and expect nothing in return, I shall do my best" says Guru Ji "I believe in the power of prayer and I always keep a positive outlook".

**Contact Guru ji NOW: 0796 555 9918/ 0208 814 9454**



Niru Brand
And
Suryaa Brand
900g மேற்பட்ட
மிளகாய் தூளுடன்
1.5L Drink Free
Offer Ends
15/Sep/2012.
Offer Available only in
partici pating outlets
While stocks are Available.
Niru BRAND
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk

# தனிநபர்களாற் பாதிக்கப்படும் நமது தேசியம்

பாகம் 116

நாம் சென்று கொண்டிருக்கும் பாதையில் நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோமென்று நம்மில் அனேகருக்குத் தெரியும், ஆனால் அது எந்த அளவுக்கு யதாத்தமானது, எங்கே கொண்டு போய்ச் சேர்க்கும் என்பதில் யாருக்கும் தெளிவில்லை. நம்பிக்கையொன்றுதான் எம்மை அந்தப் பாதையில் வழிநடத்துகிறது. பத்திரிகைகள், பத்தி எழுத்தாளர்கள், அரசியல் ஆய்வாளர்கள், கவிஞர்கள் (நானுட்பட - நானும் என்னை ஓர் கவிஞனாகச் சிலவேளைகளில் எண்ணிக் கொள்வதுண்டு), இணையங்கள், வானொலிகள், தொலக்காட்சி, இவை எல்லாவற்றிற்கும் மேலாய் புலம்பெயர்ந்த தேசத்திலும், எமது தாயகத்திலும், ஏன் தமிழ்நாட்டிலும் பல அரசியல் வாதிகள் என்று இன்னோரன்ன வகையறாக்கள் எல்லாமே யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல், கறுப்புப் பூனையை இருட்டு மண்டபத்தில் - அதைப்பிடித்து யாராவது மணிகட்டுவார்கள் என்ற நம்பிக்கையில், தேடிக்கொண்டிருப்பது போல, ஈழத் தமிழர்களின் விமோசனம் தமிழீழத்தில்தான் கிடைக்க முடியும் என்ற எண்ணத்தில் அதனை விரசிக் கொண்டிருக்கிறோம் (விரசுவது என்றால் மட்டக்களப்பில் கலைப்பது என்று பொருள்).

இதற்கு முக்கிய காரணம், அந்தப் பூனை ஒரு தடவை எவ்வாறோ எமது கைகளில் சிக்கியது தான். ஆனால் மணியைக் கட்டுவதற்கு முன்னர் பிராண்டோ பிராண்டென்று பிராண்டிவிட்டு ஓடியே போய்விட்டது. ஓடிப்போன பூனை மீளக் கிடைக்குமா? இன்று அணிலேற விட்ட நாய்கள் போல அனைவரும் அண்ணாந்து பார்த்தபடி நிற்கிறோம். பூனையை மீண்டும் பிடித்துவிடலாமென்ற நப்பாசை இன்னும் எம்மை விட்டுப் போகவில்லை.

இந்த உலகத்தில் இவ்வளவு தியாகங்களைச் செய்து சாதித்த ஒருவிடயத்தை, அதாவது கட்டியெழுப்பபபட்ட எமது தமிழீழ நாட்டை நாம் கைதவறிப் போகவிட்டது போல, வேறு எந்த உலக வரலாற்றிலும் நடந்திருக்க முடியாது. இதற்குக் காரணம் ஒரு குடும்பம் தான். இந்தியாவின் தலைமைத்துவத்தை மன்னராட்சி முறையில் தம் கையில் வைத்திருக்கும் அந்தக் குடும்பத்தின் தலைவன் வீழ்த்தப்பட்டது தான் எல்லாவற்றிற்கும் காரணமாய் அமைந்துவிட்டது. அதுமட்டும் நடைபெற்றிருக்க வில்லையானால், நாம் தமிழீழத்தை அமைத்திருக்காவிட்டாலும், நிச்சயமாக இன்றும் தப்பிப் பிழைத்துப் போராடிக்கொண்டு இருந்திருப்போம். மிகப் பெரிய வரலாற்றுத் தவறின் முதல் அத்தியாயம் அங்குதான் ஆரம்பிக்கிறது. நாம் நம்பியிருந்த இந்தியா எம்மை எட்டியுதைத்ததன் காரணம் இதுதான். இந்தக் கூற்றுக்கு எதிராக ஆயிரம் கதை சொல்லுவார்கள். அவர்கள் விவாதத்திற்காகவும், தாம்பிடித்த முயலுக்கு மூன்றுகாலென்பதை நிரூபிக்கவும் அவ்வாறு வாதிடலாமேயொழிய தங்கள் மனதே உள்ளூர ஏற்றுக்கொள்ளும் இவ்விடயத்தை மனதார மறுக்க முடியாது.

இன்றுவரை இதற்கான பிராயச்சித்தம் என்னவென்பதை யாரும் கண்டுபிடிக்கவில்லை, தேடவுமில்லை. ஒரே ஒரு தடவை மதியுரைஞர் கொஞ்சம் ராஜதந்திரத்தைப் பாவித்து அதற்காகக் கவலை தெரிவித்தார். அதுவே மீண்டும் ஒரு வரலாற்றுத் தவறாகிப் போனது.

முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைத்திருக்க வேண்டும் என்று விமர்சிக்கப்பட்டது. உண்மைகள் சில வேளைகள் கசக்கும் என்பதற்கு இது ஒரு உதாரணம்.

சரி இப்போது உள்ளதெல்லாம் என்ன? எமது தேசியம் காக்கப்படவேண்டும், எமது தாயகம் பாதுகாக்கப்படவேண்டும் என்பதுதான். செய்த தவறையெல்லாம் மூடிமறைத்துவிட்டு அந்த உச்சத்தை நாம் எப்படி எட்டமுடியும்? ஏதோவொரு வகையில் இதற்கான பிராயச்சித்தத்தை நாம் தேடியே ஆகவேண்டும். அதுதான் நாம் போகும் வழியில் மூடப்பட்டிருக்கும் கதவுக்கான ஒரேயொரு திறவுகோல். அதனைப் பற்றி எத்தனைபேர் சிந்திக்கிறார்கள்?

எதிர்கால இந்தியா எப்படித் தலைமை தாங்கப்படப் போகிறது என்பதை நாம் இப்போதே எதிர்வுகூற முடியாவிட்டாலும் பாதிக்கப்பட்ட இந்தியத் தலைமைத்துவத்தின் வாரிசுதான் கூடுதலாகச் சுட்டிக்காட்டப் படுகிறார்.

## அலசுவரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

காலங்காலமாக மன்னராட்சியை ஏற்றுக் கொண்டுதற்போதுதான் - ஏறக்குயையவோர் அறுபத்தைந்து வருடங்களுக்கு முன்னர், தாமே சுதந்திரமாகத் தம்மையாளுகின்ற ஜனநாயக பாரம்பரியத்தைப் பேணத்தொடங்கியது இந்தியா. அதற்கு முன்னர் குட்டி மன்னர்களாலும் சக்கரவர்த்திகளாலும் ஆளப்பட்ட நிலப்பரப்புக்கள் பிரிட்டிஷ் ஏகாதியத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டு பிரிட்டிஷ் மன்னரின் ஆட்சிக்குட்டபட்டதாகத் தான் இருந்தது. சோவியத் ரஸ்யாவில் சார் மன்னர்களுக்கெதிராக லெனின் களதில் இறங்கி அவர்களை வீழ்த்தியது போலவோ, பிரான்ஸில் மக்கள் புரட்சியால் 16ம் லூயி கழுத்தறுக்கப்பட்டது போலவோ, சீனாவில் மாசேதுங் சியாங்கை சேக்கை நாட்டை விட்டே துரத்தியடித்து தாய்வானில் தஞ்சமடைய வைத்தது போலவோ, இன்னும்பல நாடுகளில் மன்னராட்சிகளுக்கெதிராக மக்கள் திரண்டெழுந்தது போலவோ இந்தியாவில் மக்கள் ஓர் மாறுபட்ட சமூக விடுதலையை நோக்கித் திரண்டெழவில்லை. மேற்சொன்ன நாடுகளிலெல்லாம் உள்ளூர் மன்னர்களுக்கெதிரான புரட்சிகள் வெடித்தன. ஆனால் இந்தியாவில் அந்நிய ஏகாதிபத்தியத்திற் கெதிராக மட்டுமே கூச்சலெழுந்துது. அந்த எழுச்சியை வழிநடத்திய காந்திஜீ கூட ராமராஜ்யம் என்று கூறிக்கொண்டு ஓர் இதிகாச காலத்து மன்னனின் தலைமையிலிருந்த நாடுபோன்றே தனது நாடும் வரவேண்டுமென்று தனது கொள்கையை மக்களிடம் வைத்தார். மக்களும் தலையாட்டிக்கொண்டு காந்திஜீயின் பின்னால் அணிதிரண்டார்கள். அந்த வழிகாட்டலே அரசபரம்பரைகளும் பெரும்பணக்காரர்களும் இந்தியாவின் தலைமைத்துவத்தை முன்கொண்டு நடத்துவதற்கான காரணமாகக் கூட இருக்கலாம்.

காந்திஜீ ஒரு வைசியர் அதாவது செட்டி. அவர் ஒரு பிராமணரோ அல்லது அரசபரம்பரையைச் சேர்ந்த சத்திரியரோ அல்ல. மூன்றாம் ஜாதி. அவரின் தலைமையை (அல்ல அல்ல வழிகாட்டலை) இந்தியா ஏற்றது ஏதோ உண்மைதான். ஆனால், தன்னடக்கத்தின் காரணமாகவோ என்னவோ இந்தியாவின் அரச பரம்பரைகளோடு அவர் நேரடியாக மோதிக் கொள்ளவில்லை. கடவுளின் குழந்தைகள் என்று பொருள்படும் அரிஜன மக்களுக்கெதிரான தீண்டாமையை ஒழிக்க அவர் குரல் கொடுத்த போதிலும் இந்தியாவில் காணப்பட்ட உயர்மட்ட அரச பரம்பரையினருக்கு எதிராகச் செயற்பட்டு ஆட்சியை அல்லது ஜனநாயகத்தை மக்கள் மயப்படுத்த வேண்டுமென்ற நோக்கோடு அவர் செயற்பட்டதாக வரலாறில்லை. வெள்ளையனே வெளியேறு என்ற கோஷத்தை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற் கெதிராகச் செய்தாலும், இந்திய ஜனநாயகம் தன்பாட்டிற்தான் மக்களாட்சியாக மலர்ந்தது. காந்தியாலல்ல. அதனாற்தான் நேரு காலந்தொட்டு இன்றுவரை குடும்ப வாரிசுக்களின் ஆதிக்கம் அங்கே நிலைபெற்றது. மக்களும் அதற்குப் பழக்கப்பட்டு அல்லது அதை விரும்பி ஏற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள், அல்லது சமூக மாற்றத்தை அவ்வளவோடு நிறுத்திக் கொண்டார்கள். அதற்குமேல் ஒருபடி சிந்திக்க மக்கள் முயலவில்லை, போதிக்கப்படவுமில்லை.

அரச பரம்பரையில் வந்த நேரு குடும்பம் ஆதிக்க சக்தியாக உருவெடுத்ததைப் போல மகாத்மாகாந்தி குடும்பம் அங்கே உருவெடுக்காததன் காரணம் அவர்கள் ஜாதிப்பிரிவின் அடிப்படையில் மூன்றாந்தர மக்களாக இருந்தது தான். இந்தியாவைக் கட்டியாளும் தகுதிபெற்ற செல்வாக்குமிக்க இந்தக் குடும்பத்தோடுதான் நாம் முரண்பட்டுக் கொண்டோம். அதன் விளைவு நாம் நசுக்கப்பட்டு மிதிக்கப்பட்டு இன்று ஆதரிப்பார்...

(தொடர்ச்சி 20ம் பக்கம்)



# ரெசோ ரீமிக்ஸ்!



நன்றி – விகடன்

**சாத்திரி**
*(ஒரு பேப்பர்)*

திரைக்கு வந்து பலவருடங்களேயான பத்தாம் பழைய திரைப்படம் ரெசோ. ரீமிக்ஸ் .உங்கள் கலைஞர் தொலைக் காட்சியில்.... காணத்தவறாதீர்கள். ஈழத்தமிழர் தலைகளில் மிளகாய் இழுத்தரைப்பது எப்படி என்பதை தத்துருபமாய் காட்சிப்படுத்தியிருப்பதுதான் ரெசோ..றீ மிக்ஸ்.

நடிகர்கள்.... கவர்ச்சியில்லா கன்னி கனிமொழி.. புரட்சியேசெய்யாத தளபதி மு.க ஸ்ராலின். பம்மல் புகழ் ரீ.ஆர் பாலு. ஆகியோரின நடிப்பில் உருவாகியிருக்கும் ஒப்பற்ற காவியம்தான் ரெசோ.. றீ மிக்ஸ்.

இசை... சிஞ்சக் புகழ் சு.ப.வீ மற்றும் ஒத்தூதல் வித்துவான் கி. வீரமணி இணைந்த இசையமைப்பில். பின்னணி இசை சூப்பரே சூப்பர்.... ரெசோ றீ மிக்ஸ்

கதைவசனம்...கடித மற்றும் தந்தி புகழ். கருணாநிதி.

திரைக்கதை...றோ

இயக்கம்...இத்தாலி சனியன்

அனுசரணையாளர்கள். பழனி திருமுருகன் மொட்டையடிக்கும் நிலையம். திருநெல்வேலி அல்வாக்கடை...மற்றும் திருப்பதி நாமக்கட்டி மொத்த விற்பனையாளர்கள்.

*நேயர்களே இதுவரை விளம்பரம் பார்தீர்கள் இனி திரைப்படம் எப்படி தயாரானது எனப்பார்க்கலாம்.*

எண்பதுகளின் ஆரம்பம் ஈழவிடுதலை இயக்கங்களிற்கு பயிற்சியும் ஆயுதங்களும் கொடுத்து எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றி விழையாடத் தொடங்கிய காலம். தமிழ் நாட்டில் தன் பதவி பட்டங்களை எம்.ஜி. ஆரிடம் இழந்து சுருண்டுபோயிருந்த கருணாநிதி மீண்டும் தன் மீது மக்கள் கவனத்தை திருப்பவும் அதே நேரம் எம்.ஜி. ஆர் அவர்கள் புலிகளிற்கு பெரும் தொகை பணத்தை வழங்கி தனது ஈழ ஆதரவை தெரிவித்தமையையும் சுள்ளென்று சுட்டுவிட. கறுப்புக் கண்ணாடியை கழற்றி வைத்து விட்டு தயாளம்மாள் மடியில் தலைவைத்து யோசித்தபொழுது மொட்டந்தலையில் பட்டென்று உதித்ததுதான் ரெசோவிற்கான கதையின் கரு. பராசக்தி படத்திற்கு பின்னர் பரபரப்பாய் அவர் வசனங்கள் எழுதியது ரெசோவிற்குத்தான். ஈழத்தமிழர்களிற்கு பாதுகாப்பாம்.. மகாநாடு தமிழ்நாட்டில் ஊர் ஊராய் கூட்டம் போட்டார். வழைமைபோல் மக்கள் கொட்டிக் குடுத்த நிதி ரெசோ கூட்டங்களில் சேர்ந்ததில் ரெலோவிற்கு மட்டும் அன்று வெறும் 50 லச்சம். மிகுதி நிதியெல்லாம் கருணாநிதிக்கே...ஈழத்தின் இறுதி யுத்தத்தின் போதும் ஈழத்தமிழனிற்கென மனிதச் சங்கிலி நடாத்தி பெருமளவு நிதி சேர்த்தார் அது எங்கோ எவரிற்கும் தெரியாது சிலவேளை பாலிவூட் நடிகைகளின் கழுத்துக்களில் சங்கிலியாய் தொங்கலாம்.

எம்.ஜி.ஆரிற்கு பின் மீண்டும் ஆட்சியை பிடித்துவிட ரெசோ படப்பெட்டியை பூட்டி அடிப்பெட்டியில் போட்டுவிட்டார். மகளிற்கு பதவி வேண்டும் என்பதற்காக மத்திய அரசையே ஆட்டிப்படைத்து. பேரனின் பதவிக்காக டெல்லிக்கு பிளேனில் பறந்து...மகனின் பதவிக்காக மிரட்டில் எல்லாம் விட்டு காரியம் சாதித்த கருணாநிதி. ஈழத்தில் தமிழினத்தை கொத்துக் கொத்தாக கொத்தணிக் குண்டுகள் குதறிக்கொண்டிருக்கும் போது சோனியாவை சொக்கத் தங்கம் என்று புகழ்ந்து ஈழத்தமிழனிற்காய் தந்தியடித்து கொண்டிருந்தவர். ஒருநாள் காலை இரண்டு இட்டிலியை அதிகமாய் சாப்பிட்டுவிடவே வயிற்று வலியெடுக்க இரண்டு ஏசியை போட்டுவிட்டு தலைமாட்டில் தயாளுவும் கால்மாட்டில் ராசாத்தியும் குந்தியிருக்க ஈழத்தமிழனிற்காய் சாகும்வரை உண்ணாவிரதம் என அறிவித்தார். காலை செய்தியை பார்த்துவிட்டு கவலையோடு வேலைக்கு போன எனக்கு மதியம் வேலையால் வந்து செய்தியை பார்த்தால் கருணாநிதிக்கு வயிறு சரியாகிவிட்டது. மூண்டு மணி நேரத்தில் உண்ணாவிரதம் முடித்து வீட்டிற்கும் போய்விட்டார். இப்படி தொடர்ந்து ஈழத்தமிழனிற்காக பாடுபட்டுக்கொண்டிருந்த கருணாநிதி அண்மையில் பழைய ரெசோவை றீ மிக்ஸ் செய்து விடப் போவதாக செய்திகள் வெளியாகியது.

ஆவலாய் பார்த்துக்கொண்டிருந்தபோதே ஈழத் தமிழர் வாழ்வுரிமை பாதுகாப்பு மகாநாட்டில் ஈழம் என்கிற பெயரை பயன்படுத்தக்கூடாது இது மத்திய அரசின் கட்டளை. ஈழத்தை நீக்கிவிட்டால் வாழ்வுரிமை பாதுகாப்பு மகாநாடு. யாருடைய வாழ்வுரிமை பாதுகாப்பு எண்டு பிரச்சனைவரப் போகுதே என கவலைப்பட்ட கலைஞர் புத்திசாலி அப்பிடியெல்லாம் யோசிக்காமல் செய்யமாட்டார். அவர் வாழ்வுரிமையையும் பாதுகாப்பு எண்டதையும் நீக்கிப் போட்டு தனியா மகாநாடு எண்டு மட்டும் நடத்துவார். ஆனார் என்ன மகாநாடு என்னத்துக்கு எண்டும் கேள்வி கேப்பாங்களே அதைவிட ஈழம் எண்ட சொல்லை பயன்படுத்தக்கூடாது எணடால் பழைய சங்ககாலத்து பாட்டுக்களிலை வாற ஈழம் எண்ட சொல்லுகளையுமல்லோ தேடி அழிக்கவேணும் எண்டு கவலைப் பட்டக் கெண்டிருக்க மத்திய அரசே மனமிரங்கி ஈழத்தை கருணாநிதி பாவிக்கலாமெண்டு அனுமதி குடுத்திருந்தது. இவ்வளவு கஸ்டப்பட்டு கதைவசனம் எழுதி றீ மிக்சும் பண்ணுற படத்துக்கு வில்லன் இல்லாமல் எப்பிடி?? ஆனால் இதிலை வில்லி . வேறையார் ஜெயலலிதாதான்....

மகாநாட்டுக்கு தடை எண்டு அறிவிச்சார். அதுக்கு அவர் சொன்ன காரணம் தீவிர வாதியள் புகுந்திடுவினமாம். பேசாமல் இருந்திருக்கலாம் விசயம் கோட்டுக்கு போச்சுது நீதிபதி இது செல்லாது எண்டிட்டார். ஈழத் தமிழர் ஈழத் தமிழ் அரசியல் கட்சிகள். புலம்பெயர் ஈழத்தமிழர்கள் அவர்கள் அமைப்புக்கள். இதெல்லாம் எதுக்கு ஒட்டுக் குழுக்களே புறக்கணித்த ஈழத்தமிழர் வாழ்வுரிமை பாதுகாப்பு மகாநாடு றீலிசாகி அதிலை அவை கண்டிச்ச முக்கியமான விசயங்களிலை ஒண்டு ஜெயலலிதாவை கண்டிச்சது. ஜெயலலிதாவை கண்டிக்க எதுக்கு மகாநாடு ? அதைவிட இதிலையும் ஈழத்தமிழர் பாதுகாப்பிற்கு நிதி சேகரிப்பும் நடத்தது அந்த நிதிக்கு என்ன நடக்கப் போகுது வழைமைபோல் கருணாநிதியின் நிதியில் சேர்க்கப்படும். மகாநாட்டின் கடையில் ஒரு குழந்தையின் அழுகுரல் அதை தொடந்து வருங்கால முதல்வர் வாழ்க என்ற கோசம்..... யாரப்பா அது...? கருணாநிதிக்கு கொள்ளுப் பேரன் பிறந்திருக்காம் அதுதான்....

# கோர்த்து விடும் செய்திகள்

### ■ யார் பயங்கரவாதி

முள்ளி வாய்க்கால் பேரழிவிற்குப் பின்னர் காணாமல் போய்விட்டாரா எனக் கருதப்படும் எரிக் சொஹெய்ம் இடைக்கிடை சில அறிக்கைகளை விட்டு நானும் இருக்கிறேன் என்று காட்டிக் கொள்வார். தன்னைக் கொல்ல சிங்களத் தீவிர வாதிகள் திட்டமிட்டிருந்ததாக அண்மையில் அங்கலாய்த்துக் கொண்டார். அவருக்கு இப்பவாவது புரியுமா யார் பயங்கரவாதிகள் என்று. இப்படிப்பட்ட அங்கலாய்ப்புக்களை விட்டு மீண்டும் இணைத்தறுதலை நாடுகளைக் கூட்டி செய்த பாவங்களுக்கு பிராயச் சித்தம் தேட வேண்டும்.

### ■ கடலை போட்ட தொண்டர் தம் பெருமையே சொல்லவும் பெரிது

மேற்கு இலண்டன் இந்து ஆலயமொன்றின் திருவிழா கடந்த சில வாரங்களாக கோலாகலமாக நடந்து ஏறியது. அங்கு தொண்டர்களாகப் பணியாற்றிய இளசுகள் பல விழா ஒழுங்காக நடக்க கடுமையாக உழைத்தனர். சங்கிலி அபகரிப்பு, தாலிக் கொடி அபகரிப்புக்கள் நடந்தன. ஆபரணங்கள் வைத்து ஷோ காட்டும் பக்த கோடிகளுக்கு பாதுகாப்பும் தொண்டர்களாகப் பணியாற்றிய இளசுகள் வழங்கின. ஒரு சில தொண்டர்கள் தேர் சுற்றி வரும் போது பகிரங்கமாக கடலை போடவும் செய்தனர். இதனால் உண்மையான தொண்டர்களுக்கும் களங்கம்.

### ■ மீண்டும் உண்மையான பெரியார் கூற்று

ஈழப் போராட்டத்திற்கு உதவி செய்யும் படி கேட்ட தந்தை செல்வாவிடம் ஈ.வே.ர பெரியார் நாம் இங்கு அடிமையாக இருக்கிறோம் நீங்கள் அங்கு அடிமையாக இருக்கிறீரகள் உங்களுக்கு நாம் உதவ முடியாது என்றார். அது இன்று டெசோ மாநாட்டின் மூலம் உண்மையாகிவிட்டது. இந்திய மத்திய ஆளும் கூட்டணியில் ஒரு பங்காளியான கலைஞர் கருணாநிதியின் திராவிட முன்னேற்றக் கழகத்தால இலங்கைத் தமிழர்களுக்குகாக தாம் பதறுவதுபோல் நாடகமாட ஒரு மாநாட்டை நடாத்தப்பட்ட பாடு போதும் போதும் என்றாகி விட்டது.

இந்திய மத்திய அரசு தனது சிறுபிள்ளைத் தனத்தை ஈழம் என்ற சொல் இருக்கக் கூடாது என்று சொன்னதன் மூலம் வெளிப்படுத்தி விட்டது. வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடை உள்ள இந்தியக் கைக்கூலிகள் இனியாவது தங்கள் 'பிராந்திய வல்லரசு இந்தியாவை அனுசரித்துப் போகவேண்டும்' என்ற பல்லவியை நிறுத்துவாரக்ளா?

*ஊருளவாரி*

ஊருளவாரியோட தொடர்புகொள்ள வேணுமெண்டால் வாங்கோ facebook.com/orupaper

## ஆர் சொன்னது எங்களுக்கும் கோத்தபாயவுக்கும் தொடர்பு எண்டு ?






**செய்தி:** கனடா, அவுஸ்திரேலியா மற்றும் ஐந்து ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் 22 தமிழர்கள் இலங்கைக்கு கடந்தவாரம் வந்திருந்நதாகவும், அவர்கள் கோத்தபாய இராஜபக்சவை சந்தித்ததாகவும், விடுதலைப்புலிகளின் முன்னாள் ஆயுதக் கொள்வனவாளர் குமரன் பத்மநாதன் தெரிவித்தார்.

*நன்றி: டெயிலி மிரர் (சிறிலங்கா) 15 ஒகஸ்ட் 2012*

ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது, அவர்தம் ஆற்றலும் தனித்துவமானதே..
உங்கள் பிள்ளைகளும் கல்வியில் ஓங்கிட, நாளைய உலகின் சவால்களை வென்றிட..



Enrol them in Learna
• Individualised • Interactive • Inspiring

Maths & English Teaching for 4-16 years olds

FREE Assessment

We also prepare pupils for
• 11 plus entrance exams
• Key Stage 2 SATS examinations
• Key Stage 3 and GCSE Maths
• A' Levels - Maths, Chemistry & Physics

LEARNA because every child is unique

Call 0845 094 0061 or visit www.Learna.co.uk 5-6 The Broadway, Sutton, Surrey, SM1 4BU.

# தேர்த்திருவிழா- ஈலிங் அம்மன் ஆலயம்



அருள்மிகு இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய தேர்த்திருவிழா கடந்த 12-08-2012 அன்று இடம்பெற்றது.

# தனிநபர்களாற் பாதிக்கப்படும்...

*(18ம் பக்கத் தொடர்ச்சி)*

யாருமற்றவர்களாக ஆகிப்போனோம். இதிலிருந்து மீள்வதென்பது எளிதான செயல்போலத்தோன்றவில்லை. இந்தியாவில் நேரு குடும்பத்துக்குள்ள செல்வாக்கு மத்தியை ஆளும் காங்கிரசை அக்குடும்பத்தின் பிடிக்குள் சிக்க வைத்திருக்கிறது. இனி அடுத்த தலைமுறைக்கும் இந்தக் குடும்பத்தின் வாரிசுதான் தலைமையேற்கப் போகிறது. அதிஷ்டவசமாக, காங்கிரஸை ஜனநாயக வழிகளில் மக்கள் தூக்கியெறிந்து வேறொரு தலைமைத்துவத்தைக் கொண்டு வந்தாலன்றி, நம்மீது அந்தக் குடும்பத்தினருக்கு உள்ள வஞ்சத்திற்குப் பலிபோகின்றவர்களாகவே நாம் இன்னும் பல ஆண்டுகள் இருக்கப்போகிறோம். புதியதோர் தலைமை இந்தியாவில் தோற்றம் பெற்றாலும் அது எவ்வளவு காலத்திற்கு இந்தக் குடும்பத்தின் செல்வாக்கோடு மோதித் தன்னைத் தக்கவைத்துக் கொள்ளும் என்பது கேள்விக்குறியே.

இதனாற்தான் மற்றைய எல்லாவற்றையும் விட எமது தேசிய விடுதலைப் பாதையை அடைத்துப் பிடித்துக் கொண்டு நிற்கும் கதவின் திறவு கோலாக இந்தப் பிரச்சனை இருக்கிறது. ஆனால் இதனை எப்படிக் கையாள்வது எப்படி எம்மீது அந்தக் குடும்பம் வைத்துள்ள வன்மத்தைக் குறைத்து எமது நேச சக்தியாக அதனை மாற்றுவது என்று யாரும் கவலைப்படுவதாக இல்லை.

இது உண்மையில் சில தனிமனிதர்களின் ஆதிக்க சக்தியினால் ஏற்பட்டுள்ள நிலைமைதான். ஆனால், அது எமது தலைவிதியிலல்லவா கைவைத்து எம்மை ஆட்டிப்படைக்கிறது! ஏதோவொரு வகையில் எப்படியாவது இந்தத் தனிநபர்களை ஆகர்சித்து எமது நேசசக்தியாக மாற்றியாக வேண்டியிருக்கிறது. இந்தப் பூனைக்கு மணிகட்டுவது யார்? உண்மையில் தமிழீழப் பூனையைத் தேடிப்பிடிப்பதைவிட இந்தப் பூனைகளைப் பிடித்து அவற்றை நட்பாக்கிக் கொள்ள வேண்டியதே இன்றுள்ள அவசியத் தேவையாக இருக்கிறது. அதாவது நேருகுடும்பத்தைத் தமிழீழ மக்களின் நட்புக்குரியவர்களாகவும் அன்புக்குரியவர்களாகவும் நாம் மாற்றியமைத்தே ஆகவேண்டும். அப்போதுதான் எமது தேசியத்திற்கு இந்தியாவின் ஆதரவு கிடைக்கும், எமது தேசத்தை நாம் நிறுவுவதும் சாத்தியாகும். இதனைச் சாதிக்கக்கூடியவர்கள் எம்மிடையேயில்லை. தமிழ் நாட்டிலுள்ள அரசியல் தலைமைகள்தான் இந்தக் கைங்கரியத்தை நமக்காக முன் நின்று செய்து முடிக்க வேண்டும். அதிலும், ஆளும் காங்கிரஸிலுள்ளவர்கள் யாராவதுதான் எமக்கு உதவவேண்டும்.

இன்றுவரை தமிழ்நாட்டு ஆளும் காங்கிரசுடன் நமது உறவுகள் சுமுகமானதாயில்லை. திராவிட இயக்கங்களும், தீவிர தமிழுணர்வாளர்களும்தான் நமக்காகப் பேசுகிறார்கள். யார் குத்தினாலும் பரவாயில்லை நமக்கு அரிசிதான்? முக்கியமெனக் கருதுவோமானால், வீண் சிலுசிலுப்புத் தேயில்லை பலகாரமே முக்கிய மெனக் கருதுவோமானால், நாம் தமிழ்நாட்டு ஆளும் காங்கிரசுடன் தொடர்புகளை மேம்படுத்த வேண்டும். யார் பூனைக்கு மணிகட்டுவது?

*தொடருவம்*


Shoptek .co.uk

A2 Asfare Business Park, Hinckley Road, Wolvey, Leicestershire LE10 3HQ

USED SHOP SHELVING

NEW SHOP SHELVING

large stock of used shop shelving

1000mm GONDOLA BAY £146+VAT



Suppliers of New and Used Shop Shelving

From our Cash & Carry Warehouse

Shoptek .co.uk Tel: 01455 221512

Email: info@shoptek.co.uk



EAZY Accident Claims Ltd

Our Services

- Personal injury Compensation (e.g. back, neck & Shoulder pain etc)
- Repair/ Total Loss Value of your Vehicle
- Loss of Earnings
- Replacement Car (Terms & Conditions apply)
- We Provide Vehicle with PCO for Cab Drivers

நமது சேவைகள்

- தனிநபர் அனர்த்த நஷ்டஈடு (e.g. back, neck & Shoulder pain etc)
- புனர் நிர்மானம் அல்லது வாகன இழப்புகளுக்கான பூரண நஷ்ட ஈட்டுத் தொகை.
- வருமான இழப்புகள்
- வாகனப் பிரதியீடு

(Terms & conditions apply)

வெற்றி பெறாதவிடத்து அறவிடப்படமாட்டாது

Your No Claim Bonus & Premium will not be affected

▸▸ மருத்துவக் கவனயீனம்

▸▸ தங்கள் விருப்பத்திற்கேற்ப வீட்டில் அல்லது வேறு எங்கும் சந்திப்பை மேற்கொள்ளலாம்.

176,Merton High Street,SW19 1AY

Tel: 02087155491 Mob:07800517629

Email:eazyclaimz@gmail.com



BAR - RESTAURANT - BANQUETING

FUSHIA

HAPPY HOUR!

5.00 PM TO 7.00 PM

40% DISCOUNT

ON ALL FOOD AND DRINKS

Orders must be taken before 7.00 pm

Monday to Sunday

3 Brighton Road, South Croydon, CR2 6EA

www.fushiauk.com

Tel: 020 8680 8833

# கொல்லங்கலட்டி கொண்டாட்டம்

கோடை சுடுவெயில் ஆண்டுக்கு ஒரு முறை வரும் ஒரு நீண்ட விடுமுறை. குளிர்மையை நாடும் சனக்கூட்டம் உல்லாசமான கொண்டாட்டங்கள். ஐரோப்பா, கனடா அடங்கலும் இப்போதைய நடப்பு இது. ஊரிலும் தான் அந்தக் கோடை நாட்கள். வீட்டுக்கு வீடு மோர் நிரம்பிய குளிர் தண்ணீருடன் மூடி மேல் கவிழ்த்து வைத்த பேணியுடன் காணப்படும் மண்குடம். வாயில் படலையில் அல்லது சங்கடப்படலையில் போவோரின் தாகசாந்திக்கு வைக்கப்பட்டிருக்கும் தண்ணீர்ப் பானை.

ஆடு, மாடு குடிக்கவென்று இடையிடையே மதில் புறம் கட்டப்பட்டு தண்ணீர் நிரம்பி காணப்படும் தொட்டில். முட்டி முழிய கள்ளைச் சொரியும் பனை, தென்னை. வன்னியில் என்றால் இடைப்போக நெற்பயிருக்காக பெருங்குளங்களிலிருந்து வாய்க்கால் ஊடாக பாயும் குளத்து நீரின் குளிர்மை எல்லாமே இந்தக் கோடை குதூகலம் தானே.

கோயில் வேள்விகளும் கோடையில் தான் வரும். கானாவத்தை வேள்வி, உரும்பிராய் வைரவர் கோயில் வேள்வி என மாறி மாறி சனிக்கிழமை தோறும் வேள்வி இறைச்சி. சொந்தங்கள், உறவுகள் சேர்ந்து ஒரு வேள்விக் கிடாயை வாங்கி ஒரு வளவுக்குள் கட்டித் தொங்க விட்டு உரிப்பதும், பிளாவில் நிறைந்திருந்த கள்ளை சுற்றி நின்று ருசிப்பதும் ஒரு கொண்டாட்டம் தான்.

இந்த வாரமும் சுடு இறைச்சி கொண்டாட்டம். கொல்லங்கலட்டி சார்ந்த ஊரின் ஒன்றுகூடல். கூடல் இடமும் பரந்த வெளிப்பூங்கா. கொலின்டனில் போய்ஸ் ஸ்கூல் அருகே அமைந்த படிங்டன் பார்க் 500 ஏக்கர் வரையான விஸ்தீரண நிலப்பரப்பு கொண்ட பூங்கா. பல நூறு மைல்கள் அப்புறம் இருந்து வந்த குடும்பங்கள் கூடி கதைக்க ஒரு வாய்ப்பு. பழைய நினைவுகளை பகிரவும் வாய்ப்பு தரும் நிகழ்வு இது. நெல்லிக்காய் மூட்டை வெடித்தால் போல் சிதறிப்போய் இங்கிலாந்து முழுவதும் வாழும் உறவுகள் ஒன்றிணைய கோடை தரும் வாய்ப்புகளில் இதுவும் ஒன்று. இத்தகைய பூங்காக்கள் பார்பிகியூ பார்ட்டிக்கெனவே அடுப்புகளை தயாராகவே கொண்டுள்ளன. முன்பதிவுகளோ, கட்டணமோ அறவிடப்படாத மக்களுக்கான இலவசப் பூங்காக்கள்.

அடுக்குமாடிகளில் முடங்கிக்கிடக்கும் சிறுவர்களும் ஓடியாடி விளையாடி குதூகலிக்க ஒரு சந்தர்ப்பத்தை இந்த விழாக்கள் தருகின்றன. பள்ளித் தோழர்களாய் ஒன்றாக வளர்ந்தவர்கள் பெரியவர்களாய் கட்டழகாகத் தெரிந்தவர்கள் எல்லாம் சுருக்கம் நெருக்கமாகப் போய் தளதளர்த்துப் போனவர்களாய் காலத்தின் கோலம். ஊரின் அருகருகே வளவுகளில் அமைந்த வீடுகள் ஒன்றாகப் பள்ளிப் படிப்பு, மாலையானால் ஒன்றாக ஊர் மைதானத்தில் விளையாட்டு. உப்பு, புளி தட்டுப்பாடு என்றாலும், கறி அடுப்பில் இருக்கும் போதே வேலிக்குள்ளாலே கேட்டு வாங்கி சமைக்கக் கூடிய உறவாக பழகிய சொந்தங்கள். கோயிலில், சந்தையில், வீதியில் என்று ஒவ்வொரு நாளும் உறவுகளை விடுமுறை காலத்தில் கூட அன்றாடம் கூட காணக்கூடிய வாய்ப்பு. ஒவ்வொருவருடைய அங்குலம் அங்குலமான வளர்ச்சியையும் அருகாக இருந்து ஒன்றாக வளர்ந்த ஊர் உறவு. போர்ச் சூழலால் இடம்பெயர்ந்து, புலம் பெயர்ந்து அகதிகளாய் கடல் கடந்து அந்நிய நாடுகளில் மொழி, கலாசாரம், மதம் எல்லாமே அந்நியமான சூழலில் வாழுகின்ற எங்களது நிலை.

ஒவ்வொருவரின் முகத்தை பார்க்கும் போதும் முகத்துக்குள் தெரியும் முகம் எழுப்பும் நினைவின் இனிப்பு. முப்பது நாற்பது வருடங்களின் பின்பான சந்திப்பல்லவா இது. அனல் பறக்கும் அடுப்பில் சுட்டு பதமான இறைச்சியை அனைவரும் வீடுகளிலிருந்து கொண்டு வரும் பல வகையான உணவு பதார்த்தங்களையும் கூட்டாக வைத்து உண்டு ஒன்றாக பழகுவதும் உரையாடியபடி உண்பதும் ஒரு ஆனந்தம். ஒவ்வொரு நாளும் ஊரில் கூடி விளையாடிய எங்களைப் போல எங்கள் பிள்ளைகளும் ஒன்றாக கூடி விளையாடி அறிமுகமாகி பழகுவதற்கு ஏற்ற ஒரு நாள். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இங்கு வாழ்ந்தவர்கள் முதலாக அண்மையில் வந்தவர்கள் வரையான ஊரின் அன்றைய இன்றைய நினைவுகளை பகிர்ந்து கொண்டார்கள்.

கொல்லங்கலட்டி ஒரு பழங்கிராமம். தெல்லிப்பளை தென்மேற்கில் அமைந்தது. கீரிமலை, மாவிட்டபுரம் இடையிலானது. சோழப் பேரரசி மாரிபவீரவல்லி தன் குதிரை முகம் நீங்கப்பெற்ற நேத்திக்காக மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலை நிர்மாணித்தாள். அந்த ஆலயத்தின் சூழவுள்ள கிராமங்களுக்கு 7 பிள்ளையார் ஆலயங்களை நிர்மாணித்துக் கொடுத்தாள். அத்தகைய பிள்ளையார் கோவில்களில் ஒன்று கொல்லங்கலட்டி பிள்ளையார் கோவில். சுமார் 800 ஆண்டுகள் பழமை வாய்ந்தது.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

அருகே நிழல் மரங்களோடு கூடிய தொடர் கட்டடம் மடத்தடி. முன்னாள் கொல்லங்கலட்டி பாடசாலை. கோப்பாய் கோமான் என போற்றப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் வன்னியசிங்கம் பிறந்த ஊர்.

**ஊர் உறவுகள் ஒன்று கூடி கழித்தாலும் இன்றைய நிலையை எண்ணும் போது ஒரு ஏக்கப் பெருமூச்சு எழத்தான் செய்கிறது.**

கோயில் முன்பாக பள்ளியும் மகாஜனக் கல்லூரி என்ற அயல் கல்லூரியும் பல கல்வியாளர்கள் உருவாகக் காரணமாக இருந்தது. பனை, தென்னை, வெற்றிலை, மரக்கறி, இராசவள்ளிக் கிழங்கு என பச்சத்தை தரும் ஊர் இது. அருகே சீமெந்துத் தொழிற்சாலை. வேலை வாய்ப்பு பெருமளவாக இந்த ஊருக்குத் தந்த தொழிலகம்.

ஊர் உறவுகள் ஒன்று கூடி கழித்தாலும் இன்றைய நிலையை எண்ணும் போது ஒரு ஏக்கப் பெருமூச்சு எழத்தான் செய்கிறது.



## இவர்களுக்கானதே...!!!

நேற்று எம் முன்னோர்
இன்று நாம்
நாளை இவர்களும்......
மாற்றத்தைத் தேடும்
மாந்த நேயனே
தியாக தீபத்தின்
பொன் மொழியறிந்தாய்
மக்கள் போராட்டமொன்றே
மண்ணை மீட்குமென்ற
மகத்துவம் புரிந்து
நோன்பினில் இருந்தே
தேசியம் காக்கும்
கடைமையில் இருந்தாய்
மெல்லென எழுகின்ற
கதிரொளியாக
எங்களின் இளையோர்
உலகை ஒருநாள்
வென்றெழும் போது
இவர்களுக்கான
தாயகம் விடியும்
புலியினைத் தாங்கிய
எம்கொடி பறக்கும்!!

-நொச்சி


VAT ACCOUNTS LTD
ACCOUNTANTS AND TAX ADVISORS
Tel 020 3441 6327
Mob 07939598703
Email:Info@vataccounts.co.uk
Web www.vataccounts.co.uk

20% OFF ON ALL SERVICES Limited Time Offer

Welcome to VAT accounts Ltd. We are your experts in the accounting industry.

We offer:
* Dedicated Service
* Honest work
* Time Efficient
*Current Knowledge

We can help any small or large businesses with organizing their taxes or simply to find more tax savings.

Feel free to contact us for a free consultation.

The prices and services of this advert are subject to change. VAT Accounts Ltd (us / we) are not responsible for any accounts previous of us taking over. We will do our best to ho help you, and total financial honesty is needed by all our clients. By not doing so we cannot fully provide good service to you.

Introductory Special Prices!

| AREA OF EXPERTISE | ORIGINAL PRICE | SPECIAL OFFER |
|---|---|---|
| 1. PREPARING COMPANY FINANCIAL STATEMENTS | £200 | £160 |
| 2. PREPARING COMPANY TAX | £100 | £80 |
| 3. FILING P35 ONLINE | £100 | £80 |
| 4. PREPARING VAT RETURN | £120 | £96 |
| 5. USING VAT ACCOUNTS ADDRESS | £100 | £80 |
| 6. PREPARING MONTHLY CIS RETURN | £10 | £8 |
| 7. PREPARING MONTHLY OR WEEKLY PAYE | £5 | £4 |
| 8. DEALING WITH HMRC ENQUIRY | £120 | £96 |
| 9. PREPARING MANAGEMENT | £130 | £104 |

Sponsored by SUCCOR

அரனருள்
எண் 3/95, 2-ஆவது தெரு, ஸ்ரீகிருஷ்ணாநகர், மதுரவாயில், சென்னை - 600 095
Cell : 0044-7440427790 , 0091-9444156335, E.mail : aranarul@yahoo.co.in

திருவண்ணாமலையில்
திருவாசக மகாநாடு சிவதீட்சை வழங்கும் விழா

சிவநேயச்செல்வர்காள்! சைவசமயமே சமயம், சைவத்தின் மேல் சமயம் வேறில்லை. சைவ சமயக் கடவுளாகிய சிவபெருமானை, சிவ தீட்சை பெற்று, வழிபாடு செய்ய வேண்டும் என்பது சைவ சமய நெறியாகும். அரனருள் நான்காம் ஆண்டு திருவாசக மகாநாடு சிவதீட்சை வழங்கும் விழா வரும் 12,13,14/10/2012 வெள்ளி, சனி, ஞாயிறு, ஆகிய மூன்று தினங்கள் ஸ்ரீ அண்ணாமலையார் திருக்கோயில் சிறப்பு வழிபாடு, கிரிவலத்துடன் தொடங்கி நடைபெறவுள்ளது.

திருக்கயிலாய பரம்பரை வேளாக்குறிச்சி ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சத்திய ஞான மகாதேவ தேசிக பரமாசாரிய சுவாமிகள் சிவதீட்சை அளித்து, ஆசி வழங்கியருளுவார்கள். விழாவில் கலந்து கொள்ளும் அன்பர்கள் மேற்கண்ட தொலைபேசி மூலம் முன் பதிவு செய்து, மேலும் விபரங்களை பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

திருவண்ணாமலையில் சிவலோகம் காண்போம் வாரீர்! வாரீர்!

சாமிதண்டபாணி ஸ்தாபகர் S. சண்முகசுந்தரம் B.A., தலைவர்

Sri Datta Yoga Centre UK presents a charity event:
Nada
Music of the Divine
Saturday 22 September 2012
Royal Albert Hall | Starts at 7.00pm
A musical extravaganza celebrating music for meditation and healing. For one night only, Sri Ganapathy Sachchidananda Swamiji, his musical troupe and five of India's most celebrated musicians, will be performing for the first time together at one of the most prestigious venues in the world.
Featuring:
Dr. Natesan Ramani | Pt. Anindo Chatterjee |
Dr. Mysore Manjunath | Vaidyanathan Suresh |
Dr. Yella Venkateswara Rao



Venue Partner
ROYAL ALBERT HALL
Visit us online
musicofthedivine.com
tickets from £20.00
Call the box office
+44 (0)20 7589 8212
Registered Charity - No. 1003856

## ஒலிம்பிக் அதிர்வு

பெரிய பிரித்தானியாவின் முடிக்குரிய அரசி இரண்டாவது எலிசபெத்தின் வைரவிழா நிறைவடைந்த கையோடு, 2012 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் 27.07.2012 வெள்ளிக்கிழமை குதுாகலமாக ஆரம்பமாகி 12.08.2012 முடிவடைந்தது இப்போட்டிகளில் உலகம் முழுவதிலுமிருந்து 204 நாடுகள் பங்கு பற்றின. 10,500 போட்டி வீரர்களையும், அவர்களின் குடும்பத்திரையும் வசதியாக தங்க வைக்க வென்று ஒலிம்பிக் கிராமமொன்றை விசேடமாக உருவாக்கியது பெரிய பிரித்தானியா, இலண்டன் மாநகரத்தில் மூன்றாவது தடவையாக நடைபெறும் இந்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் இதுவரை கண்டிராதவகையில் பிரமாண்டமான முறையில் சகல ஒழுங்குகளையும் செய்து முடிக்கும் பொறுப்புக்களை டெனி பொயில் ஏற்றுக் கொண்டிருந்தார். அவரது திறமையை மெச்சத்தக்க வகையில், ஆரம்ப நிகழ்ச்சிகளே அதிர்வடையச் செய்துள்ளது. இவரது செயற்திறனை பாராட்டாத பத்திரிகைகளோ, பிரபல்யங்களோ இல்லையெனலாம்.

ஆரம்ப தினத்தில் நிகழ்ந்த மகாராணியின் வருகைகளையும், உலங்கு வானுார்தியிலிருந்து பிரபல கொலிவூட் கதாநாயகனான ஜேம்ஸ் பொண்டுடன் மகாராணிக்கு பதிலாக அவரைப் போன்ற தோற்றத்துடன் ஒலிம்பிக் மைதானத்துக்குள் குதித்த நிகழ்ச்சியும், பிரமாண்டமான ஒலிம்பிக் வளையங்களிலிருந்து மாயாஜால வித்தைகள் போன்று நெருப்புப்பொறிகளாக உதிர்ந்த காட்சியும், பிரித்தானியாவின் தொழில் புரட்சி பற்றிய காட்சி மக்களின் இதயங்களில் நிலைநிறுத்தவும் கோர்க்கப்பட்ட காட்சிகள் டெனி பொயிலின் நுட்பமான செயல்திறனின் வடிவங்களில் சில.

பீஜிங்கில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டி இதுவரை நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பிரமாண்டமானது எனப் பெருமைப்பட்டாலும், அதன் அளப்பரிய சந்தோசத்தை அந்நாட்டு மக்கள் அனுபவிக்க முடியவில்லை என்பதே உலக அபிப்பிராயம் அதேநேரம் பிரித்தானிய மக்கள் இன, மத, நிற வேறுபாடின்றி ஆண், பெண் வயது வித்தியாசமின்றி சகலரும், அரங்கிலும் வீதியிலும் போட்டிகளை தினமும் கண்டு மகிழும் காட்சிகள் 2012க்குரிய பிரித்தானிய ஒலிம்பிக் நிர்வாகக் குழுவினரது அயராத உழைப்பைப் பூரணப்படுத்துகிறது.

இப்போட்டிகளை ஐக்கிய இராச்சியத்தில் மட்டும் 26.9 கோடி மக்கள் ஆரம்ப நாளன்றே தொலைக்காட்சி அலைவரிசைகளில் கண்டுகளித்ததாக தகவல்கள் கிடைத்துள்ளன.

ஒலிம்பிக் திடலில் ஆரம்ப நாளன்று பிரபு கோ கூறியது போல One day we will tel our childresn and grand childfern that when our time came, we did it right இந்த வரிகள் புலம் பெயர் தமிழ் மக்களான எமக்கும் பொருந்துமா?

## மலிந்த விலையில் ஒளி மின்கலங்கள்

அன்றாட பாவனையிலுள்ள அத்தனை நவீன உபகரணங்களுக்கும் தேவைப்படும் மின் கலங்களை அடிக்கடி மாற்ற வேண்டிய தேவை தவிர்க்க முடியாததொன்று. இதனால் உண்டாகும் செலவும் அதிகம். நாளாந்தம் நமது தேவைக்குதவும் கணனி, ஸ்மார்ட் போன்றவை மின் சக்தியில்லாமல் நகரவே நகராது.

தற்சமயம் பாவனையிலுள்ள சிலிகோன் மின் கலங்களை அதிக விலை கொடுத்து வாங்குவதால் குறைந்த விலையில் ஏதாவது கிடைக்குமா என ஆராய்ந்த விஞ்ஞானிகளில் லொஸ் ஏஞ்சல் கலிபோர்னிய பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் யாங் யாங் எனும் ஆராய்ச்சியாளர் சூரிய ஒளியைப் பயன்படுத்தி பொலிமர் மின் கலங்களை கணினியிலும் ஸ்மார்ட் போன்களிலும் பொருத்தும் பொறிமுறையை அறிமுகப்படுத்தியுள்ளார்.

சூரிய ஒளியை உள்வாங்கி மின்சக்தியைத் தயாரிக்கும் தொழில்நுட்பம் ஏற்கனவே பாவனையில் இருந்தாலும், கணனியில் விண்டோஸிலும் ஸ்மார்ட் போன் வகையிலும் இதுவரை அறிமுகப்படுத்தப்படவில்லை. சூரிய ஒளியின் வர்ணப்பட்டியிலிருந்து சேகரிக்கப்படும் வெளிச்சத்தை பக்குவமாக உள்ளே வாங்கத்தக்க வகையில் இந்த உபகரணங்களில் மேற்பரப்பு கண்ணாடி போன்ற மெல்லிய இழைகளினால் பொருத்தப்பட்டுள்ளது.

கோடிக்கணக்கில் வெறும் தாளில் அச்சிடப்படும் பத்திரிகைகளுக்கு பயன்படுத்தப்படும் Roll to Roll தொழில்நுட்பத்தைப் போன்ற முறையில் யாங் அவர்களின் பொலிமர் ஒளி மின் கலங்களை தயாரிக்க முடியுமென நிரூபிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தொகையாக தயாரிக்கப்படும் மின் கலங்கள் மலிவான விலையில் விற்பனைக்கு வரப்போவது பாவனையாளர்களின் செலவைக் கட்டுப்படுத்துவதோடு பசுமைப் புரட்சியின் பாதையில் இன்னுமொரு மைல்கல் எனலாம்.

### தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : உமா மகாலிங்கம்

## கிரகத்தில் அதிசயம்

செவ்வாய் தோசத்தால் திருமணம் கைகூடாத பெண்கள் இனி கவலைப்பட வேண்டியதில்லை எங்கேயாவது இனிமேல் மாப்பிள்ளைகளை தேடலாம். செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் உள்ளதா என அறிய இன்னும் பத்து வருடங்களில் முடியுமென நாசா விண்வெளிக் கல ஆராய்ச்சி மையத்தில் பணியாற்றும் பெரிய பிரித்தானியாவைச் சேர்ந்த விஞ்ஞானி டாக்டர் ஜோன் பிரிட்ஸ் நம்பிக்கை தெரிவிக்கிறார்.

1911ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கலிபோர்னியாவிலுள்ள நாசாவின் ஏவுகணைத் தளத்திலிருந்து புறப்பட்ட ஏவுகணை ஆவில் ரோவர் எனப் பெயரிடப்பட்ட ஊர்தியை 06.08.2012 திங்கட்கிழமை பிரித்தானிய நேரப்படி காலை 06.30 மணியளவில் செவ்வாயில் தரையிறங்கியுள்ளது. ஆறு சில்லுகள் பொருத்திய ஒரு தொன் எடையுள்ள ஆவல் ரோவர் தனது கால்களை பதித்த காட்சியை கண்டுகளித்த ஆராய்ச்சியாளர்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்து ஆரவாரத்தில் மூழ்கியதை சகல தொலைக்காட்சிகளிலும் காணக்கூடியதாக இருந்தது.

ஆவல் ரோவரின் தரையிறக்கம் அப்பலோ விண்வெளிப் பயணத்தின் பின்னர், நாசா எடுத்த பாரிய முயற்சியாக அமெரிக்க மக்கள் பெருமைப்படலாம். 2.5 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பயணத்தின் இறுதிக்கட்டத்தில், செவ்வாய்க்கிரகத்தில் தரையிறங்க ஏவுகணை 13,200 மைல் வேகத்தில் செலுத்தப்பட்டதாக அறியப்படுகிறது. செவ்வாய்க்கிரகத்தில் இறங்குவதற்கு தெரிவு செய்யப்பட்ட கேல் பள்ளத்தாக்கில் குறித்த இலக்கைத் தவறவிடாமல் அணுகுவதற்கு இம்மியாவு பிசகு ஏற்படா வண்ணம் தொழில்நுட்ப பொறிமுறைகள் கையாளப்பட்டதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

சாதாரண மக்களுக்கு புரியும் வகையில் சொல்லப்போனால், கோல்ப் பந்தொன்றை ஸ்கொட்லாந்திலுள்ள ஒரு குழிக்குள் குறி தவறாமல் விழ வைக்க லொஸ் ஏஞ்சலிருந்து எப்படி அடிக்க முடியுமோ அதேபோல்தான் இந்தப் பொறிமுறையும் அமைந்துள்ளதாம்.

சிவந்த கிரகமாக செவ்வாய் பற்றிய செய்திகளை 17ஆம் நூற்றாண்டில் துார தரிசினிகள் மூலம் கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து தொடர்ந்த ஆராய்ச்சிகள், இக்கிரகத்தில் உயிரினம் உண்டா இல்லையா என்ற ஆவல் விஞ்ஞானிகளைத் துாண்டிய காரணத்தால் இவர்கள் தயாரித்த ஏவுகணைக்கு Curiosity Rover எனப் பெயரிடப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க் கிழமையிலிருந்து இரண்டு வருடங்களுக்கு மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சியில் அதிசக்தி வாய்ந்த 17 கமராக்களும் தோன்றும் கருவியும் இவ்வூர்தியில் பொருத்தப்பட்டுள்ளதாக அறிகிறோம். செவ்வாய்க் கிரகத்தின் சீதோணம், நீர்த்தன்மை, உயிரினம் வாழக்கூடிய சூழ்நிலை உண்டா என்பதை இன்னும் 10 வருடங்களில் நிச்சயிக்க முடியுமென பிரிட்ஸ் கூறுகிறார்கள்.

எனவே, லெஸ் செஸ்ரர் பல்கலைக்கழகத்தில் விண் ஆராய்ச்சிப் பகுதியில் பணியாற்றும் விஞ்ஞானியான பிரிட்ஸ் தொடர்ந்து பூமியில் 92 நாட்கள் கலிபோர்னிய நாசா விண்வெளிக் கூடத்தில் கடமையாற்றப் போவதாக தெரிவித்துள்ளார். அவருடைய பணி தொடர நலமான ஆரோக்கியம் கிடைக்க வாழ்த்துவோம்.




ENFIELD NAGAPOOSHANI AMBAAL TEMPLE
என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்
HINDU TAMIL CULTURAL ASSOCIATION (ENFIELD)
இந்து தமிழ் கலாச்சார சங்கம் (என்பீல்ட்)
61-65 Church Lane, Edmonton, London, N9 9PZ
Tel: 020 8884 3333/4333 info@ambaal.org www.ambaal.org Charity No: 1143043

குருக்கள் தேவை

என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம் [இலண்டன்]
Enfield Nagapooshani Ambaal Tample

இலண்டனில் பிரபல்யம் மிக்க என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயத்திற்கு திறமையும், ஆலய கிரிகைகளில் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்ற சிவாச்சாரியார் தேவை. இப்பணிக்கு விண்ணப்பங்களை அனுப்ப விரும்புபவர்கள் பின்வரும் விபரங்கள் அடங்கிய சுயவிபரக் கோவையை எமக்கு தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

- முழுமையான போட்டோ பிரதி
- குருத்துவ தகைமைகள்
- குருத்துவ அனுபவங்களும், சேவையாற்றிய இடங்களும்.
- மேலதிக தகைமைகள் (ஆங்கிலம், கணனி, கணக்கியல்)
- இரு துறைசார் சிபாரிசுகள்

விண்ணப்ப முடிவு திகதி - 30-09-2012

சமூக நோக்கும் மனிதநேயமனப்பாங்கும் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

மின்னஞ்சல்:info@ambaal.org

முகவரி

Secretary, Enfield Nagapooshani Ambaal Temple
61-65 Church Lane, Edmonton, London, 9 9PZ

Perma Shipping
பிரேமா விமான, கப்பல் பொதி சேவை




TEL: 020 8668 0252 / 020 8646 5222
MOB: 07931 197 571 / 07939 550 397
www.permainternational.co.uk / www.jpnshippingltd.co.uk
info@permainternational.co.uk / info@jpnshippingltd.co.uk

ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name:

Address :

Postcode:

Telephone:

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், G11, Lombard House, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# இலண்டன் ஒலிம்பிக் மீதான உலகப் பார்வை



## வேல் தர்மா

*(ஒரு பேப்பருக்காக)*

சிரியக் கிளர்ச்சியையும் உலகப் பொருளாதார நெருக்கடியையும் சூடு பிடிக்கும் அமெரிக்கத் தேர்தலையும் ஒரு புறம் தள்ளிவிட்டு உலகம் இரு வாரங்களாக இலண்டனை அவதானித்துக் கொண்டிருந்தது. அழுகுணி கரு மேகங்கள் சூழ்ந்த நகரம் என்று அமெரிக்கர்கள் இலண்டன் நகரத்தைக் கிண்டலடிப்பார்கள். அவர்களே இலண்டன் புது மணப் பெண் போல் காட்சியளித்தது என்றனர்.

### இயற்கை அன்னைக்குத் தங்கப் பதக்கம்.

இலண்டனில் ஒலிம்பிக் என்றவுடன் அதை மழை கண்ட நேரத்தில் பெய்து குழப்பும் என்பது தான் முதலில் வெளிவந்த கருத்து. ஒலிம்பிக் நடக்கும் வேளையில் இலண்டன் காலநிலை சீராக இருந்தது. இதுதான் இலண்டன் ஒலிம்பிக்கின் பெரும் வெற்றி. இலண்டனில் ஒலிம்பிக் என்றவுடன் அங்கு பெரும் குண்டுத்தாக்குதல் நடந்தது. இலண்டன் ஒலிம்பிக்கில் பாதுகாப்பு பெரும் பிரச்சனையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. முதன் முதலாக ஒலிம்பிக் திடலில் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் பொருத்தப்பட்டன. இலண்டன் ஒலிம்பில் ஒரு படைத்துறைமயமாக்கப்பட்ட ஒலிம்பிக்காக இருக்கும் என்று குற்றம் சாட்டப்பட்டது. போதாக் குறைக்கு காவலாளிகள் பற்றாக் குறையால் படைத்துறையினர் தொண்டர் சேவை அடிப்படையில் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்கள் தங்கள் பணிவு கலந்த சேவையாலும் சாதாரண உடையில் செயற்பட்டதாலும் அக்குற்றச் சாட்டு தவிடு பொடியானது. இலண்டன் தெருக்களில் வாகன ஓட்டிக்கள் ஒவ்வொரு சதுர அங்குலத்திற்கும் போட்டி போடுவார்கள். அந்த அளவு வாகன நெருக்கடி நிறைந்த நகரம் அது. அங்கு விளையாட்டு வீரர்களின் போக்கு வரத்து சிரமமானதாக அமையும் என்று கருதப்பட்டது. சரியான திட்டமிடலாலும் கிழக்கு இலண்டன் பகுதியில் பல போக்கு வரத்துப் பாதைகள் அமைக்கப்பட்டதாலும் தொடரூந்துச் சேவைகள் விரிவாக்கப்பட்டதாலும் ஒலிம்பிக்கின் போது போக்குவரத்து சீராக நடைபெற்றது.

### உற்று நோக்கிய நாடுகள்

கடந்த ஒலிம்பிக்கை நடாத்திய நாடு என்ற வகையில் சீனாவும் அடுத்த ஒலிம்பிக்கை நடத்தும் நாடு என்ற வகையில் பிரேசிலும் 2012 ஒலிம்பிக் நடத்த பிரித்தானியாவுடன் கடும் போட்டியிட்ட நாடு என்ற வகையில் பிரான்சும் தாம் தான் உலகின் பெரும் சக்தி என்று நினைத்துக் கொண்டிருக்கும் நாடு என்ற வகையில் அமெரிக்காவும் இலண்டன் ஒலிம்பிக்கை உன்னிப்பாகக் கவனித்தன. சீன பீஜிங் ஒலிம்பிக்கின் தொடக்க விழாவில் இல்லாத ஒன்று இலண்டன் ஒலிம்பிக் விழாவில் இருந்தது என்கின்றனர் சீனர்கள். இலண்டன் ஒலிம்பிக் விழாவிற்கு ஓர் ஆத்மா சேர்க்கப்பட்டிருந்தது என்றனர் சீனர்கள். பிரெசில் நாட்டுப் பத்திரிகைகள் இலண்டன் ஒலிம்பிக்கை பூரணத்துவத்தை அண்டியது (near perfect) என்று சொல்லி இலண்டன் தமக்கு பெரும் சவால் விடுத்து விட்டது என்கின்றன. பிரெஞ்சு ஊடகங்கள் இலண்டனில் மக்களின் நட்புத்தன்மையைப் பாராட்டின. ஒரு ஊடகவியளாளர் தான் தனது வாழ்நாளின் இறுதிக் கட்டத்தின் போது இலண்டனில் வாழ விரும்புகிறேன் என்றார். ஆனாலும் பிரெஞ்சுப் பத்திரிகைகள் சில தமது மிதிவண்டிப் போட்டியாளர்கள் பிரித்தானியப் போட்டியாளர்களிடம் தோற்றதை ஏற்றுக் கொள்கிறார்கள் இல்லை. இலண்டன் தில்லு முல்லு செய்து விட்டது என்கின்றனர். அமெரிக்கப் பத்திரிகைகள் பல இலண்டனைப் புகழோ புகழ் என்று புகழ்கின்றன.

### பிரித்தானிய அரச குடும்பம்

ஒஸ்ரேலியர்களுக்கு பிரித்தானிய இளவரசர் வில்லியமும் கேம்பிரிட்ஜ் இளவரசி கேற்றும் பிரித்தானிய வீரர்களை ஊக்கப்படுத்தியதையும் அவர்கள் வெற்றியடைந்த போது ஆரவாரித்து மகிழ்ந்ததையும் கண்டிக்கின்றன. இவர்கள் எமது நாட்டுக்கும் சேர்த்துத்தான் இளவரச இளவரசியாகச் செயற்படுகிறாரகள். எமது நாட்டினதும் வருங்கால அரச அரசியர். அவர்கள் ஏன் தமது நாட்டு வீரர்களை ஊக்குவிக்கவில்லை என்று கேள்வி எழுப்புகின்றனர். பிரித்தானியப் பத்திரிகைகள் அவர்களை மிகச் சிறந்த இரசிகர்கள் என்று புகழ்கின்றன.

### செலவீனம்

இலண்டன் ஒலிம்பிக் ஒரு சிக்கனமான ஒலிம்பிக் என்று கூறலாம். பல்லாயிரக்கணக்கானோர் தொண்டர் சேவை அடிப்படையில் பணிக்கு அமர்த்தப்பட்டனர். இலண்டன் ஒலிம்பிக்கிற்கான நிதி பல்வேறு வழிகளில் பெறப்பட்டது. 2006-ம் ஆண்டிலிருந்து நகராட்சிச் சபை வரிகளை இருபது பவுண்களால் அதிகரிக்கச் செய்ததன் மூலம் 625 மில்லியன் பவுண்கள் சேகரிக்கப்பட்டது. இலண்டன் அபிவிருத்தி முகவரகத்திடம் இருந்து இருநூற்றைம்பது மில்லியன் பவுண்கள் பெறப்பட்டது. ஒன்றரை பில்லியன் பவுண்கள் லொத்தர் மூலம் பெறப்பட்டது. மொத்தச் செலவீனம் ஒன்பது பில்லியன்கள். வர்த்தக நிறுவங்களின் விளம்பர்ங்கள் மூலமும் பெருந்தொகைப் பணம் பெறப்படும்.

### உன்னதமான முகாமைத்துவம்

பாரிய நிகழ்வுகளைச் சிறப்பாக செய்து முடிக்கும் திறன் பிரித்தானியர்களிடம் உண்டு. அத்துடன் நேரம் தவறாமை அவர்களது அடுத்த சிறப்பு அம்சம். மூன்றாவதாக பாதிட்டுக்குள் செலவை கட்டுப்படுத்தும் திறனும் அவர்களிடம் உண்டு. ஒலிம்பிக் ஏற்பாட்டில் பிரித்தானியர்களின் இந்தத் திறமை நன்கு பயன்படுத்தப்பட்டது. நன்கு வெளிப்படுத்தப்பட்டது. பல விளையாட்டுத் துறை விமர்சகர்களும் ஒலிம்பிக் அவதானிகளும் பிரித்தானியா ஒலிம்பிக் போட்டியை மிகச் சிறப்பாக ஒழுங்கு செய்திருந்ததைப் பாராட்டுகிறார்கள். பன்னாட்டு ஒலிம்பிக் குழுத் தலைவர் இலண்டன் கடந்த இரு வாரங்களாக விளையாட்டை பல அம்சங்களில் புத்துணர்வூட்டியது (refreshed the game in many aspects) இலண்டன் 2012 ஒரு உன்னதமான ஒலிம்பிக் என்றார்.

### வெற்றிடமான கதிரைகள்

ஒலிம்பிக் போட்டிகளின் ஆரம்பத்தில் பல இடங்களில் கதிரைகள் வெற்றிடமாக இருந்ததும் பலர் வெளியில் நுழைவுச் சீட்டுக் கிடைக்காமல் தவித்ததும் பலத்த கண்டனங்களுக்கு உள்ளாகின. ஆனால் பல தனியார் நிறுவங்கள் அந்த கதிரைகளுக்கு உரிய நுழைவுச் சீட்டை வாங்கியிருந்தமை கண்டறியப்பட்டது. அந்த நிறுவனங்களின் ஊழியர்களும் அந்த நிறுவங்களிடமிருந்து பரிசாகப் பெற்றவர்களும் வேறு பல காரணங்களுக்காக அங்கு வராமல் போனதும் கண்டறியப்பட்டது.

### தோல்வி வேண்டியதால் வெளியேற்றப்பட்ட வீரர்கள்

எட்டு பெண் பட்மின்ரன் வீராங்கனைகள் தோல்வியடைவதற்காக விளையாடிமைக்காக போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டனர். அல்ஜீரிய ஓட்டக்காரர் தான் 1500மீட்டர் ஓட்டப் போட்டியில் வெல்வதற்கு சக்தி வேணும் என்பதற்காக 800மீட்டர் ஓட்டப்போட்டியில் விரைவாக ஓடுவதைத் தவிர்த்தார். இதற்காக அவர் போட்டியில் இருந்து விலக்கப்பட்டார். பின்னர் அவரின் உடல் நிலை அன்று சரி இல்லை என்று மருத்துவர்கள் சான்றிதழ் வழங்கியமையால் மீண்டும் சேர்க்கப்பட்டார். தென் கொரிய வீரரைத் தாக்கி தனது டுவிட்டரில் எழுதியமைக்காக சுவிஸ் கால் பந்து வீரர் மைக்கேல் மொர்கனெல்லவை அவரது நாட்டு ஒலிம்பிக் குழுவே போட்டியிலிருந்து நீக்கியது. கிரேக்க நீளப்பாய்ச்சல் வீராங்கனையும் இனக் குரோத வாசகங்கள் ‘டுவிட்’ செய்ததால் விலக்கப்பட்டார்.

### கண்டனத்துக்கு உள்ளான பி.பி.சி

இலண்டனைப் புகழும் பல ஊடகங்கள் பி.பி.சி தொலைக்காட்சிச் சேவை பிரித்தானிய வீரர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தமையைக் கண்டித்தன. ஒஸ்ரேலியாவில் ஒரு நாட்டில் ஒலிம்பிக் போட்டி நடக்கும் போது அந்த நாட்டுத் தேசியத் தொலைக்காட்சிகள் உள்நாட்டு வீரர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைத் தடுக்க வேண்டும் என்ற குரல் அமைப்பு ரீதியாக எழுந்துள்ளது. பி.பி.சியின் இணையத் தளத்தில் ஒலிம்பிக்கில் போட்டியிடும் நாடுகளின் பூகோளப்படங்கள் இணைக்கப்பட்டபோது இஸ்ரேலின் தலைநகர் போடாமல் போனதை இஸ்ரேலியப் பத்திரிகைகள் கடுமையாகச் சாடின. பல இசுலாமிய இணையத் தளங்களும் பிபிசியின் பாராபட்சத்தைக் கண்டித்திருந்தன.வெள்ளையர் அல்லாதவர்களைப் பிரித்தானிய வீரர்கள் தோற்கடிக்கும் போது பிபிசி அதிக மகிழ்ச்சியடைந்தது என்கின்றன சில இணையத் தளங்கள். அமெரிக்க ஊடகங்கள் பி.பி.சி பாராபட்சமாக நடக்கவில்லை என்கின்றன.

### பொருளாதாரம்

ஒலிம்பிக் போட்டிகளின் மூலம் பிரித்தானியப் பொருளாதாரத்திற்கு 13பில்லியன் பவுண் பெறுமதியான மதிப்பு உயர்வு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒலிம்பிக்கின் போது இலண்டன் நகரத்தில் பெரும் வாகன நெருக்கடி ஏற்படும் என்ற செய்தி பலமாக அடிபட்டதால் பலரும் இலண்டன் செல்வதைத் தவிர்த்தனர். உல்லாசப்பிரயாணிகளும் இலண்டன் செல்வதைத் தவிர்த்தனர். இதனால் இலண்டன் நகர வர்த்தகர்களுக்கு வருமான இழப்பு ஏற்பட்டது. மேற்கு முனை இலண்டன் நகரில் சில நாடக இசை அரங்குகள் தற்காலிகமாக மூடப்பட்டன.

### களத்திலும் சாதித்த பிரித்தானியர்கள்

ஒரு நாட்டில் ஒலிம்பிக் நடக்கும் போது அந்த நாட்டு வீரர்கள் வழமையிலும் அதிக வெற்றி பெறுவது வழக்கம். பிரித்தானியாவும் அதற்கு விதி விலக்கல்ல. டெனிஸில் பெற்ற வெற்றி போற்றத்தக்கது. பிரித்தானியர்களுக்குப் பிடித்தமான கால்பந்தாட்டப் போட்டியில் தண்ட உதையில் இங்கிலாந்து தோல்வியடையும் வழமை ஒலிம்பிக்கிலும் தொடர்ந்தது. அதுவும் ஒரு ஆசிய நாடான தென் கொரியாவிடம் பிரித்தானிய அணி தோல்வியைக் கண்டது. இரசிய விளையாட்டுத் துறை அமைச்சர் பிரித்தானியர்களும் சீனர்களைப் போலவே மோசமானவர்கள் என்றார். பிரித்தானிய இரசிகர்கள் தங்கள் நாட்டு வீரர்களுக்கு மட்டும் ஆர்ப்பரித்து ஆதரவு தெரிவிக்கிறார்கள் என்பது அவரது குற்றச் சாட்டு.

### பொய்பிக்கப்பட்ட எதிர்பார்ப்புக்கள்

இலண்டன் ஒலிம்பிக் தொடங்க முன்னர் பல முனைகளிலும் இருந்தும் பல எதிர்மறையான எதிர்பார்ப்புக்கள் முகாமை, காலநிலை, பாதுகாப்பு, போக்குவரத்துத் தொடர்பாக எழுந்தன. அவையாவும் பொய்பிக்கப்பட்டுவிட்டன. பிரித்தானியர்கள் இப்போது தம்மைத் தாமே புகழ்ந்து பெருமைப் பட்டுக் கொள்கின்றனர். தம்மைப் பற்றிய தமது மற்றவர்களினதும் கருத்துக்களுக்கு இலண்டன் ஒலிம்பிக் ஒரு திரும்பு முனையாக அமைந்து விட்டதாக பிரித்தானியர்கள் இப்போது கருதுகின்றனர். இந்த வெற்றி மனப்பானம பரவி மற்றத் துறைகளிலும் பிரித்தானியா வெற்றி பெறுமா?


பிரித்தானியா

TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312

உங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க வேண்டுமா?

TEL: 647 724 4188 FAX : 416 438 7855

கனடா

www.orumanam.com




# நம் பகைவர் யார் ? நம் நண்பர் யார் ?

நம்பகைவர் யார்? நம் நண்பர் யார்? அதைத் தெளிவாகத் தெரிந்து கொள்வோம். இவற்றை இன்னும் விரித்து நோக்குவோம். நம் நண்பர் வட்டத்தை எவ்வாறு விரிவாக்குவது? நம் பகைவர் வட்டத்தினை எவ்வாறு குறுக்குவது? நம் பகை என்பது ஒன்றே ஒன்று தான் என்று எப்படி அதனைச் சுருக்கி முடிப்பது?

இப்படி சில பல கேள்விகள் என்னுள் அலை பாய்கின்றன. கேள்விகளும் தேடல்களுமே உண்மையின் கரையை அடைய வைப்பன. நம் சுய சிந்தனையே உண்மையைக் கண்டு பிடிக்கும். எவே கேள்விகளும், தேடல்களும் அவசியமானவை.

ஆனால் வெறுமனே காற்றுக்கு அல்லாடி விட்டு உண்மையை கண்டறிதல் கடினம். உண்மை அவர்களிடம் ஒளிந்து விளையாடும். காற்றுக்கு அல்லாடுகின்ற சருகுகளே கருத்துச் சொல்கின்ற காலம்.

இப்பொழுது பாருங்கள். தமிழீழ ஆதரவாளர் அமைப்பின் (டெசோ) மாநாடு சென்னையில் நடைபெறுகின்றது. கலைஞர் கருணாநிதி அதனைக் கூட்டுகின்றார். தமிழீழ ஆதரவாளர் மாநாடு தானே நடைபெறுகின்றது. அதற்கு நாங்கள் ஏன் இவ்வளவு 'குத்தி முறிவான்'. டெசோவின் இம் மாநாட்டை இந்திய மத்திய அரசும் கண்டிக்கின்றது, நாங்களும் கண்டிக்கின்றோம். சிங்கள பௌத்த அரசு எதிர்க்கின்றது, நாங்களும் எதிர்க்கின்றோம். இது எங்கேயோ போய் இடிக்கின்றதே, எங்கே?

சிங்கக்கொடியை தூக்கியவனின் கட்சியைத் சேர்ந்தவனை முள்ளிவாய்க்கால் துயருக்கு ஒப்பாரி பாட அழைக்கின்றோம். அதில் எங்களுக்கு வெட்கம் துக்கம் மானம் ரோஷம் ஏதும் கிடையாது. ஆனால் தமிழீழ ஆதரவாளர் மாநாட்டை கண்மூடி எதிர்க்கின்றோம் கண்டனம் செய்கின்றோம்.

'கருணாநிதி கள்ளன்' என்கின்ற ஒற்றைச் சொல்லே இவ் எதிர்ப்புகளுக்கு காரணம். அந்த ஒற்றைச் சொல்லுக்குள் நம் உணர்வுகள் யாவற்றையும் பலியிட்டு விடுகின்றோம் என்பதனை ஏன் உணர்கின்றோம் இல்லை. 'கருணாநிதி கள்ளன்' என்பதில் எனக்கு மாற்றுக் கருத்து கிடையாது. கருணாநிதியின் ஓர் அரசியல் தந்திரமே இம்மாநாடு என்பதை நான் நன்கு அறிவேன். மேலாக வன்னியில் தமிழர்கள் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்ட வேளையில் கருணாநிதி நடந்து கொண்ட முறைமையை வரலாறு மன்னிக்காது. தமிழர் மன்னிக்க மாட்டார், காலமும் மன்னிக்க மாட்டாது. இதற்கு மேலும் கருணாநிதி பற்றி எழுத எனக்கு எந்த வார்த்தையும் தேவையில்லை.

அதேசமயம் இன்னொன்றையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும் ஒரு காலம் வரை கருணாநிதி தமிழ்த் தேசியவாதியாக அதற்கான போராளியாக வாழ்ந்தார். ஒரு காலம் வரை உண்மையான தமிழீழ ஆதரவாளராக இருந்தார். "தமிழர்களைக் கொன்று விட்டு, தமிழ்ப் பெண்களை கற்பழித்து விட்டு வருகின்ற இந்திய இராணுவத்தை தமிழரான நான் எவ்வாறு வரவேற்பேன்" என்று சொல்லக் கூடிய நெஞ்சுரமும் முதுகெலும்பும் அவரிடம் இருந்தன.

ஆனால் ஜெயலலிதா என்ன செய்தார்? நமது தேசியத் தலைவர் பத்திரிகையாளர் மாநாட்டை கூட்டிய நாளன்று அப்பொழுது முதல்வராக இருந்த ஜெயலலிதாவிடம் அம் மாநாடு பற்றி கேட்கப்பட்ட போது, "பிரபாகரனா? யார் அவர்? எனக்குத் தெரியாது" என்று இறுமாப்புடன் பதிலளித்திருந்தார்.

ராஜீவ் காந்தி கொலைக்குரிய மரண தண்டனை கைதிகள் தூக்கிலிடப்படும் பொழுது "எலும்பு முறியும் ஓசை கேட்டபின்பே எனக்கு நிம்மதியான தூக்கம்" என அறிவித்தவர். முள்ளி வாய்க்கால் போர் நிகழ்கின்ற வேளை "போர் என்றால் மக்கள் இறப்பார்கள் தானே" என்று திமிருடன் அறிக்கை விட்டவர். ஆனால் அதே ஜெயலலிதா தமீழம் பெற்றுத் தருவேன் என்று சொன்ன போது நாங்கள் "ஐயோ, ஐயோ" என்று தலையில் அடித்து ஆட்சேபம் தெரிவிக்கவில்லை. புன்னகையுடன் கேட்டுக்கொண்டிருந்தோம். அந்த திமிர் பிடித்த, இறுமாப்பு மிக்க, யார் பிரபாகரன்? என்று கேட்ட அதேவாயைக் கொண்டு "தமிழீழம் பெற்றுத் தருவேன்" என்று சொல்ல வைத்தவர்கள் நம் தமிழக மக்கள் அதுவே என் புன்னகைக்கான காரணம். அதுதான் என் பெருமைக்கும் காரணம். அதே தமிழக மக்கள் தான் இந்தக் 'கள்ளன் கருணாநிதியை' தமிழீழ ஆதரவாளர் மாநாடு நடத்த வைத்திருக்கிறார்கள். அதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இது தமிழக மக்களின் வெற்றி.

தயது செய்து புரிந்து கொள்ளுங்கள் நண்பர்களே. நமக்கு இப்பொழுது தேவை ஆதரவுக் குரல், ஆறுதலான முதுகுத் தடவன், அது யார் குரலாக இருந்தால் என்ன? யார் கைகளாக இருந்தால் என்ன? தமிழீழ ஆதரவாளர் மாநாட்டின் தீர்மானங்களை வாசித்துப் பாருங்கள். எந்த ஒரு வாக்கியம் ஈழத் தமிழர் வாழ்வுடன் முரண்படுகின்றது? அதற்காக இத்தீர்மானம் நிறைவேற்றப்படும் என்றோ? கருணாநிதி அதில் உறுதியாக நிற்பார் என்றோ நம்புமளவு நான் முட்டாள் அல்ல. "தமிழீழம் பெற்றுத் தருவேன்" என்று ஜெயலலிதா சொன்ன போது வந்த உணர்வு தான் இதிலும் எனக்கு. ஆறுதலாக ஒரு சொல் யார் சொன்னாலும் ஏற்கின்ற மனநிலையில் அல்லவா ஈழத்தமிழர் நாம் நிற்கின்றோம். இவ்வாறு சொல்வதை நம்புகின்றோம் என்று அல்ல விரும்புகின்றோம்.

**இரவி அருணாசலம்**

**எழுதுவது என்னவெனில்**

இறுதியாக ஒன்று சொல்கின்றேன். தமிழ்நாட்டு அரசியல் தமிழகத் தமிழர்களுக்குரியது. ஈழத்தமிழர் யாரும் அதனிடையில் புகத்தேவையில்லை. ஈழத்தமிழர்களை வைத்து அங்கு யாரும் அரசியல் செய்கின்றார்களா? அதனை தமிழகத் தமிழர் பார்த்துக் கொள்ளட்டும். ஈழத் தமிழர்களுக்கு அங்கு என்ன வேலை? அதேபோல ஈழத் தமிழரின் அரசியல் நிலையையும் அங்குள்ள அரசியல் தலைவர்கள் தீர்மானிக்க முடியாது. ஆதரவுக்கரம் நீட்டலாம், ஆறுதல் கூறலாம்.

எங்களுக்கு சீமான், வைகோ, நெடுமாறன், திருமாவளவன், ராமதாஸ், கருணாநிதி, ஜெயலலிதா என்று தமிழக அரசியல் தலைவர்கள் அனைவரும் வேண்டும். அவர்கள் உண்மையாக நேசிக்கின்றார்களோ போலியோ, கள்ளரோ, காடையரோ இவையெல்லாம் நமது பிரச்சினை அல்ல. தமிழக மக்களின் பொங்கி உணர்வினை இவர்கள் எப்படியோ வெளிப்படுத்தியாக வேண்டும். எங்கள் களத்தை அதன் மூலம் தான் சிங்கள-பௌத்த பேரினவாத அரசிற்கு காட்டமுடியும். எனவே யாபேரையும் நாம் ஆதரிப்போம், யாபேருடைய ஆதரவும் நமக்கு வேண்டும்.

அதனால் தான் சொல்கின்றேன், எங்கள் எதிரிகளை குறுக்குவோம். மையப் புள்ளியாக்கி சுருக்குவோம். அம் மையப் புள்ளி சிங்கள-பௌத்த பேரினவாத அரசு. அதனைத் தவிர்த்து மீதி அனைவரையும் நண்பர்கள் ஆக்குவோம். நியாயம் வெல்வதற்கு அது ஒரு வகை. புரிகின்றதா நண்பர்களே.

## காசி ஆனந்தன் நறுக்குகள்!



-நெருப்பு-

பாலைவனமே இல்லாத என்
மண்ணைப் பாலைவனம் ஆக்கினாய்...

எரிமலை ஆயிற்று...

எரிமலையே
இல்லாத என் மண்..

# துருத்தப்பட்டவர்களின் மீள்...

(25ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த வீட்டில் சுகமாக நாட்கள் இருக்கப் போகின்றன என்று நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில் ஒரு கிழமை கழித்து மூத்தக்கா செல்வாவைத் தனியே கூட்டிக் கெண்டு போய் "கேட்கிறேன் எண்டு குறை நினைக்காத பிள்ளை! தங்கச்சிக்கு எத்தினை பவுண் நகை குடுத்தநீ?' என்ற போது நெஞ்சிலே வலி எழுந்தது. அடுத்த நாள் பிள்ளைகளுடன் விளையாடிக் கொண்டிருந்த போது சொல்லி வைத்தாற் போல் தங்கைச்சியும் மகனின் கையிலிருந்த காப்பைப் பிடித்துப் பார்த்து "பலப்பில்லாமல் இருக்கு. வளைஞ்சு போடும் போல.." என்ற போது பிறந்த வீடும் வெறுத்துப் போனது செல்வாவுக்கு. அன்பு, பாசம் என்பவற்றின் அளவு கோல் என்ன என்ற கேள்வி எழுந்தது. எங்களிடமிருந்து இவர்கள் எதிர்பார்ப்பது இவ்வளவுதானா? இதற்குமேல் எதுவுமே இல்லையா? வார்த்தைகள் சொந்த உடன் பிறப்புக்களை எப்படிக் காயப்படுத்தும் என்கின்ற உணர்வு எப்படி இல்லாமல் போனது? தூரங்களும் பிரிவும் எல்லாவற்றையும் தூரத் துரத்தி வெறும் சொல்லாடல்களும் சுயநலங்களும் எதிர்பார்ப்புக்களும் மட்டுமே மிஞ்சிப் போய் நிற்கின்றதாய் தெரிந்தது.

குமரனும் செல்வாவும் அங்கே உதவி தேவைப் படுபவர்களுக்கென்று ஒரு பகுதியை ஒதுக்கியிருந்தார்கள். அதைக்கூடச் செய்வதில் வீட்டிலுள்ளவர்கள் பொறாமையால் இடைஞ்சல் பண்ணினார்கள். துன்பங்களை அனுபவித்தவர்களே அவற்றை மறந்து அது தேவைப் படுபவர்களுக்கு உதவ தயங்கும் மனநிலைக்கு மாறிப் போனது ஆச்சரியத்தை உண்டாக்கியது. மனம் நொந்திருந்தும் செய்ய வேண்டிய அனைத்தையும் முகம் கோணாமல் செய்து முடித்திருந்தார்கள். அம்மாவும் அப்பாவும் மட்டுமே அம்மா அப்பாவாகவே இருந்தார்கள்.

மூத்தக்கா மறக்காமல் "பிள்ளை அந்த உறுதி கொண்டு வந்தனியே? நீங்கள் இனி இஞ்ச வந்து இருக்க மாட்டியள் தானே! ஆரோ வந்து அபகரிக்க முதல் அதை எங்கட பிள்ளையளின்ர பேருக்கு மாத்தி விடுங்கோ. இது தான் சந்தர்ப்பம். இனி நீங்கள் போனால் எப்ப வருவீங்களோ தெரியாது!' என்றபோது அங்கிருந்து துரத்தப்பட்டவர்களின் அவசியம் தெரிந்தது. செல்வாவுக்கு கோபம் கோபமாக வந்தது நாங்கள் வாறதை எங்கட சொந்தச் சகோதரங்களே விரும்பவில்லை ஆனால் வெள்ளைக்காரனுக்கு எலும்பு உருக்கி நாங்கள் அனுப்புற காசு மட்டும் வேணும்.என்ன சகோதரங்கள்....மனதுக்குள் பொங்கினாள். ஆனால் வாய் பேசாது கேட்டதை எடுத்துக் கொடுத்தாள். இவர்களுக்குத்தான் சொந்தங்கள் வேண்டுமே ! கொடுக்கும் போது இனிமேல் இஞ்ச திரும்பி வாறேல்லை என்று எண்ணிக் கொண்டாள்.

திரும்பிய நாளில் அம்மா கட்டிப் பிடித்து நீண்ட நேரம் அழுதா. பிள்ளை ஏலுமெண்டால் அம்மாவை அடுத்த வருஷமும் வந்து பார் என்றா அம்மா. அப்பா பிள்ளைகளைத் தடவிக் கொடுத்தார். செல்வா அம்மாவை விட அழுதாள்( எல்லாவற்றையும் நினைத்து). மோர் மிளகாயும், வடகமும் அம்மா தானே செய்து கொடுத்தா.

துரத்தப்பட்ட நாட்டிலிருந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட நாட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். பணம் கட்டப்பட வேண்டிய கடிதங்கள் நிறைந்த கடிதப் பெட்டி வரவேற்றது. போய்வந்ததற்கும் சேர்த்து வேகமாக ஓடத் தொடங்கினார்கள் கணவனும் மனைவியும். ஒரு வருடம் வேகமாக ஓடிப் போனது. அம்மா அழுதபடி தன்னை வந்து பார்க்கச் சொன்னது அடிக்கடி செல்வாவின் நித்திரையைக் குழப்பியது. கணவனைக் கடிக்கத் தொடங்கி விட்டாள். ஒரு வழியாக அவன் சம்மதிக்க, அம்மாவுக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு 'அம்மா நான் வாறன் இந்த வருஷம்' என்றபோது அம்மா, நான் மோர் மிளகாய்க்கு ஆயத்தப் படுத்திறன் என்றா மகிழ்ச்சியோடு. செல்வா மீண்டும் கடைகள் பார்க்கத் தொடங்கி விட்டாள்.




✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Company Formation
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800



# துரத்தப்பட்டவர்களின் மீள் பயணம்

**அல்விட் வின்சென்ட்**

எத்தனையோ காலச் சிக்கல்களுக்குப் பிறகு நிம்மதியாக(?) நாட்டுக்குச் சொந்த பந்தங்களைப் பார்க்கவென்று போன நிறையப் பேரில் செல்வாவும் அடக்கம். முன்பு நிலைமை லேசான இறுக்கத்தில் இருந்த போது மாமா மோசம் போன செய்தி கிடைத்ததும் மனதுக்குள் குறுகுறுக்க கடினமான பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தாள் கணவனுடன். பிள்ளைகள் கேள்விப்பட்ட விடையங்களை வைத்துக் கொண்டு வரவே முடியாது என்று சொல்லி விட்டதால் கணவனும் மனைவியும் தனியே சென்றிருந்தார்கள். போன இடமெல்லாம் பயத்தில் கண் முழி பிதுங்கப் பிதுங்க பார்த்துப் பார்த்து மூச்சை இறுக்கிப் பிடித்துக் கொண்டு இங்கே வந்து சேர்ந்ததும் தான் ஒழுங்காக விட முடிந்திருந்தது.

அது ஒரு கனாக் காலம் போல, அதுவும் கடந்து போக, சோதனைகள் எதுவுமே இல்லையாம்? அவங்கள் நல்லாக் கவனிக்கிறாங்களாம்? சந்தோசமாகப் போய் இதுவரை பார்க்காத இடங்களெல்லாம் பார்த்துக் கொண்டு வரலாம் என்கின்ற விளம்பரங்களோடு எம் மக்கள் தாம் பிறந்த நாட்டை நோக்கி டூரிஸ்ட் ஆக இலகுவாக மிக இலகுவாக ஆறு மாதங்களுக்கு முன்பே பயணச் சீட்டுக்களை முன்பதிவு செய்யத் தொடங்கிய காலப்பகுதிகளில், செல்வாவும் 'அம்மாவும் அப்பாவும் பிள்ளையளைப் பாக்கேல்லை' என்கின்ற முக்கிய காரணத்தை மையப்படுத்தி பயணச் சீட்டுக்களைப் பதிவு செய்து விட்டாள்.

பதிவு செய்த நாளிலிருந்து பயண நாள் வரை ஒரு ஈரோ கடையிலிருந்து பல கடைகள் வரை ஏறி இறங்கி உடுப்புக்கள், உணவுப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள், மணிக்கூடுகள், இன்னும் என்னென்னவோ எல்லாம் குடும்பத்தினர், சொந்த பந்தங்கள், தெரிந்தவர்கள், அறிந்தவர்கள், எல்லாரையும் மனதில் வைத்து வாங்கியாயிற்று. எதிர்பார்த்ததை விட பணம் எகிறுவது தெரிந்தது. கடன் அட்டை கை கொடுத்தது. பரவாயில்லை பிறகு வந்து சமாளித்துக் கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டாள்.

செல்வாவின் கணவன் குமரன் முதலிலேயே சொல்லி விட்டான் "இஞ்சயிருந்து அள்ளிக் கட்டிக் கொண்டு போய் பிறகு அங்கயும் செல வழிச்சு அள்ளிக் கட்ட நான் சம்மதிக்க மாட்டன்" என்று. செல்வா மனதுக்குள் இப்பவே ஏதாவது கதைத்து எல்லாத்தையும் ஏன் குழப்புவான் என்று நினைத்து வாயை இறுக்கி மூடிக் கொண்டாள். ஆனால் மனதுக்குள் அங்கே வாங்கப் போகும் பொருட்களின் பட்டியல் நீண்டிருந்தது. ஒரு வழியாக பயணப் பொதிகளை எல்லாம் (வேறு தெரிந்தவர்களால் தரப்பட்ட பொருட்கள் உட்பட) கட்டி முடித்து அப்பாடா என்று சாப்பிட இருந்த நேரத்தில் ஒரு மதியத்தில் மூத்தக்கா தொலைபேசி எடுத்தா. 'பிள்ளை நீங்கள் வரேக்க அந்த தையிட்டி காணியின்ர உறுதியைக் கொண்டு வாங்கோவன்'!!நீங்கள் வரேக்கை எழுதிவிட்டால் நல்லது !! செல்வாவுக்கு என்ன சொல்லுவதென்று உடனே எதுவும் தோன்றவில்லை. 1989 களில்சொந்த ஊரை விட்டு வெளிக்கிட்டிருந்தார்கள். 2011 இல் எல்லாருக்கும் அந்த இடங்கள் தேவைப்படுகின்றன. என்னவோ தெளிவில்லாதது போல் தெரிந்தது. போய்ப் பாப்போம் என்று நினைத்து 'நான் இவரோடை கதைக்கிறன்' என்று அக்காவுக்குப் பதில் சொல்லி முடித்தாள்.

பயணத்தின்போது செல்வா நினைத்துக் கொண்டாள். அந்த முற்றத்து மாமரநிழலில் மணித்தியாலக்கணக்காக சுகமாக நல்ல நித்திரை கொள்ள வேண்டும். பயணத்தின் எதிர்பார்ப்புகளில் இதுவுமொன்று. அடுத்தது அம்மியில் அரைத்து நல்ல மீன் கறி சமைத்துச் சாப்பிட வேண்டும். அம்மா பாவம் ஏலாது தன்னால் அம்மியில் அரைக்க முடியும் என்று எண்ணினாள். எதிர்பார்த்திருந்த அந்தப் பொன் நாளில் ஊருக்குப் போய் இறங்கினார்கள். குமரனின் தங்கையின் கணவர் அவர்கள் கொண்டு போகும் பொருட்களின் கனம் அறிந்தது போல் வானுடன் காத்திருந்தார். வசதியாக ஏறிப் போய் குமரனின் பெற்றோர் வீட்டில் இறங்கினார்கள். சொந்த பந்தங்களின் ஆரவாரம் கண்ணீரை வரவழைத்தது. அன்று இரவுப் பொழுது பிள்ளைகளின் அறிமுகங்களும், பேரன் பேர்த்திகளின் அன்புப் பேச்சுமாக கழிந்தது.

அடுத்த நாள் காலையில் குமரனின் தங்கை அவர்கள் படுத்திருந்த அறைக் கதவைத் தட்டிய சத்தத்தில் எழுந்து கொண்டாள் செல்வா. கணவனையும் தட்டி விட்டாள். நேரம் பத்தைத் தாண்டியிருந்தது. வெளியே வந்து பளிச்சென்ற வெய்யிலைப் பார்த்தபோது மனதுக்குள் உற்சாகம் எழுந்தது. சூடான தேநீருடன் இரண்டு துண்டுப்பாணையும் சாப்பிட்டுக் காலை உணவை முடித்தபோது, "அண்ணா ! மத்தியானம் என்ன சமையல் செய்ய?" என்ற கேள்வி குமரனின் தங்கையிடமிருந்து எழுந்தது. குமரன் வஞ்சகமில்லாமல் "பங்கு இறைச்சி கிடைச்சால் வாங்கிச் சமையன். அங்க நாங்கள் எப்பிடிச் சமைச்சாலும் இஞ்சத்தை ருசி வாறேல்லை' என்றான். "அப்ப ஒரு ரெண்டாயிரம் ரூபா தாங்கோ நான் இவரை விட்டு வாங்குவிக்கிறன் !! இவர் நல்ல இறைச்சி பாத்து வாங்குவார். குமரன் செல்வாவைப் பார்க்க செல்வா பேசாமல் பணத்தை எடுத்துக் கொடுத்தாள்,

தங்கையின் கணவர் உந்துருளியை எடுத்துக் கொண்டு வெளிக்கிடவும், செல்வா அங்கே நின்று கொண்டிருந்தவர்களுக்காகக் கொண்டு போன பொருட்களைப் பிரித்துக் கொடுக்கத் தொடங்கினாள். அரை மணித்தியாலத்துக்கிடையில் அங்கே ஒரு சந்தையே கூடியது போல் தோன்றியது. அவரவர் தங்கள் தங்கள் உடுப்புக்களைப் போட்டு அழகு பார்த்தும் வாசனைத்திரவியங்களை முகர்ந்து பார்த்தும் மகிழ்ந்ததுமன்றி கடைக்கண்களால் அடுத்தவர் பொருட்களை அளவெடுத்தும் கொண்டனர். ஒருவாறு முடித்துக் கொண்டு சமையல் முடித்து சாப்பிட மாலை மூன்று மணியாகி விட்டது.

சாப்பாடு முடித்த கையோடு குமரனின் தங்கை "அண்ணா ஒரு ஆயிரம் ரூபா தாங்கோ ! இரவுக்கு நல்ல விளைமீன் வாங்கி கறியும் வைச்சு புட்டும் அவிப்போம்? சின்னத்தங்கச்சி நீங்கள் இஞ்ச நிற்குமட்டும் நிண்டிட்டுத்தான் போவா. எல்லாரும் விடுமுறையில நிக்கிறது நல்லதாப் போச்சு.... தொடர்ந்தாள். செல்வாவுக்கு அவள் பேசுவதைக் கேட்க விருப்பமின்றி இருந்தது. பணம் கைமாறியதும் அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

இப்படியே காலை மத்தியானம் இரவு என்று இவர்கள் பணம் கொடுத்தால் தான் சாப்பாடு என்ற (விடுதி?) நிலை தொடர்ந்தது. இடையில் தங்கையின் மகள் கடை பார்க்கப் போவம் என்று இரண்டு முறை வலம் வந்ததால் மூன்று இலட்சங்கள் அதில் மட்டுமே பறந்தது.

அடுத்து வந்த நாட்களில் இங்கிருந்து போனவர்கள் இடம் பார்க்கவென்று கன்னியாய் வென்நீரூற்றும், மலையகமும் மொத்தமாக பத்தொன்பது பேர் மகிழுந்து ஒன்றை வாடகைக்கு அமர்த்தி சுற்றியதில் கையிருப்பு கணிசமாகக் குறைந்து பிரான்சிலிருந்து மீண்டும் பணம் எடுப்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது அங்கே உள்ளவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. செல்வாவுக்கு மனம் சோர்ந்திருந்தது. இன்னும் கணவனின் குடும்பத்தோடு நிற்பதால் தொடர்ந்தும் பணம் இறைபட்டுக் கொண்டே இருக்க அதைவிட இன்னும் அம்மாவைப் போய் பார்க்க முடியவில்லையே என்கின்ற கவலை அதிகரித்துக் கொண்டிருந்தது. எதுக்கெடுத்தாலும் அதுக்குக் காசு தாங்கோ அண்ணா, இதுக்குக் காசு தாங்கோ அண்ணி என்று அரித்தெடுத்ததில் அங்கே நிற்கவே விருப்பமின்றி இருந்தது. ஆனாலும் வயது போன காலத்தில் மாமா, மாமியை மனம் நோகச் செய்யக்கூடாது என்பதில் கவனமாக பொறுத்துக் கொண்டாள். ஒரு மாதிரி மூன்று கிழமைகளை கடந்து செல்வாவின் பெற்றோர் வீட்டுக்குப் பயணமானார்கள். தாய் வாசலிலேயே வந்து செல்வாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். செல்வா முற்றத்தில் நின்ற மாமரம் இன்னும் நிற்கிறதா என்று பார்த்துக் கொண்டாள். நல்ல வேளை இன்னும் செழிப்பாக நிழல் பரப்பி நின்றது.

அகதிகளாய் அந்தரித்துத் திரிவது கொடுமை !அதிலும் கொடுமை சொந்த நாட்டுக்குள்ளேயே அகதிகளாய் அலைவது ! அந்தக் கொடுமையை கொஞ்சக் காலம் அங்கே அனுபவித்ததை செல்வா இன்னும் மறக்கவில்லை.ஒரு கிராமமே ஒரு கிணற்றைப் பாவித்ததையும், ஒரே கழிவறையைப் பாவித்து அது நிரம்பி வழிந்ததையும் எப்படி மறக்க முடியும்? அதைவிட அதுவரை இடம் பெயர்ந்திராத மக்கள், இடம் பெயர்ந்திருந்த மக்களை காட்சிப் பொருட்களாகப் பார்த்ததும் கண் முன்னே வந்து போயிற்று. இன்னும் எத்தனையோ சொல்ல முடியாத துன்பங்களை எல்லாம் அனுபவித்து களைத்திருந்தனர் எம் மக்கள். அதன் உச்சமும் எச்சமும் இன்னுமே பலரை வதைத்துக்கொண்டிருப்பது உலகறிந்த உண்மை. ஆனாலும் சிலர் அவற்றைக் கடந்து அப்பால் நின்று கொண்டு அவற்றைப் பற்றி சிந்திக்க விருப்பமின்றி மேலான ஒரு வாழ்வை விரும்புவது ஒரு அசாதாரணமான விடையமாக செல்வாவுக்கும் குமரனுக்கும் பட்டது. ஆனாலும் அங்கே அதைப் பற்றிப் பேசுவது கடினமாகப் பட்டது. ஏனென்றால் பேசப்படும் பொருள் புலம் பெயர் மண்ணிலிருந்து போகின்றவர்களுக்கெதிராகவே "நீங்கள் அங்கை சுகமாக இருந்து விட்டு வாறீங்கள் எல்லாம் கதைப்பீங்கள்" என்று திருப்பி நஞ்சு பூசிய அம்பாய்த் தாக்குகின்றதை அங்கு நின்ற கொஞ்ச நாட்களுக்குள்ளேயே புரிந்து கொண்டார்கள். இது ஒரு விதமான அடிப்படையில் அவர்களுக்குண்டான உளவியல் தாக்கம். அதைப் புரிய வைக்க சில வேளை நீண்ட காலம் எடுக்கலாம். புலம் பெயர்ந்து வாழும் மக்களின் நிலைமையையும் வாழ்க்கை முறையையும் கொஞ்சம் புரிந்து ஏற்றுக் கொண்டால் நல்லது என்று செல்வா மனதுக்குள் நினைத்துக் கொண்டாள்.

இப்போது செல்வாவின் பெற்றோர் வசிக்கும் இடம் அவள் வெளிநாடு வர முன் இடம் பெயர்ந்திருந்த ஒரு வீடு. அந்த வீட்டு மாமரத்தைப் பற்றியே இவ்வளவு நினைத்தாள் என்றால் தனது சொந்தக் கிராமத்து வீட்டுக்குச் சென்றால் எப்படி இருப்பாள் என்று கற்பனை பண்ணிக் கொள்ளலாம். அம்மா அவளுக்கு விரும்பிய மாதிரி அரைச்ச மீன் குழம்பும் மருமகனுக்கு கோழிக்கறியும் சமைத்திருந்தா. நீண்ட காலத்துக்குப் பிறகு அம்மாவின் சாப்பாடு தொண்டைக்குள் இதமாக இறங்கியது. கமலி அக்கா விழுந்து விழுந்து கவனித்தா. தங்கச்சி பிள்ளைகளுடன் அளவளாவிக் கொண்டிருந்தா. சாப்பிட்ட கையோடு மாமரத்துக்குக் கீழே பாய் ஒன்றை விரித்து படுத்து விட்டாள் செல்வா. குமரன் "அம்மா பிளேன் எடுத்து மாமரத்துக்கு கீழ படுக்கத்தான் வந்தவா" என்று பிள்ளைகளுடன் பகிடி பண்ணினான். ஆனால் அவள் எதையுமே காதில் வாங்கிக் கொள்ளாமல் நித்திரையாகிப் போனாள். அந்த நேர அந்த சுகத்தை இழக்க அவள் தயாராக இல்லை.

அன்று இரவு இரண்டாவது சந்தை கடை விரித்தது. குமரன் வீட்டைப் போலல்லாது இங்கே அவளால் சுதந்திரமாகப் பேச முடிந்தது. மூத்தக்காவின் மகளுக்கு ஒரு சங்கிலியும் இரண்டு சோடித் தோடுகளும் கொண்டு போய்க் கொடுத்தாள். தங்கச்சியின் மகளுக்கு ஒரு சின்ன அட்டியலும் கடைசியாகப் பிறந்தவனுக்கு ஒரு சோடிக் காப்பும் கொடுத்தாள். கொண்டு போன உடுப்புக்களை அவர்களையே பங்கிட்டுக் கொள்ளச் சொல்லி விட்டாள். எல்லோரும் ஏதோ செய்தார்கள், அவள் எதையுமே கண்டு கொள்ள விரும்பவில்லை. அவளுக்கு அவர்களுடைய மகிழ்ச்சியும் அன்புமே வேண்டும். புலம் பெயர்ந்து வாழும் நிலையில் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலேயும் உறவுகள் சொந்த பந்தங்கள் எவ்வளவு தேவை என்று நினைத்து மருகிப் போவது செல்வா மட்டுமல்ல. எனவே அங்கு நிற்கும் நாட்களை மகிழ்வாக ஆக்கிக் கொள்ள முயற்சித்தாள். *(தொடர்ச்சி 25ம் பக்)*

இலங்கை மற்றும் உலகின் எந்தப் பாகத்திற்கும்

DOOR to DOOR DELIVERY






இலங்கையில் எந்தப் பாகத்திற்கும் வீட்டுக்கு வீடு சேவை

- இலங்கை மற்றும் இந்தியாவிற்கு விசேட விலையில் விமான மார்க்கமாகவும் பொதிகள் அனுப்பப்படும்.

- Express Letter Service
- Vehicle Shipping
- Furniture Shipping
- Packing Service
- Relocation Service
- Man and Van Service
- Packing Materials
- European Parcel Service

DUNN SHIPPING LTD.

020 8842 2020

07949 361 434 - 07949 361 313

info@dunnshipping.co.uk • www.dunnshipping.co.uk

பொருட்கள் பெற்றுக் கொள்ளப்படும் இடங்கள்

• GREENFORD • WIMBLEDON • VAUXHALL • BIRMINGHAM • STOKE-ON-TRENT • A-LANKA TRAVELS LTD, TOOTING

# அமெரிக்காவின் ஒழுங்கில் தமிழினமா?



**தம்பி**

*(ஒரு பேப்பருக்காக)*

மகாராணியாரின் வைர விழாவிற்காக வந்திருந்த சிங்கள தேசத்தின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, உரையாற்றவிருந்த கூட்டத்திலும் உரையாற்ற முடியாமல் அவமானப்படுத்தப்பட்டு ஓடியிருக்கிறார். வைரவிழாவில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு கிடைத்ததுமே, மகிந்தருக்கு ஒரு தயக்கம் வந்தது. ஒக்ஸ்போர்ட்டில் அவமானப்பட்ட அனுபவமே அவரது தயக்கத்திற்கான காரணம். தனது உளவுத் துறையினரையும், துதியாடிகளையும் அழைத்து ஆலோசனை நிகழ்த்தினார். அவர்கள் தமிழர்கள் எல்லாம் பிளவுபட்டு நிற்பதாகவும், அவர்களால் பிரச்சினை ஏதும் வராதெனவும் நம்பிக்கை வெளியிட்டனர். புளகாங்கிதத்துடன் செங்கம்பள வரவேற்பை எதிர்பார்த்து வந்த மகிந்தருக்கு, துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று ஒளிந்து ஓட நேர்ந்த அவலம் உளவுத் துறையினருக்கும் துதிபாடிகளுக்கும் தகுந்த பரிசுகள் கிடைத்திருக்கும். இனவாத சிங்களத்தை வீழ்த்தியதாக தமிழ் உணர்வாளர்கள் மார்தட்டிக் கொண்டனர். ஆனால் நடந்தது என்ன?

சோவியத் ஒன்றியத்தின் உடைவிற்குப் பின்னர் உலக நாடுகளெல்லாம் தனது ஆளுகையின் கீழ் வரவேண்டுமென்று அமெரிக்கா கருதியது. தனது சொல்லுக்கு படியாத நாடுகளெல்லாம் தண்டனை பெறும் என்று அச்சமூட்டும் வகையில் முதலாவதாக ஈராக் மீது போர் தொடுத்தது. தனக்குத் குடைச்சல் கொடுக்கும் ஆளாக இருக்கக்கூடிய பின்லாடன் அடைக்கலமான ஆப்கானிஸ்தான் மீது அடுத்ததமாகப் போர் தொடுத்தது. தனது புதிய நவீன இராணுவ, தளபாட, தொழில்நுட்ப உத்திகளை ஆப்கானில் பரீட்சித்துப் பார்த்தும் செய்தது. இரு நாடுகளிலும் பெற்ற படிப்பினையூடாக தனது உத்தியை மாற்றிக் கொண்டது. தனக்குப் பிடிக்காத நாடுகளின் அரசாங்கத்தின் அதிருப்தியாளர்களை ஒன்று திரட்டி பலப்படுத்தி அவர்கள் மூலம் ஆட்சி மாற்றம் செய்து தனக்கு ஆதரவான அரசுகளை அந்நாடுகளில் நிறுவ வருகிறது. எகிப்து, லிபியாவைத் தொடர்ந்து சிரியாவில் நிகழும் மாற்றங்களும் அவ்வகைப்பட்டதே.

சீனாவிலும் பெய்ங்கில் மாணவர் கலகத்தை உண்டு பண்ணி தனது ஆதிக்கத்தை நிறுவ முயன்றது. சீன அரசு இராணுவ அடக்குமறை மூலம் அந்த முயற்சியை முறியடித்தது. பின்னர் யாருமே எதிர்பாராத வண்ணம் பொருளாதார, இராணுவ, தொழில்நுட்ப வளர்ச்சியை சீனா கண்டது. தனது பொருளாதார விரிவாக்கத்திற்காக இந்து சமுத்திரப் பிராந்தியத்தை தனது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தது. அதன் ஓர் அங்கமாக இலங்கை இனப்பிரச்சினையை ஒரு உள்நாட்டுக் குழப்பமாகக் கருதி, அதனை முறியடிக்க சிங்கள அரசுக்கு உதவியதன் மூலம் இலங்கையை தனது ஆளுகையின் கீழ் கொண்டு வந்தது.

இங்கே தான் அமெரிக்காவுக்கும், சீனாவுக்குமிடையேயான பனிப்போர் ஆரம்பமாகியது. சீனாவுக்கு செல்லப்பிள்ளையாகிப் போன இதே சிங்கள அரசைத் திருப்திப்படுத்தி, தனது பொருளாதார, இராணுவ, உளவு வளங்களை இந்து சமுத்திரத்தில் விரிவுபடுத்தி நிலைநிறுத்திக் கொள்ளும் வகையில், சிங்கள அரசுக்கு சவாலாக இருந்த புலிகளை அழிக்கவென புலிகளுக்கு சர்வதேச நெருக்கடிக்களைக் கொடுத்தும் சிங்கள தேசத்துக்கு இராணுவ, தளபாட, தொழில்நுட்ப, உளவு வளங்களை வழங்கியும் சிங்கள அரசை ஸ்திரப்படுத்தி இலங்கையில் நிலை கொள்ள அமெரிக்கா சில காலமாகவே முனைப்பாக செயற்பட்டு வந்திருந்தது. இந்தியாவை கண்காணிக்கும் நோக்கமும் அமெரிக்காவுக்கு இருந்தது. சீன கம்யூனிசத்தில் அழிந்துவிடுமென்றே அமெரிக்கா கருதியிருந்தது. ஆனால், சீனா குறுகிய காலத்தில் உலகமே வியக்கும் வண்ணம் பாரிய வளர்ச்சியை கண்டிருந்தது. இலங்கையையும் ஆக்கிரமித்தது சிங்களம் சீனாவுக்கு கம்பளம் விரித்ததில் அமெரிக்கா ஏமாற்றமடைந்தது.

போர்க்குற்றத் தீர்ப்பாயங்களெல்லாம் அமெரிக்கா எதிர்பார்க்கும் வெற்றியைக் கொண்டு வராததில் அமெரிக்கா தனது உத்தியை மாற்றிக் கொண்டது. மகாராணியின் வைர விழா அதற்கு வாய்ப்புக் கொடுத்தது.

மகிந்தருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. தமிழருடைய ரியாக்ஷனை அமெரிக்கா சரியாகவே கணிப்பிட்டிருந்தது. போர்க்குற்றவாளிக்கெதிராக தமிழர் கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் செய்தோம். மகிந்தர் அவமானப்பட்டுத் திரும்பினார். பிரிட்டிஷ் அரசு எமக்கு அனுமதி மறுத்திருக்கலாம் அல்லது முள்ளிவாய்க்கால் அவலத்தின் போது எம்மீது பொலிஸ் அராஜகங்கள் செய்தது போலவே அராஜகங்கள் செய்து எம்மைக் கலைத்து இருக்கலாம். அப்படி செய்திருந்தால் பிரித்தானிய அரசுக்கு சொற்ப செலவீனமே ஏற்பட்டிருக்கும். ஆனால் அப்படி செய்யவில்லை. பாதுகாப்புக் கடமையில் பொலிஸ் ஈடுபடுத்தப்பட்டதிலும் நகரின் மையப் பகுதி ஸ்தம்பிதமாக்கப்பட்டதில் ஏற்பட்ட வருமான நஷ்டமும் பிரித்தானிய அரசுக்குப் பாரிய பொருளாதார இழப்பு. ஆனால், அவை பிரித்தானிய அரசுக்கு ஒரு முதலீட்டுச் செலவீனம். அதனால் அதனைச் சுமந்தது எப்படி? இப்படித்தான். சொல்லவேண்டிய செய்தி மகிந்தருக்குச் சொல்லியாயிற்று.

உலக அபிப்பிராயங்களெல்லாம் மகிந்தருக்கு எதிராகத் திரண்டு வருகிறது. அமெரிக்காவுக்கு இணங்கிப் போனால் மட்டுமே அதிலிருந்து தப்பிக்கலாம் அல்லாதுவிடின் ஆட்சியை இழப்பதுடன் தண்டனையும் அனுபவிக்க வேண்டி வருமென்பதே. சீனாவுடனான உறவைத் துண்டித்து, சீனாவை இலங்கையிலிருந்து மகிந்தர் வெளியேற்றிவிட வேண்டும் என்பது தான் மையத்திட்டம். எதிர்காலத்தில் சீனாவின் பொருளாதார வீக்கத்தில் அடிமைப்பட்டுப் போவதைவிட, சீனாவின் வளர்ச்சியைத் தடுப்பதற்காக செலவிடுவது பிரித்தானியாவுக்கு ஒன்றும் பெரிய விடயமல்லவே.

மறைமுகமாக நாம் அமெரிக்க நலன்களுக்காக சோரம் போயிருக்கிறோம். எப்படி தவிர்த்திருக்கலாம், புலிகள் எப்படிக் கையாண்டிருப்பார்கள் என்பதை 25 வருடங்கள் பின்னோக்கிப் பயணித்துப் பார்ப்போம். 87ஆம் ஆண்டு அமெரிக்கச் சிந்தனை கொண்ட இலங்கை அதிபரான ஜே.ஆர். ஜெயவர்த்தன அமெரிக்க நலன்களுக்கு இலங்கையில் கம்பளம் விரித்திருந்தார். இதை விரும்பாத இந்தியா தமிழர் நலனைச் சாட்டி இராணுவ அத்துமீறல் மூலம் ஜே.ஆரை மிரட்டி, ராஜீவ்-ஜே.ஆர். ஒப்பந்தம் மூலம் அமெரிக்காவை இலங்கையிலிருந்து வெளியேற்றியது. ஆனால், தமிழரிடமும் வெளியுலகுக்கும் தமிழர் நலன்களுக்காகச் செய்யப்பட்ட ஒப்பந்தமென இந்தியா பிரச்சாரம் செய்தது. ஆயுதப்போராட்டம் முடக்கப்பட்டிருந்த புலிகள் இந்திய மொழியிலேயே திலீபன் மூலம் அந்த ஒப்பந்தம் தமிழர் பிரச்சினை எதையுமே தீர்க்கவில்லை என்பதை தமிழரும், உலகமும் அறிந்து கொள்ளச் செய்தனர். திலீபன் புலிகளுக்கு ஆட்சியுரிமை கேட்கவில்லை. தமிழீழம் கேட்கவில்லை. தமிழருடைய பிரச்சினை எதற்குமே ராஜீவ்-ஜே.ஆர். ஒப்பந்தத்தில் தீர்வில்லை என்பதையே சுட்டிக்காட்டினான். இந்தியாவின் உதாசீனத்தால் திலீபன் மரணித்துப் போனான். எதிர்காலத்தில் தோல்விகளாலும், அவமானங்களாலும் இந்தியா துவண்டிருக்கும் போது, திலீபன் அவர்கள் முன் வந்து நிற்பான்.

அமெரிக்காவின் போர்க்குற்ற கோஷத்துக்கு நாம் துணைபோய்க் கொண்டிருக்கிறோம். அமெரிக்கா விரும்பும் ஆட்சி மாற்றத்தின் பின் என்ன நடக்கும் ரணில் ஆட்சிக்கு வந்தால், ரணில் பிரதமராக இருந்தபோது பேச்சுவார்த்தையில் காலத்தை இழுதடித்ததுடன் தமிழர் வாழ்வையும் சீரழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார். கருணாவைப் புலிகளிடமிருந்து பிரித்து அழிவை ஏற்படுத்தியதை நாம் மறக்கக் கூடாது. சரத் ஆட்சிக்கு வந்தால் தமிழின அழிப்புச் செய்ததுடன் இராணுவ அதிகாரியாக இருக்கும் போதே சிங்களவர் மரம் போன்றவர், தமிழர் மரத்தில் படர்ந்திருக்கும் கொடி போன்றவர் என்று நாம் சிங்களத்தில் தங்கியிருக்க வேண்டியவர்களென்று உவமானத்துடன் சொன்னதில் தமிழர்கள் தன்னிடம் எதை எதிர்பார்க்கலாமென்று கோடி காட்டியிருக்கிறார். இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் பலியாகி எமக்குத் தந்த வாய்ப்பை நாம் தவறவிடக் கூடாது.

சிங்களத் தலைமைகள் தமிழர்க்கு எந்த ஒரு தீர்வையும் தரப்போவதில்லை. எமக்கு நிகழ்ந்தது போர்க்குற்றமல்ல. திட்டமிட்ட இனப்படுகொலை என்பதை நாம் பதிவு செய்தாக வேண்டும். கோபி சொன்னதுபோல அதை அமெரிக்கா ஏற்றுக் கொள்ளாது, இருந்தாலும் அது தான் உண்மை. பின்னாளில் அமெரிக்கா தோற்கும் போது, இப்போது நாம் பதிவு செய்பவை அவர்களை அறையும்.

ஏனெனில், ட்ரில்லியன்களை முடக்கிய சீனா இலகுவில் இலங்கையை விட்டுக் கொடுக்காது. அமெரிக்க நலன்களுக்கு நாம் துணை போவதில் சீனாவை எதிரியாக உருவாக்கி விடுவோம். சர்வதேச முறைகளில் எமது பிரச்சினைகளை மட்டும் நாம் வெளியிட்டு நின்றோமேயானால் எமது தனித்துவம் பேணப்படும்.

நெடுமாறன் ஐயாவின் தேசியத்தலைவர் பற்றிய புத்தக வெளியீட்டில் சொந்தப் பிரச்சினைகளையே தமிழ்த் தேசியம் பேசுவதற்காகத் தண்டிக்கும் இந்திய மண்ணில், எமது மதிப்பிற்கும், அன்பிற்குரிய காசி அண்ணன் அவர்கள் நடந்தது போர்க்குற்றமல்ல, இனப்படுகொலை என்று அறைந்து சொல்லி, முதுமையும், வறுமையும் நோயும் தனது இனஉணர்வை அழித்து விடாது என்று முதிய வேங்கையாக தனது உறுமலைப் பதிவு செய்திருக்கிறார். எமது இனத்திற்காகப் போராடும் எமது இனத்தில் தோன்றிய ஒருவரைப் பற்றி வேறெருவர் சொல்லி அறிய வேண்டிய இழிநிலையில் நாம். அதை லண்டனில் வெளியிட்டதாக மகிழ்ச்சியில் சிலர். மகிந்தர் லண்டனுக்கு வந்த அதே தினத்தில் வெளியிட்டதாக மூடிய அறையினுள் புளகாங்கிதம் வேறு. என்ன மனிதர்கள்.

சர்வதேச முறுகலில் இன்னொரு பங்காளியான இந்தியாவின் பங்குபற்றி சொல்லாமல் விட்டால் கட்டுரை நிறைவு பெறுகிறது. பேட்டைரவுடியாக இலங்கையில் சீனாவோ, அமெரிக்காவோ தலையிடக் கூடாதெனக் கருதும் இந்தியாவிடம் சந்திரிக்கா, சந்திரகாசன், பரந்தன் ராஜன் இருக்கிறார்கள். கட்டுரையை மீண்டும் வாசித்து இந்தியா என்ன செய்யுமென்பதை நீங்களே அனுமானித்துக் கொள்ளுங்கள். முடியாவிடின் பிறிதொரு ஒருபேப்பரில் இந்திய அணுகுமுறை பற்றி விபரித்துச் சந்திக்கிறேன்.

ஒரு பேப்பர் அரசியற் கட்டுரைகள் நிரம்பிய பத்திரிகையாக இருப்பதாக வாசகர்கள் அங்கலாக்கிறார்கள். உலகமே இனப்பிரச்சினையை தமது பலப்பரீட்சைக் களமாக தனது கவனங்களை குவியப்படுத்தி இருக்கும்போது, நேரடியாக பாதிக்கப்படும் நாம் எமது கவனங்களை நயன்தாராவின் அடுத்த காதலனைப் பற்றி அறிவதிலும், நித்திக்கு மாற்றீடான காவியார் என்பது பற்றி அறிவதிலும், எமது விடுமுறைக் காலத்தை திட்டமிடுவதிலும் கழிப்பது கேவலமாக இல்லை.

காசி அண்ணனின் அறிவுரையோடு கட்டுரையை முடிக்கிறேன்.

*பட்டினி கிடந்து பசியால் மெலிந்து*
*பாழ்பட நேர்ந்தாலும் என்றான்*
*கட்டுடல் வளைந்து கை கால் தளர்ந்து*
*கவலை மிகுந்தாலும் வாழ்வு*
*கெட்டு நடுத்தெருவோடு கிடந்து*
*கீழ் நிலையுற்றாலும் மன்னர்*






# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

| பிரித்தானியா: | கனடா: |
|---|---|
| Tel: 020 7043 4315 | Tel: 647-724-4188 |
| Fax: 020 7043 4312 | Fax: 416-438-7855 |

email: **info@orumanam.com**



## மணமகள் தேவை

1. 36வயது, 5'6" British citizen working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4213

2. 26வயது, 5'9" British citizen graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4179

3. 32 வயது, 5'3" working as a Taxi driver in Saudi arabia தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4207

4. 25வயது, 5'4" graduate student visa in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4206

5. 23 வயது, 5'5" Asylum seeker living in uk for the past 3 years தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4203

6. 29 வயது, 6'0" student visa in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4200

7. 28வயது, 5'6" British citizen working as a supervisor தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4195

8. 28 வயது, 5'6" Asylum seeker living in uk for the past 8 years தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4193

9. 30 வயது, 5'6" Engineer working in a company living in Uk in PSW visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4170

10. 26வயது, 5'9" PSW visa working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4066

11. 36 வயது, 5'5" divorced Permanent residence in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4030

12. 38 வயது, 6'1" British citizen well employed working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3620

13. 31 வயது, 5'5" Permanent residence working as a sales assistant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3696

14. 35 வயது, 5'7" Permanent residence graduate self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4172

15. 25 வயது, 5'9" Permanent residence software engineer in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4167

16. 29 வயது, 5'7" work permit visa in uk graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3975

17. 40 வயது, 5'7" doctor in Russia தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4158

18. 39வயது, 6'1" British citizen working as a supervisor in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4140

19. 30வயது, 5'8" graduate student visa in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4139

20. 30வயது, 5'6" graduate student visa in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3331

21. 31 வயது, 6'1" PSW visa graduate, working in a Food court தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4130

22. 29 வயது, 5'4" Student Visa graduate working in a Supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4128

23. 24 வயது, 5'7" in India working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4126

24. 30வயது, 5'10" Student visa working in an IT company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4115

25. 32வயது, 6'0" British citizen working in an IT company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4113

26. 28 வயது, 6'0" British Citizen working in a medical field தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4111

27. 36 வயது, 5'6" British citizen working as a Building contractor தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4109

28. 31 வயது, 5'8" PSW visa graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4103

29. 30 வயது, 5'7" permanent residence Engineer working as a technician தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4098

30. 29 வயது, 5'1" permanent residence working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4097

31. 32 வயது, 5'7" Canadian citizen software engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4094

32. 32 வயது, 5'7" Canadian citizen Engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4090

33. 31 வயது, 5'6" British citizen graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4081

34. 37 வயது, 5'6" British citizen accountant working in a bank as a finance analyst தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4077

35. 24 வயது, 5'6" work permit visa Engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4076

36. 40 வயது, 5'8" permanent residence working as a civil engineer, divorced தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4075

37. 28 வயது, 5'4" working in a Saudi arabia தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4073

38. 42 வயது, 5'10" british citizen Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3965

39. 46 வயது, 5'6" in Swiss with 1 year temporary visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 900

40. 32 வயது, 5'7" British citizen living in uk from childhood well employed civil engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4071

41. 33 வயது, 5'2" working in srilanka தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4067

42. 31 வயது, 5'4", HSMP visa, graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4063

43. 30 வயது, 5'4", living in uk with 5 years permanent visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4062

44. 35வயது, 6'1", student visa, working in Tesco தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4061

45. 30 வயது, 5'10", Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4059

46. 32 வயது, 5'7", graduate asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4057

47. 38 வயது, 5'7" accountant, living in Qatar, divorced தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4053

48. 51 வயது, 5'5", british citizen, divorced, working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4041

49. 33 வயது, 5'11", work permit visa, graduate, working for a leading uk based company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4038

50. 31 வயது, 5'5", Permanent residence working as a sales assistant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3696

51. 35 வயது, 5'7", british citizen working in Tesco தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3991

## மணமகன் தேவை

1. 33 வயது, 5'3" Indian origin British citizen working in a finance sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4211

2. 36வயது, 5'3" divorce British citizen Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4189

3. 30 வயது, 5'1" Graduate in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4209

4. 28 வயது, 5'4" Asylum seeker in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4205

5. 39வயது, 5'4" divorcee British citizen IT professionals தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4194

6. 39 வயது, 5'0" Asylum seeker in france divorce தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4196

7. 27வயது, 5'3" British citizen working as a Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3935

8. 29 வயது, 5'2" British citizen working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1348

9. 31 வயது, 5'3" living in Switzerland as an asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4189

10. 31 வயது, 5'3" living in Switzerland as an asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4189

11. 31 வயது, 5'3" living in Switzerland as an asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4189

12. 31 வயது, 5'3" living in Switzerland as an asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4189

13. 31 வயது, 5'3" living in Switzerland as an asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4189

14. 31 வயது, 5'3" living in Switzerland as an asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4189

15. 31 வயது, 5'3" living in Switzerland as an asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4189

16. 22 வயது, 5'4" Permanent residence in uk graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4183

17. 27 வயது, 5'4" student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4182

18. 23 வயது, 5'3" France citizen graduate working in uk in bank தகுந்த மணமகனைதேடுகின்றனர் Ref: 4161

19. 36 வயது, 5'4" British citizen working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4150

20. 21 வயது, 5'0" British citizen graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4142

21. 29வயது, 5'6" work permit visa graduate தகுந்த மணமகனைதேடுகின்றனர் Ref: 4133

22. 24வயது, 5'2" Student visa graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4125

23. 37 வயது, 5'3" Germany Citizen working as a Graphic designer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4132

24. 29 வயது, 5'7" residing in Srilanka graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4119

25. 27 வயது, 5'1" residing in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4118

26. 23 வயது, 5'0" student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4112

27. 22 வயது, 5'3" student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4100

28. 26 வயது, 5'4" permanent residence in uk working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4096

29. 27 வயது, 5'3" Canadian citizen doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 4093

30. 41 வயது, 5'3" British citizen graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4091

31. 42 வயது, 5'2" student visa graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 899

32. 27 வயது, 5'0" graduate working in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4068

33. 41 வயது, 5'2" British citizen working as a Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3362

34. 39 வயது, 5'3" widow with 6 years old son in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4031

35. 29 வயது, 5'4" French citizen working in a company in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3981

36. 30 வயது, 5'5" British citizen working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3316

37. 35 வயது, 5'6" working as a accountant in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 826

38. 24 வயது, 5'7", Born and brought up in Switzerland, Working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3933

39. 29வயது, 5'4", இலங்கை, பட்டதாரி, ICMA qualified, Working as an Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 240

40. 29 வயது, 5'2", பிரித்தானிய பிரஜாவுரிமை, பட்டதாரி, working in finance sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref:3382

41. 49வயது, 5'4", Living in UK for 2 years, பட்டதாரி, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 656

42. 39 வயது, 5'3", Born and brought up in UK, Scientist, working in Medical sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3986

43. 28 வயது, 5'2", இலங்கை, பட்டதாரி, Lecturer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref:3996

44. 38 வயது, 5'8", USA citizen, Practicing Lawyer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3997

45. 39 வயது, 5'4", பிரித்தானிய பிரஜாவுரிமை, பட்டதாரி, Working in pharmaceutical sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3999

46. 24 வயது, 5'2", இலங்கை, பட்டதாரி, Lecturer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref:3942

47. 22 வயது, 4'10", இலங்கை, Student தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3513

48. 30 வயது, 5'2", பிரித்தானிய பிரஜாவுரிமை, பட்டதாரி, working in administrative service தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1160

49. 38 வயது, 5'3", UK born, MSc பட்டதாரி, ஊடக நிறுவனமொன்றில் பணிபுரிபவர் தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 895

50. 40 வயது, 5'4", Work permit in UK, Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref:1232

51. 29 வயது, 5'2", Student visa in UK பட்டதாரி, studying MSc Bio Med தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3934

52. 23வயது, 5'3", Swiss citizen, Studying Batchelor degree தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3743

53. 30 வயது, 5'7", பிரித்தானிய பிரஜாவுரிமை, Completed Masters degree in Medicine, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 722

54. 25 வயது, 5'2", Born and brought up in UK, Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3966

55. 35 வயது, 5'4", Born and brought up in UK, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3967

56. 30 வயது, 5'7", French citizen living in UK பட்டதாரி, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3976

57. 33 வயது, 5'8", பிரித்தானிய பிரஜாவுரிமை, divorced, பட்டதாரி working as a Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3508

58. 34வயது, 5'8", Workpermit visa, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3889

59. 38 வயது, 5'5", பிரித்தானிய பிரஜாவுரிமை, Part qualified ACCA, working as an assistant accountant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 2660

60. 29 வயது, 5'1", பிரித்தானிய பிரஜாவுரிமை, பட்டதாரி, working in administrative service தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1378

61. 25 வயது, 5'3", BSc degree in Mathematics and Statistic, living in uk for the past 10 waiting for a permanent visa தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1243

இணையத்தில் மேலதிக விபரங்கள்

www.orumanam.com

# ஐரோப்பாவினுள் 13 நாட்கள் 5,000 மைல்கள்!!




**சி.மாசிலாமணி**
*(ஒரு பேப்பருக்காக)*

*இது ஒரு பிரயாணக் கட்டுரை இல்லை. ஆனால் நாடுகளை அடையாளம் காட்டும்.*

இந்த மாதம் ஒரு வியாழக்கிழமை காலை, வாடகைக்கு எடுத்த ஒரு வாகனத்தை நாமே ஓட்டிக்கொண்டு கிழக்கு ஐரோப்பிய நாடுகள் நோக்கிய எமது பயணம் தொடங்கியது. சாதாரணமாக கிழக்கு ஐரோப்பிய நாடுகள் என்னும் போது சோவியத் குடியரசுகள் ஒன்றியத்தின் ஒரு உப பிரிவாக இணைந்து இயங்கிய நாடுகளையே குறிக்கும். இன்று நிலை முற்றிலும் மாறியதால், கிரேக்கம், துருக்கியின் ஐரோப்பியப் பகுதி ஆகியவற்றையும் கிழக்கு ஐரோப்பாவிற்குள் அடக்கலாம். அதனால் எமது பிரயாண நிகழ்ச்சி நிரலில் ஏதன்ஸ் நகரமும் ஸ்ரன்புல் நகரமும் அடங்கி இருந்தன.

யூரோஸ்ரார் தொடரூந்து எமது வாகனத்தை காலை ஏழரை மணிக்கு பிரான்சின் எல்லையான கலையில் விட்டது. அங்கிருந்து தொடங்கி, பயணத்தின் சிறு பகுதியை பிரான்ஸ், பெல்ஜியம், ஒல்லாந்து ஊடாகவும், மிகுதியான பெரும்பகுதியை ஜெர்மனி ஊடாகவும் ஓடி ஒஸ்ரியாவை அடைந்தோம். இரவு நேர ஓட்டத்தைத் தவிர்ப்பதற்காகவும் ஒஸ்ரியாவின் வெல்ஸ் என்னும் நகரத்தை நெருங்கும்போது பயணம் ஆயிரம் மைல்களை நெருங்கியதால் ஏற்பட்ட களைப்புக் காரணமாகவும் வியாழக் கிழமை இரவை அந்த நகரத்திலேயே கழித்தோம்.

வெள்ளி காலையில் ஒஸ்ரியாவிலிருந்து புறப்பட்ட நாங்கள் முதலில் வரும் கிழக்கு ஐரோப்பிய நாடான சிலோவெனியாவுள் நுழைவதைத் தவிர்த்து கொரேசியா தலைநகர் சக்கிரெப்பை அடைந்தோம். இன்னும் அதிக மைல்கள் செல்லக் கூடிய நேரம் அன்று இருந்தும் நாம் முன்கூட்டியே சக்கிரப்பில் தங்கு வசதி ஒழுங்குகள் பதிவு செய்திருந்த காரணத்தால் அங்கேயே தங்கினோம்.

சனி காலை பொஸ்னியாவுள் நுழையாது சேர்பியாவின் பெல்கிரேட் நோக்கிச் சென்றோம். கொசோவாச் சண்டையின்போது தகர்க்கப் பட்ட பாலத்தின் மேலாகச் செல்லும் போது, பேரினவாதி மிலோசோவிக்கிற்கு ஏற்பட்ட கதி மற்றைய பேரினவாதிகளுக்கும் ஏற்படாதா என்ற நப்பாசை ஏற்பட்டது.

அந்தப் பாரிய நகரத்தைப் பார்க்கும்போது முதல்நாள் இரவு இங்கு வந்தல்லவோ நாங்கள் தங்கி இருந்திருக்க வேண்டும் என்ற சபலம் கூட ஏற்பட்டது. எமது பயணத்தின் இரு மணி வரையான நேரம் பெல்கிரேட் நோக்கிய போக்குவரத்து நெரிசலினால் எம்மிடமிருந்து பறிக்கப் பட்டது. பெல்கி ரேட்டிலிருந்து கொசோவாவை தவிர்த்து அலெக்ஸ்சான்டரின் நாடான மசடோனியா எல்லைக்குச் சென்றோம். அங்கு ஐரோப்பிய ஒன்றியத்தித்தின் வாகன இன்சூரன்ஸ் செல்லாததால் அவர்கள் நாட்டு இன்சூரன்ஸ் எடுத்து உள் நுழைந்தோம்.

மயக்கம் தரும் அதி காலையில் நாம் கிரேக்கத்தின் எல்லையில். பாதையின் இரு மருங்கும் கண்கவர் இயற்கைக் காட்சிகள். இதமான உணர்வுகளுடன் உலகின் அறிவியலுக்கே வழிகாட்டிய மேதைகளின் பூர்வீக நகர் ஏதன்ஸ்சை அடைந்தோம். இலண்டனிலிருந்து 2,000 மைல் பிரயாணம் செய்துதான் ஞாயிறு காலை அங்கு சென்றோம். பழம் பெருமை கொண்ட நகரில் மூன்று நாட்கள் தங்கினோம். இது பிரயாணக் கட்டுரை இல்லை என்பதால் தங்கிய மூன்று நாட்கள் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. ஆனாலும் கிரேக்கத்தின் அழகிய தீவுகளில் ஒன்றிற்குக்கூட செல்ல முடியவில்லை என்ற மனக் குறையையும் ஆகஸ்ட் மாதத்தில் அங்கு 40 பாகை சென்ரிகிறேட் வரை உயரும் கொடிய வெயிலையும் நினைவூட்டாவிடில் அது தவறு.

புதன் காலை துருக்கியின் இஸ்ரன்புல் நகரம் எமது இலக்கானது. தங்கு வசதியும் பதிவு செய்து எல்லையில் விசாவும் பெற்றோம். எல்லையில் அவர்கள் இங்கிதத்துடன் நடந்தார்கள் என்று சொல்வதற்கு இல்லை. வாகனப் புத்தக ஆவணத்தின் அகல் கேட்டார்கள். வாடை வாகனத்திற்கு எப்படி அகல் காட்டுவது? இருமணி நேரமாக எங்களை வாகனச் சோதனை அது இது என்று தாமதப்படச் செய்துவிட்டுத் திருப்பி அனுப்பினார்கள். நாங்கள் இரவிரவாகப் பயணம் செய்து பல்கேரியா சென்றோம். தலைநகர் சோபியாவிற்கு அண்மையாக தங்கு வசதியும் வியாழன் காலை கிடைத்தது. ஒரு ஏக்கருக்கு அதிகமான பரப்பில் அமைந்த அந்த தங்கு வசதியைப் பழமுதிர் சோலை என்றே சொல்லலாம். உதிர்ந்த பழங்களையும் பழுத்த பழங்களையும் கண்டு மகிழ்ந்தோம்.

மறுநாள் வெள்ளிக்கிழமைக் காலை அந்த மரங்களையும் அந்த சூழலையும் விட்டு விருப்பமின்றி ரூமேனியா நோக்கி எமது பயணம் தொடர்ந்தது. ரூமேனியத் தலைநகர் புச்சாறெஸ்ட்ரின் பாரிய அங்காடிக் கட்டடம் எம்மை பிரமிக்க வைத்ததுடன் அவ்வளவு அதிக கடைகள் கொண்ட ஒரு அங்காடி இலண்டனில் இல்லை என்று குறைபட்டோம் அல்லது பொறாமைப்பட்டோம்.

சனி காலை புறப்பட்ட நாங்கள் இரவு ஹங்கேரியின் தலைநகர் புடபெஸ்ரில் தங்கி காலையில் அந்நகரின் அழகு கண்டு வியந்தோம். தேம்ஸ் அழகா அங்கிருந்த டியன் நதி அழகா என்று தடுமாறினோம். நதிக்கு அண்மையில் ஒரு மலையும் நதிக்கு நடுவில் ஒரு தீவும் நகரின் அழகை மேலும் சிறப்பித்தன.

புடபெஸ்ட்ரில் நாம் கழிக்க இருந்த நேரத்திலும் மும்மடங்கு நேரம் செலவிட்டோம். மலையிலும் ஏறினோம். அந்த மலை அழகா அதிலிருந்த சிலை அழகா என்று வியந்தோம். இரவு சிலோவக்கியாவின் தலைநகர் பிறேற்றிஸ்லாவாவில் தங்கினோம்.

திங்கள் காலை சிலோவக்கியாவின் தலைநகர் பிறேற்றிஸ்லாவாவில் செலவழித்து பிற்பகலை ஒஸ்ரியாவின் தலைநகர் வியன்னாவின் உயரிய கட்டடங்களை வியந்து களிப்பதில் கழித்து அங்கிருந்து செக் குடியரசின் பிறேக் நகருக்கு இரவு 12 மணிக்குச் சென்று அங்கு தங்கினோம்.

செவ்வாய் இரவு 11.20 க்கு கலையில் இருந்து புறப்படும் யூரோஸ்ரார் தொடரூந்தில் எப்படியும் எம் வாகனத்தை ஏற்றியாக வேண்டும். 1500 மைல்கள் தூரம்வரை ஓடியாக வேண்டும். செவ்வாய் காலையில் எழுந்தவுடன் தூரத்தைப் பார்த்ததும் வாகனம் ஓட்டும் இருவருக்கும் இருதயம் கூடுதலாய் துடிக்க ஆரம்பித்து விட்டது. அப்படியிருந்தும் எமக்கு நகரின் அழகை மகிழ ஒரு மணிநேரம் தந்தார்கள். அவர்களுக்கு இருந்த ஒரே ஒரு நம்பிக்கை ஜெர்மனிய சாலைகளில் வேகக் கட்டுப்பாடு சற்றுத் தளர்தப்பட்ட நிலை உள்ளதுதான்.

வேகக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்ட நிலையை முழுமையாகப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருந்தோம். இரு ஓட்டுநர்கள் என்பதால் ஒருவர் சோர்வடைய மற்றவர் என்று ஒரே வேகச் சவாரிகள். மதியச் சாப்பாட்டிற்குக் கூட சில நிமிடங்கள் மட்டுமே செலவிட்டோம். மறக்க முடியாத வேகப் பயணம் அது. அப்படியிருந்தும் 10.50க்கு யூரோஸ்ரர் தொடரூந்து நிலையம் அடைய வேண்டிய நாங்கள் 11.05க்குத் தான் அங்கு சென்றோம். எங்கள் நல்லவேளை அன்று தொடரூந்தின் புறப்படும் நேரத்தை அரை மணி பின் தள்ளியிருந்தனர். நாங்கள் திருப்திப் பெருமூச்சு விட்டபடி அனாவசிய தாமதத்திலிருந்து தப்பினோம் என்ற நினைவுடன் வீடு நோக்கிய எமது இறுதிப் பயணத்தை முடித்தோம்.

வாகனத்தின் தூரம் காட்டி 5000 மைல்களுக்கு 50 மைல்கள் மட்டுமே குறைவதைக் காட்டியது.

சர்வம் சிவமயம் ஜகத்



இலண்டன் திருவருள் மிகுஸ்ரீசிவன் திருக்கோயில்
மஹோற்சவ விழா விஞ்ஞாபனம்

23.08.2012 வியாழன்
பிள்ளையார் திருவிழா

24.08.2012 வெள்ளி
கொடியேற்றம்

09.09.2012 ஞாயிற்றுக்கிழமை
தேர்த் திருவிழா

10.09.2012 திங்கட்கிழமை
தீர்த்தோற்சவம்

சிவனடியார்களே!
சகல புவனங்களையும் பஞ்சகிர்த்தியங்கள் மூலம் அருளாட்சி புரிந்துகொண்டிருக்கும் அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகரான சிவபெருமான் சகல வளங்களும் நிரம்பப் பெற்ற இங்கிலாந்து தேசத்திலே சைவமும் தமிழும் வளர்ச்சி பெற்று திருமகளின் திருவருட் பார்வையுடன் சிறப்பாக விளங்கும் லூயிஷம் பகுதியில் சிவபுரம் என்னும் தமிழ் நாமமுடைய புண்ணிய ஷேத்திரமாகிய சிவராஜதானியில் ஸ்ரீஅபீதகுஜாம்பாள் சமேத ஸ்ரீஅருணாசலேஸ்வரப் பெருமான் கருங்கல்க்கோயில் கொண்டருளி வீற்றிருந்து ஆன்மாக்களைக் காப்பாற்றி வருகிறார்.
அவ்வாறான பரம்பொருளாகிய இறைவனது வருடாந்த பிரம்மோற்சவம் என்னும் மஹோற்சவ விழாவானது இவ்வருடம் இரண்டாவது ஆண்டுப் பெருவிழாவாக நடைபெறுவதற்கு இறைவனது பேரருள் கைகூடியுள்ளது. நிகழும் சர்வமங்களகரமான நந்தனவருஷம் தஷிணாயணம், வர்ஷமருது ஆவணி மாதம் 9ம் நாள் (24.08.2012) வெள்ளிக்கிழமை துவஜாரோகணம் என்னும் கொடியேற்று விழாவுடன் ஆரம்பமாகி ஆவணி 26ம்நாள் (10.09.2012) திங்கட்கிழமை தீர்த்தோற்சவத்துடன் பூரணத்துவம் பெறவுள்ளது.
எனவே அடியார்கள் யாவரும் ஆசார சீலர்களாக ஆலயம் வந்து இவ்விழாவிலும் இதற்கு முன்பின் நிகழவிருக்கும் அனைத்துப் பூஜாகைங்கர்யங்களையும் தரிசித்து எம்பிரான் ஸ்ரீஅருணாசலேஸ்வரப் பெருமானது பரிபூரணமாக கிருபையோடு பெருவாழ்வு வாழ்வீர்களாக!

LONDON SIVAN KOVIL TRUST
4a, Clarendon Rise, Lewisham, London SE13 5ES Tel: 020 8318 9844 Fax: 020 8318 2108
www.londonsivankovil.org.uk, Email: sivan.kovil@yahoo.co.uk - Charity Reg: 1051516



# குதூகல கொலிவுட்டும் குலை நடுங்கும் ஹாலிவுட்டும்..!

'சுவாமி ரெண்டு மூணு வாரத்துக்கு முந்தி கமல் ஹாசன், அடுத்ததா ஹாலிவுட் படத்தை இயக்கப்போறேன்னு அறிவிச்சப்பவே எங்கள்ல பாதிப்பேருக்கு கைகால்லாம் வெடவெடன்னு நடுங்க ஆரம்பிச்சிருச்சி. இப்ப என்னடான்னா பாரதிராஜாவும் இங்கதான் வந்து படமெடுக்கப்போறேன்னு எங்கள படபடப்புக்குள்ளாக்குறாங்க. இன்னொருத்தரு பேரு என்னவோ டங்கர் பச்சானோ, டங்குவாரு அத்தானோ அவரும் இங்கதான் கிளம்பி வர்ற மூட்ல புதுசா டவுசருல்லாம் வாங்கி அடுக்குறாராம். இதுக்கு ஏதாவது பரிகாரம் இருந்தா நீங்கதான் சொல்லனும்'

அமெரிக்க நேரம் அதிகாலை ஐந்து மணி. அந்த ஹாலிவுட் சாமியார் அரைபோதையில் கண்ணைத்திறந்தபோது, ஹாலிவுட்டின் முன்னணி இயக்குனர்களான ஜேம்ஸ் கேமரூன், ஸ்டீபன் ஸ்பீல்பெர்க், டிம் மார்ட்டின், கிறிஸ்டபர் நோலன், டேவிட் பிஞ்சர், ஜார்ஜ் லூகாஸ், மார்ட்டின் ஸ்கார்சிஸ், ரைட்லி ஸ்காட், ஜோயல் சியான், டேன்னி பாயல், டாம் ஹாங்ஸ், மெல் கிப்சன், என்று ஒரு பெரும்பட்டாளமே கண்களில் மரண பயத்தை காட்டியபடி நின்றுகொண்டிருந்தார்கள்!

'ஆஹா என்னைக்குமே இந்தப்பக்கம் எட்டிப்பாக்காத பயலுக எல்லாம் ஒண்ணுகூடி வந்திருக்கீங்கன்னா மேட்டர் கொஞ்சம் சீரியஸாதான் இருக்கும்,?? மார்ட்டின் மச்சான் ஒரு குவார்ட்டர் சொல்லு. மத்தவங்க எல்லாம் மனசுல ஏசு நாதரை வேண்டிக்கிட்டு மண்டிபோட்டு உக்காருங்க', என்றபடி ஹாலிவுட்டின் சினிமா ஜாதகத்தை வாங்கிப் புரட்ட ஆரம்பித்தார் அந்த குவார்ட்டரோ டி பீரோ என்ற சாமியார்...

'பொதுவாவே உங்க ஹாலிவுட் சினிமாவ ஏழரை நாட்டு அஷ்டமச்சனி புடிச்சி ஆட்ட ஆரம்பிச்சிருச்சின்னுதான் சொல்லனும். ஏன்னா வர்றவங்க அவ்வளவு சாதாரண ஆளுங்க கிடையாது.

ஒருத்தரு சப்பாணியா இருந்து சண்டியரா மாறுனவரு. இன்னொருத்தரு நல்ல வலுவான சண்டியரா இருந்து இப்ப சப்பாணியானவரு. மூனாவதா சொன்னீங்களே ஒரு இது. அது ஒரு பத்து பலாப்பழத்தை உரிக்காம அப்பிடியே முழுங்கிட்டு 'அய்யோ தமிழனா பொறந்த ஒரே காரணத்துக்காக நான் பட்டினியா கிடக்கனுமா' ன்னு வெட்டி ஞாயம் பேசும்.

சனி பகவான் இரண்டரை வருஷத்துக்கு ஒரு முறை ஒரு ராசியில் இருந்து மற்றொரு ராசிக்கு பெயர்ச்சி அடைவார். வாக்கிய ரீதியாக அவர் கன்னி ராசியில் இருந்து துலா ராசிக்கு பெயர்ச்சியடைந்த நேரத்துலதான் கமலுக்கு ஹாலிவுட்ல படம் எடுக்கனும்ங்கிற ஆசை வந்துருக்கு. கமலோட பார்வை, நீச்ச வீடான மேஷம் மீது விழுகுது. உச்சம் பெற்ற கிரகம், அதாவது நம்ம கமல், நீச்ச வீட்டை பார்க்கும்போது, அதாவது நம்ம ஹாலிவுட்டைப் பார்க்கும்போது, நீச்சவீடு நாசமாப்போகும் என்பது ஜோதிட விதி'.

'சுவாமிகள் அதுக்குதான உங்கள தேடி வந்துருக்கோம்.எங்களுக்கு பரிகாரம் சொல்றத விட்டுட்டு பரிகாசம் பண்றீங்களே?' 'மனசுக்குள்ள பிரார்த்தனை பண்ணிக்கிட்டு சைலண்டா இருங்க. யாரும் குறுக்க பேசப்படாது..' குவார்ட்டரை அப்படியே ராவாக குடித்து விட்டு, சைடிஷ்க்கு புறங்கையை சற்று நக்கியபடி தொடர்கிறார் சுவாமிகள்... 'கமல் மேட்டர்ல கூட அவ்வளவு ஆபத்து இருக்கிறமாதிரி தெரியலை. நம்ம ஊர்ல அத்தனை டி.வி.டி. கடைகளையும் ஆசிட் ஊத்தி கொளுத்தப்போறொம்னு சொன்னா, ப்ளைட் டிக்கட்டை கேன்சல் பண்ணிட்டு பின்வாசல் வழியா பின்லாந்துக்கு ஏதாவது ஒரு ஃபிகரையும் கதையையும் பிக் அப் பண்ணிக்கிட்டுப் போயிருவார். ஆனா இந்த பாரதிராஜா முடிவுல ஒரு விஸ்வரூப பயங்கரவாதம் தெரியுது. டங்கர் மச்சான் முடிவுல ஏதோ ஒரு டகால்ட்டி வேலை தெரியுது....

ரெண்டு மாசத்துக்கு முந்தி, தேனியில, 'அன்னக்கொடியும் கொடிவீரனும்' படப்பிடிப்பில இருந்தபோது சனி இவரை கொஞ்சம் உக்கிரமா தாக்குனதுல, நாம ஹாலிவுட்ல படம் பண்ணப்போறது அக்கிரமம்னு தெரிஞ்சும் இவ்வளவு வக்கிரமா மாறிட்டாரு...

ஒரு மாசத்துக்கு முந்தி நெய்வேலியில 'அம்மாவின் கைபேசி' படப்பிடிப்பில இருந் தப்போ, யாரோ டங்கரோட கடலைமுட்டாய் ஒண்ணை களவாடிட்டு போயிட்டாங்க. அந்தக்கவலை அவரோட கபாலம் வரைக்கும் போயி, 'என் கடலைமுட்டாயை களவாடிய தமிழனுக்கு இனிமே நான் படம் எடுக்கமாட்டேண்'ன்று முண்டாசு தட்டுறாராம்?

'சுவாமிகள் ஜாதக விவகாரம் போதும். பரிகாரம் என்ன பண்ணனும்னு சொன்னீங்கன்னா, பண்ணவேண்டியதை பண்ணீட்டு அடுத்த வேலையை பாக்கக் கிளம்பிடுவோம்...' பொறுமையிழந்து எழுகிறார் ஸ்டீபன் ஸ்பீல்பெர்க். ஸ்டீபனைத்தொடர்ந்து மற்றவர்களும் பொறுமை இழந்தவர்களாய் எழ ஆரம்பிக்க, இனி இவனுகளை வைத்துக்கொண்டு ஜல்லி அடிக்க முடியாது என்பதை புரிந்து கொள்கிறார் சுவாமிஜி.

'சரி இவ்வளவு நேரம் பொறுமையா இருந்துட்டீங்க. இப்ப நான் கடைசியா சொல்லப் போறதையும் கொஞ்சம் பொறுமையா கேளுங்க. இவங்க மூனுபேருமே ஹாலிவுட் வர்றதை தடுக்கிறதுக்கு, நான் தேடுன வரைக்கும் ஜாதக ரீதியா பரிகாரம் எதுவும் இல்லை. உங்கள்ல மூணுபேர் உடனடியா சென்னைக்கு கிளம்பிப்போய், நாங்க இனிமே தமிழ்ல தான் படம் இயக்கப்போறோம்னு பேட்டி குடுங்க. ஒரு வேளை உங்களுக்கு கைமேல பலன் கிடைக்கும்'.உடனே கிறிஸ்டபர் நோலன் இடைமறிக்கிறார்..... அது ஓ.கே. சாமி.ஆர்டிஸ்டுகளுக்கு என்ன பண்றது??

சுவாமிகளுக்கு கோபம் கொப்பளிக்கிறது... குண்டுச் சட்டிக்குள்ள குதிரை ஓட்டுறீங்களே... கோடம்பாக்கம் ஆர்ட்டிஸ்டுகளோட சொர்க்கம்டா. பூவர் ஸ்டார், பவர் ஸ்டார், எவர் ஸ்டார்? அவ்வளவு ஏன்? நம்ம ட்வின் டவர் ஸ்டார் வரைக்கும் அங்க குவிஞ்சி கிடக்குதடா... ஒரு வெரைட்டி டைரி எடு. மேனேஜர்கள விரட்டிப்புடி' என்று சாமியார் சொல்லிக் கொண்டிருக்கும்போதே சென்னை எண்ணைச் சுழற்ற ஆரம்பிக்கின்றனர்... ஹலோ திகில் முருகன் சாரா, நாங்கோ ஹாலிவுட் டைரக்டர்ஸ் டென் மெம்பர்ஸ் கமிங் டு யுவர் கோடம்பாக்கம். ப்ளீஸ் ஹெல்ப் அஸ் ப்ரதர்..!?.....

*- என்வழி இணையம்*

திரை விமர்சனம்

# Total Recall (2012)



1990 களில் Arnold Schwarzenegger நடிக்க, Paul Verhoeven Picture இயக்கி தாறுமாறாக ஓடிய படம்தான் Total Recall... 22 வருடத்துக்கு முன் தொழில் நுட்ப வசதிகள் அதிகம் இல்லாத காலத்திலேயே உலக ரசிகர்களை ஆச்சர்யபடுத்திய ஆக்ஷன் படம் இந்த திரைப்படம்..

தொழில் நுட்ப வசதிகள் சாத்தியப்பட்டு இருக்கும் இந்த காலத்தில் அதே பெயிரில் அந்த திரைப்படத்தை ரீமேக் செய்து இருக்கின்றார்கள்.. 1966 ஆம் ஆண்டு விஞ்ஞான புனைகதை எழுத்தாளர் பிலிப் கே.டிக் எழுதிய we can remember it for you holesale என்ற சிறுகதையின் திரைவடிவம்தான்... இந்த Total Recall திரைப்படம்..

Total Recall திரைப்படத்தின் கதை என்ன?

தன் நினைவு தப்பி வாழ்ந்து வரும் ஒரு உளவாளி தன் நினைவுகளை மீட்டு எடுப்பதே இந்த திரைப்படத்தின் கதை.

2084 ஆம் அண்டு மூன்றாம் உலகப்போர் முடிந்து மனிதர்கள் வாழவே முடியாத கிரகமாக நமது பூமி மாறிக்கிடக்கின்றது.. இரண்டே இடங்களில் தான் மனிதர்கள் வசிக்கின்றார்கள்.. ஒரு பகுதி மக்கள் வசிக்கும் இடத்தை United Federation of Britainஎன்றும் பூமியின் மறுபகுதியில் வசிக்கும் மக்கள் பகுதியை The Colony என்றும் அழைக்கின்றார்கள்.. United Federation of Britainக்கு வேலை செய்ய Colonyயில் இருந்து தினமும் தொழிளாளர்கள் சென்று வருகின்றார்கள்..

United Federation of Britainஇல் இருக்கும் தலைவன் Colonyயையும் அங்கு இருக்கும் மக்களை அழித்து விட்டு அந்த இடத்தில் புதிய நகரத்தை உருவாக்க நினைக்கின்றான்.. இதில் தன் பழைய நினைவுகளை இழந்து போன உளவாளி நாயகன் Doug (Colin Farrell) எப்படி காலனி மக்களை அழிவில் இருந்து மீட்கின்றான் என்பதே படத்தின் மீதிக்கதை..

பொதுவான Science fiction படங்களில் எல்லோராலும் அதிகம் ரசிக்கப்படும விஷயம் எதிர்கால உலகம் எப்படி இருக்கும் என்பதுதான்.?? 2084 இல் உலகம் எப்படி இருக்கும்? என்ன விதமான போக்குவரத்து மேம்பட்டு இருக்கும், மனிதர்களின் உடைகள் எப்படி இருக்கும்? மேம்பட்ட விஞ்ஞான வளர்ச்சி எப்படி இருக்கும்? என்பதாய் படம் பார்க்கும் போது சாதாரண பார்வையாளனுக்கு ஆர்வம் இருக்கும்.. அவைகளை ஒரளவுக்கு இந்த படத்தில் ரசிக்க வைத்து இருக்கின்றார்கள்...

ஆனால் முந்தைய படத்தில் செவ்வாய்க் கிரகத்தை பின்புலமாக வைத்து காட்சிகளை எடுத்து இருப்பார்கள்.. அதனால் அது புதுவித அனுபவத்தை கொடுத்தது... முக்கியமாக வித்யாச முகம் கொண்ட மனிதர்கள் என்று புது பின்புலத்தையும் புது அனுபவத்தையும் அந்த திரைப்படம் பெற்று தந்தது.. 1990 ஆம் ஆண்டு Arnold நடித்து வெளியான Total Recall திரைப்படத்தை பார்த்து ரசிக்காதவர்கள் இந்த திரைப்படத்தை பார்த்தால் நிச்சயம் புது அனுபவத்தை தரும்.. ஆனால் முந்தைய திரைப்படத்தை பார்த்தவர்கள் இந்த ரீமேக் திரைப் படத்தை பார்க்க நேர்ந்தால் ஏதோ ஒன்று இந்த திரைப்படத்தில் விடுபட்டதைப் போல தோன்றுவதை மறுக்க முடியாது...

பழைய படத்தை பார்த்தவர்களுக்கு இந்த படம் time pass படம்... அந்த படத்தை பார்க்காதவர்களுக்கு இந்த படம்.. பார்க்கவேண்டிய ஆக்ஷன் படம்...

*- நொந்தகுமாரன்*



# சினிமா




முடிவேகட்டிவிட்டார்கள்போலிருக்கிறது..!பணம் இருந்தால் நாம நினைப்பதையெல்லாம் படமாக்கி வெளியிட்டு விடலாம். நம் படத்தை எதிர்பார்த்து சோறு, தண்ணியில்லாமல் பல பேர் தவியாய் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பலருக்கும் நினைப்பு.. நட்டிகுமார், டாக்டர் ஜெய் என்ற இரட்டை இயக்குநர்கள் இப்படித்தான் யோசித்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

short memory loss அல்லது selective amnesia என்று இரு வகையில் சொல்லிக் கொள்ளலாம்.. அந்த நோய் வந்து தனது காதலியை மறந்தவன் திரும்பவும் எப்படி தனது காதலியை அடைகிறான் என்பதைத்தான் நமக்கே short memory loss ஏற்படும் அளவுக்கு மூளையை கிறங்கடித்து சொல்லி முடித்திருக்கிறார்கள்..

நாயகன் கணேஷ் வெங்கட்ராமன், டாக்டருக்கு படிக்கும் கல்பனாவை காதலிக்கிறார். கல்பனாவின் படிப்பு முடிவதற்குள்ளாகவே கணேசுக்கு அமெரிக்காவில் வேலை கிடைக்க ஒரு வருஷம்தானே போயிட்டு வா.. அதுக்குள்ள நான் படிப்பை முடிக்கிறேன் என்கிறாள் காதலி. காதலியின் தாதா அப்பாவோ தனது மகளை ஒரு வருடம் பார்க்காமல் இருக்க வேண்டும். அதன் பின்பும் இருவரும் காதலிப்பதாகச் சொன்னால் தான் திருமணம் செய்து வைப்பதாகச் சொல்கிறார். இதை நம்பி அமெரிக்கா செல்லும் ஹீரோவை அங்கேயே கொலை செய்யும் முயற்சி நடக்கிறது. இதில் சிக்கி தலையில் அடிபட்டு கடைசி 4 வருட நினைவுகளை இழக்கிறார் நாயகன். நாயகியையும் சேர்த்துதான்..!

இதன் பின்பு தனது அலுவலக கொலீக்குடன் தொடர்பு ஏற்பட்டு அந்த நட்பு படுக்கைவரையிலும் பாய்ந்தோடி சென்று கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் மலையாள கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் படத்தில் வருவதைப் போல சான்பிரான்சிஸ்கோ காட்டுக்குள் ஒரு நாள் இவர்கள் தங்கியிருக்கும்போது அங்கேயிருந்த பழங்குடி மக்கள் கொடுத்த ஒரு பானத்தைக் குடித்துத் தொலைகிறார் ஹீரோ. உடனேயே பழைய கதையெல்லாம் ஞாபகத்துக்கு வந்து விடுகிறது.. ஆனாலும் ஒரு நிலையாய் இல்லை என்பதால் மீண்டும் வைத்தியசாலை...., சிகிச்சை.. சிகிச்சை...

இடையில் திடீரென்று தனது காதலியை அமெரிக்காவிலேயே மருத்துவராகப் பார்த்து விடுகிறார். அறுந்து போன காதல் நூலை காதலியிடம் நீட்டிக் கொண்டிருக்க. அவளோ அதைப் பற்றிக் கொள்ளாமல் இருக்கிறார். இப்போது நாயகன் எப்படி அவளை கைப்பிடிக்கிறார் என்பதை தைரியம் இருந்தால் படத்தைப் பார்த்து தெரிந்து கொள்வீராக..!

கலகலப்பு, மிரட்டல் போன்ற படங்களில் லாஜிக் பார்க்க தேவையே இல்லை.. அது நகைச்சுவை.. ச்சும்மா டைம் பாஸ் என்று சொல்லித்தான் அழைக்கிறார்கள். ஆனால் இதில் அப்படியில்லையே..? முதல் காட்சியில் இருந்து கிளைமாக்ஸ்வரையிலும் ஓட்டையான திரைக் கதையை வைத்துக் கொண்டு முடிந்த அளவுக்கு எடுத்துத் தந்திருக்கிறார்கள் இயக்குநர்கள்..!

அமெரிக்காவில் இப்படி நட்ட நடு ரோட்டில் துப்பாக்கியுடன் எவனாவது ஓட முடியுமா..?ஓடியவன் அடுத்த நாள் வெளியில் இருக்க முடியுமா..? சான்பிரான்சிஸ்கோவில் பழங்குடியினரின் கதை.. ஹீரோவை கொலை செய்ய நடக்கும் முயற்சிகள்.. மருத்துவர் அருணின் 'தமிழா.. தமிழ் தெரியுமா..? தமிழ்ல பேசுறீங்க..?' என்ற கேணத்தமான கேள்வி..! நாயகன் அமெரிக்கா வந்து 2 வருசமாகியும் அவர் வீட்டுக்காரர்கள் கவலையே படலையா..? இறுதிக் காட்சிகளில் நாயகன் உருகுறதுல சாமி சத்தியமா ஒரு உருக்கமும் நமக்கு வரவேயில்லை..!? எந்தக் காட்சி இப்போது நடப்பது.. எது முன்பு நடந்தது..? என்று மாற்றி, மாற்றிக் காட்டியதில் இந்தப் படத்தைப் பார்க்கும் ரசிகன் என்ன ஆவானோ..? பாவம்....

இந்த டிஜிட்டல் யுகம் வந்தாலும் வந்தது.. ஆளாளுக்கு கேமிராவைத் தூக்கிட்டு நாங்களும் ரவுடிதான்னு கிளம்புறாங்க.. அமெரிக்கா போயி இவ்வளவு நல்லா காசு செலவு பண்றவங்க கதை, திரைக்கதைக்கு கொஞ்சம் மெனக்கெட்டு உள்ளூரில் உக்கார்ந்து பேசி கிளம்பினால்த் தான் என்ன..? படம் பார்க்குற நமக்கு பக், பக்குன்னு அடிக்குது.. தயாரிப்பாளர் பாவமாச்சே என்று..! ஆனாலும் தயாரிப்பு பெரிய ஆட்கள் தான்.. இதனால் சேதாரத்தைப் பற்றி அவர்கள் கவலைப்படப் போறதில்லை.. தமிழ், ஹிந்தில ஒரே நேரத்துல இதை எடுத்திருக்காங்கன்னா பார்த்துக்குங்களேன்..!

கணேஷின் நோய் தொடர்பான காட்சிக் குழப்பங்களை மட்டும் நேர்ப்படுத்தியிருந்தால், இடைவேளைக்கு முன்பிருந்தே படத்தை ரசித்திருக்க முடியும் என்று நினைக்கிறேன்...!

ம்ஹ?ம்.. வேற ஒண்ணும் சொல்வதற்கில்லை..!

*- உண்மைத்தமிழன்*

## சினித்துளி

### அடுத்ததும் சுட்டது தான்!!



`I am Sam' படத்தின் அப்பட்டமான தழுவல் தான் தெய்வ திருமகள். இப்பவும், 'அது என்னோட சொந்த சரக்கு' என்று சூடம் கொளுத்தி அந்த வெளிச்சத்தில் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார் டைரக்டர் விஜய். கண்ணுக்கு தெரிஞ்சே இப்படி நடந்திருக்கும் போது அவர் இயக்கிக் கொண்டிருக்கும் 'தாண்டவம்' மட்டும் ஒரிஜனல் சரக்காகவா இருக்கும்? சந்தேகக் கண்ணோடு நோக்கும் லட்சோப லட்சம் கண்கள், எந்த டி.வி.டியிலிருந்து சுடப்பட்டது என்று அலசிக் கொண்டிருக்கிறது.

இதற்கெல்லாம் விடையாக மெல்ல ஒரு முணுமுணுப்பு கேட்க ஆரம்பித்திருக்கிறது இயக்குனர் ராதாமோகனிடம் உதவி இயக்குனராக இருந்த ஒருவரின் கதை தானாம் அது. கொஞ்சம் லேட்டாக தான் ஏமாற்றப்பட்டதை அறிந்திருக்கும் அவர் அது குறித்து வழக்குத் தொடுக்க இருக்கிறாராம்.

### கேடி பில்லா கில்லாடி ரங்கா !



'பசங்க', 'வம்சம்', 'மெரினா' என வித்தியாசமான படைப்புகளை கொடுத்தவர் பாண்டிராஜ். தற்போது புதிய படமொன்றை இயக்க தொடங்கி இருக்கிறார். விமல், சிவ கார்த்திகேயன் இருவரும் இணைந்து இப்படத்தில் நடிக்க இருக்கிறார்கள். இருவருமே ஏற்கனவே பாண்டிராஜ் இயக்கத்தில் நடித்து இருக்கிறார்கள். படத்திற்கு 'கேடி பில்லா கில்லாடி ரங்கா' என்று தலைப்பிட்டு இருக்கிறார். முழுக்க முழுக்க நகைச்சுவைக்கு முக்கியத்துவம் அளிக்கும் படமாக இது இருக்குமாம்.

### புரியாணிக்குப் பின் அழகுராஜா!



'சிவா மனசுல சக்தி', 'பாஸ் (எ) பாஸ்கரன்', 'ஒரு கல் ஒரு கண்ணாடி' வெற்றி அடித்த இயக்குனர் ராஜேஷ் அடுத்து இப்போது கார்த்தியை இயக்க இருக்கிறார். படத்திற்கு 'அழகுராஜா ஆல் இன் ஆல்' என்று தலைப்பிட்டு இருக்கிறார்கள். நாயகியாக காஜல் அகர்வால் முந்தைய படங்களைப் போலவே நாயகனின் நண்பனாக சந்தானம் கலாய்க்க இருக்கிறார். 'அலெக்ஸ் பாண்டியன்' படத்தினை முடித்து விட்டு 'பிரியாணி' படத்தில் நடிக்க இருப்பதால் 'அழகுராஜா' விரைவில் தொடங்கும்.

### தலைவன்!!



தாண்டவம் படத்தின் இறுதிக்கட்ட வேலைகளில் இருக்கும் இயக்குனர் விஜய் தனது அடுத்த படத்தமான தலைவன் படத்திற்காக தயாராகி வருகின்றார். இயக்குனர் ஏ.எல். விஜய் தலைவன் என்ற படத்தில் விஜயுடன் இணையவுள்ளார். தலைவனால் விஜய் ரசிகர்களுக்கு சந்தோசம் என்றாலும் கௌதம் மேனனின் இயக்கத்தில் உருவாகவிருந்த யோகன் அத்தியாயம் ஒன்றிற்கு என்ன நடந்தது? அது கிட்டத்தட்ட கைவிடப்பட்டதாகவே தகவல்.....

கௌதம் மேனன், நீதானே என்பொன்வசந்தம் படத்தினை முடிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார் இதனால் யோகன் படத்தின் முழுக் கதையும் இன்னும் தயாராகவில்லையாம். ஆனால் சிங்கம்-2 படத்தினை தொடர்ந்து சூர்யாவுடன் இணையவுள்ள துப்பறியும் ஆனந்த் படத்திற்கான கதை வசனம் என எல்லாம் ஏற்கனவே தயாராகிவிட்டதாம். இதனால் விசனமடைந்த இளைய தலைவலி! படமே தேவையில்லை என்று அறிக்கையை விட நேரம் பார்த்துக் காத்திருக்கிறாராம்...

Discover the world with....
SERENDIB LANKA Travels
Serendib Lanka Travels Ltd

COLOMBO SPECIAL
Emirates........£485 Jet Airways........£490
Gulf..............£500 Qatar.................£570
Kuwait.........£450 Etihad...............£587

SRILANKAN SPECIAL
Colombo.......£545 Chennai.............£500
Tirchi............£500 Kualalumpur......£590
Singapore.....£590

INDIA SPECIAL
Chennai.....£460 Chennai......£580
(Direct on British Airways)
Tirchi.........................................£500

CANADA SPECIAL
Toronto.....£510 Montreal......£545
Ottawa.........................................£590

WORLD WIDE SPECIAL
Sydney........................£795
Melbourne....................£680
Oslo.............................£155
Zurich...........................£135
Geneva.........................£125
New York......................£410
Washington DC.............£420

பாடசாலை விடுமுறையின் போது இலங்கை செல்வோருக்கு விசேட சலுகைகள்

Oman Air : £740.00 Emirates : £797.00 (21 July - 07 Sep) | Srilankan : £810.00 (06 Aug -27 Aug) | Emirates : £527.00 (04 July - 10 Sep)

All fares mentioned are low seasons including taxes

இலங்கை, இந்தியா, கனடா மற்றும் அனைத்து உலக விமான பயணத்தையும் குறைந்த செலவில் மேற்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.




LEWISHAM : 020 8318 7775 Mob : 07983437835
15 Marischal Road, Lewisham, London SE13 5LE
(லூசியம் சிவன் கோயிலுக்கு அண்மையில்)
E.Mail : info@serendib-lanka.co.uk
9667 ATOL PROTECTED
IATA

பிரித்தானிய பிராஜாவுரிமை பெறுவதற்கான சான்றிதழ்

- ESOL with Citizenship course: Pass guaranteed
- ஆங்கில எழுத்து, வாசிப்பு அறிவு அவசியம் இல்லை
- Certificates within 6 days / 6 நாட்களில் சான்றிதழ்
- for British Citizenship / பிரித்தானியா பிராஜாவுரிமை
- for Permanent Residency / நிரந்தர வதிவிடவுரிமை
- Personal Licence (மதுபானம் விற்பதற்கான) ID எடுத்துத் தரப்படும் - £225*




Citizenship Test From £180*

தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
* Croydon * Eastham * Harrow
Tel: 020 3239 2187
0740 287 1921

# Lycamobile

Call the world for less

# Sri Lanka

Monthly value pack

# 4p /min

## Landline & Mobile

**Get 500 minutes to Sri Lanka Landline & Mobile for just a one off £20 with Monthly value pack**

To buy 'the 500 minutes monthly value pack' **DIAL *139*200500#**

**Get up to £15 FREE* CREDIT when you bring your existing mobile number to Lycamobile**

Rates are calculated based on full usage of minutes to Sri Lanka during the validity period and subscription to the monthly Value Pack

**For your FREE Lycamobile SIM visit www.lycamobile.co.uk or call 020 7132 0322**

Buy and top up online or in over 115,000 stores

Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears

* This promotion gives up to £15 free mobile top-up credit when you bring your mobile phone number from a different UK mobile phone network to Lycamobile UK between 01/06/2012 and 31/08/2012. Free credit is given when the customer number is ported and live on Lycamobile UK and the first top-up is made. The amount of free credit given is dependent on the value of the first top-up: If the first top-up is up to £10, £5 free credit is awarded; if the first top-up is £20, £10 free credit is awarded; and if the first top-up is £30+, £15 free credit is awarded. Customers can bring their mobile phone number from any UK network apart from GT Mobile, toggle Mobile or Lycamobile. By taking part in the Promotion customers will be deemed to have accepted and agree to be bound by these terms and conditions. The benefits given in this Promotion cannot be transferred. The Monthly Value Pack costs £20 and gives 250 or 500 or 1000 minutes to calls selected International Landline or mobile destinations and it is valid for 30 days from the day activated. You may only have one type of value pack active during the appropriate subscription period. Once the value pack been activated a one-off payment, taken from the customers' top-up credit balance. This Promotion is valid from 02/05/2012 to 31/08/2012, See the leaflet overleaf for more details or visit www.lycamobile.co.uk or call customer service on 0207 132 0322 for more information and participating counties. This offer cannot be used in conjunction with existing Lyca bundle offer.

Lyca mobile

Call the world for less

# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
**Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
**சவுத்ஹோல் டிராவல்**
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற்ற ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

5553 ATOL PROTECTED